Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu LegislativeAssembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு: 15-6-2019 Issued: 15-6-2019

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

**சனிக்கிழமை, ஜனவரி 5, 2019—தொகுதி 52—எண் 3**

**Saturday, the 5th January 2019—Volume 52—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**5–1–2019**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | *341-392* |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) மேதகு ஆளுநர் அவர்கள் 2–1–2019 அன்று உரை நிகழ்த்தும்போது அவரது கூடுதல் தலைமைச் செயலாளர் பேரவைத் தலைவருக்கு இணையாக பேரவையில் அமர்ந்தது | *392-397* |
| *திரு. துரைமுருகன் | *392-395* |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | *396* |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | *397-398* |
| திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | *397* |
| திரு. துரைமுருகன் | *397-398* |
| திரு. உ. தனியரசு | *398* |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு இரத்தம் ஏற்றப்பட்டது | *399-419* |
| டாக்டர் V.P.B. பரமசிவம் | *399-403* |
| திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | *399,403-408 416-417* |
| திரு. கரி. இராமசாமி | *408-409* |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | *410-419* |
| திரு. மு.க. ஸ்டாலின் | *415-416,418* |

| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| **4.** | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—** | 419-530 |
| | *திரு. ஆர். நடராஜ் | 419-428 |
| | *திரு. உ. மதிவாணன் | 428-429,432 434-436, 438-443,446, 450-452 |
| | மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 429-430, 438-439 441-442 471,485-486 523-526 |
| | மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 430-432,444 448-450 |
| | மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | 433-434, 440-441,452 |
| | *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 436-437 445,513 |
| | மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 437-438, 491,507-508 511,513-514 519 |
| | திரு. துரைமுருகன் | 444,447-448 510-511,529 |
| | மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 447 |
| | திரு. இரா. குமரகுரு | 451-470 |
| | திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 472-478,480 484,487-488 |
| | மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 478-481,486 503.505 |
| | *மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் | 480 |





| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| **4.** | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | |
| | *மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 481-483, 517-518,520 |
| | திரு. த. மனோ தங்கராஜ் | 489 |
| | *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 489-490 |
| | திருமதி எஸ். விஜயதரணி | 490-491 |
| | திரு. பி.எம். நரசிம்மன் | 492-500 |
| | *மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் | 500-501 |
| | *திரு. எஸ். ரகுபதி | 501-506, 512-514, 518-520, 522-523, 526-530 |
| | *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 501-502 |
| | *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 505 |
| | மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 509-510, 514-516, 521-522 |
| **5.** | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 530-531 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விளம்பி, மார்கழி 21, திருவள்ளுவர் ஆண்டு 2049

## 2019 ஜனவரி 5, சனிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு."*

*ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன்மூலம் புகழ் உண்டாக வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிருக்கு உறுதி தருவது வேறெதுவும் இல்லை.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**11—**

### நூலகத்திற்கு புதிய கட்டடம்

***8114—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அந்தியூர் தொகுதி, கோபிசெட்டிப்பாளையம் ஒன்றியம், பொலவக்காளிபாளையம் ஊராட்சியில் உள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

[2019 ஜனவரி 5

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, கோபிசெட்டிப்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட பொலவக்காளிபாளையம் ஊராட்சியிலுள்ள கிளை நூலகம் 320 சதுர அடி பரப்பளவு கொண்ட இலவசக் கட்டடத்தில் 5–10–1988 முதல் செயல்பட்டு வருகின்றது. அந்த நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கின்றது. அதற்கான சொந்தக் கட்டடங்கள் மிக விரைவில் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் எங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, அம்மா அவர்களின் அரசை வழிநடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், அம்மா அவர்களின் அரசுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் வணக்கத்தினைத் தெரிவித்து, தமிழக மக்களுக்கு பொங்கல் பொருட்களோடு ரூ.100 என்றிருந்ததை ஆயிரம் ரூபாயாக அறிவித்து தமிழக மக்களுக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அம்மா அவர்களின் அரசை சிறப்பாக வழிநடத்திக்கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, என் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை அவையில் உள்ள அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் அரசிற்கு பெருமை சேர்க்கின்ற வகையிலே பள்ளிக் கல்வித் துறையை சிறப்பாக வழிநடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொலவக்காளிபாளையம் கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 5]

அந்தியூர் தொகுதி, தவிட்டுப்பாளையம் உயர்நிலைப் பள்ளியானது போதிய வகுப்பறைகள் இல்லாமல் செயல்பட்டு வந்தது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்பள்ளியை நேரடியாகப் பார்வையிட்டு, அங்குள்ள மாணவ, மாணவிகளின் குறைகளைக் கேட்டறிந்தார்கள். எனவே, அந்த மாணவ, மாணவியர்களுடைய நலன் கருதி, அங்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ராஜா என்கிற ராஜாகிருஷ்ணன் அவர்கள் இங்கு ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மகாபாரதத்தில் ஒன்றைச் சொல்வார்கள். கிருஷ்ணபிரான் மகாபாரதத்தில் தர்மத்தைக் காப்பாற்றுவார் என்று குறிப்பிடுவார்கள். தர்மத்தின் ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் வழியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு அவரது கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், நபார்டு திட்டத்தின் மூலமாக இந்த ஆண்டு அந்தப் பள்ளியில் கூடுதலாக 8 வகுப்பறைகள் கட்டுவதற்கு பரிந்துரை செய்துள்ளது. விரைவில் அந்தக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி, தவிட்டுப்பாளையத்தில் வசிக்கின்ற மக்களின் கல்வி நலன் கருதி, இந்த ஆண்டே வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்ததற்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், அந்த மாணவ, மாணவிகளின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியினை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அம்மா அவர்களின் அரசிற்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[2019 ஜனவரி 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இப்போது 42–வது புத்தகக் கண்காட்சி மாண்புமிகு முதல்வர் அவர்களாலே சிறப்பாகத் துவங்கி வைக்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கின்ற இந்தப் புத்தகக் கண்காட்சியில் பல்வேறு பதிப்பகங்களைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய புத்தகங்களை இன்றைக்கு அங்கே விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள். தமிழிலே நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமென்று சொன்னால், பதிப்பகங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். நூலக ஆணையம் மூலமாக இந்தப் பதிப்பகங்களுக்குரிய புத்தகங்களைக் கொள்முதல் செய்யக்கூடிய பணி எந்த நிலையில் இருக்கிறது? அதற்குரிய தேர்வுக் குழு அமைக்கப்பட்டுவிட்டதா? அதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது? குறிப்பாக, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பல்வேறு நூலகங்கள், மத்திய நூலகங்கள், மாவட்ட நூலகங்கள், கிளை நூலகங்கள் என்று பல நூலகங்களுக்கு அந்த நூல்கள் சென்று சேர வேண்டிய தேவை இருக்கிறது. வாசகர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டும் விரைந்து செயல்பட வேண்டியிருக்கிறது. அதேபோல, அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவிலே புதிய நூல்கள் வாங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதனுடைய நிலை எப்படி இருக்கிறது? எப்போது புதிய நூல்கள் வாங்கப்படும்? அதற்காக அரசு எந்த அளவிலே முயற்சிகளை எடுத்திருக்கிறது என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 12 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. முன்னாள் துணை வேந்தர்கள், அதேபோல மருத்துவத் துறையைச் சார்ந்தவர்கள் போன்றவர்களைக் கொண்டு



2019 ஜனவரி 5]

அந்தக் குழு முறையாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அது இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, பதிப்பகங்கள் அனைத்திற்கும் புத்துயிரூட்டுகின்ற வகையிலே நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். நல்ல நூல்களைப் பெற வேண்டுமென்று சொன்னால், பதிப்பகங்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது என்ற முறையிலேதான் இந்த ஆண்டு பதிப்பகங்களிலே இருக்கின்ற நூல்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் அங்கே வைக்கப்பட்டது. வேண்டுகோள் வைக்கின்றபோது காகிதங்கள் வாங்குவதற்கும், அச்சிடுவதற்கும் அதிக அளவு செலவாகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, பதிப்பகங்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, நல்ல நூல்களை எழுதக்கூடியவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலேயும் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு 5 கோடி ரூபாய் நிதியொதுக்கியது மட்டுமல்ல, மிக விரைவிலே கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்களை உருவாக்குவதற்காக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையிலேதான் You Tube மூலம் மாணவர்கள் பாடங்களைப் படிக்க ஏதுவாக புதிய பாடத் திட்டத்தை தமிழகத்திலே கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஏனென்று சொன்னால், இன்றைக்கு படிக்கின்ற மாணவர்கள் பள்ளியில் பாடம் நடத்தும்போது கவனக் குறைவாக இருந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணி, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மீண்டும் ஆசிரியர்களிடம் அனுப்பி படிக்க வைக்கும் பழக்கம் இருந்து வருகிறது. அந்த நிலையை மாற்றுகின்ற வகையில், You Tube–ல் பாடங்களைப் பதிவு செய்து, அதை மாணவர்கள் தங்களுடைய செல்போனில் download செய்து, அவர்கள் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மிக விரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றதற்குப் பிறகு அங்கேயே ஸ்டுடியோ ஒன்றை உருவாக்குவதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஏனென்று சொன்னால், சிறந்த கல்வியாளராகத்

[2019 ஜனவரி 5

திகழ்கின்ற ஆசிரியப் பெருமக்களை வைத்து, சிறந்த முறையிலே இந்தப் பாடங்களை நடத்தச் சொல்லி அதை CD–ல் பதிவு செய்து, அதன்மூலம் ஆயிரம் பள்ளிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும், இந்த ஆசிரியர்களால் நடத்தப்படுகின்ற பாடத்தை ஆயிரம் பள்ளிகளில் மாணவர்கள் கேட்டுப் பயன்பெறவும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், பல்வேறு விளக்கங்களைத் தருகின்ற வகையில் பாடங்கள் நடத்தப்படுகின்றன. நூலகத்தை ஊக்கப்படுத்துகின்ற வகையிலேயும் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதேநேரத்தில் முன் காலத்திலே எழுதப்பட்டு நடைமுறையிலுள்ள ஓலைச் சுவடிகளைக்கூட பாதுகாப்பதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதையும் CDs–ஆக உருவாக்குவதற்கும், புத்தக வடிவங்களாக உருவாக்குவதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதோடுமட்டுமல்ல, தமிழை வளர்க்கின்ற மதுரை மண்ணிலே இருக்கின்றவர்களுக்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. விரைவிலே அந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. தமிழ் கலாச்சார பண்பாடுகளைக் காப்பதற்கும் இந்த நூலகத்தின் மூலமாகப் பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டிருக்கிறது. இந்த நூலகத்தைப் பொறுத்தவரையிலும் எல்லாப் பணிகளும் சிறப்பான முறையிலே, மிக விரைவிலே நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில், வண்ணாரப்பேட்டையில் அப்பர்சாமி கோயில் தெருவிலும், மேலப்பாளையத்தில் கொட்டிபுரம் பஜார் மற்றும் பள்ளிக்கூடத் தெரு ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள கிளை நூலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான இடங்கள் முதலிலே தேர்வு செய்யப்பட வேண்டும். தேர்வு செய்ததற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 சதவிகிதம் நிதியை நீங்கள் தாருங்கள், நூலகத் துறையின் மூலமாக 50 சதவிகித நிதியை நாங்கள் தருகிறோம். அதன் மூலமாக அந்த நூலகங்களுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

**திரு. V.T. கலைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட தொரவலூர் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் பவளங்குடி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ மாணவிகள் இடப் பற்றாக்குறையின் காரணமாக மரத்தடியிலே அமர்ந்து பயிலக்கூடிய நிலை உள்ளது. இந்த நிலையைப் போக்குகின்ற வகையிலே மாணவ மாணவிகளின் கல்வி நலன் கருதி, இந்த ஆண்டே புதிய கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்தப் பள்ளிகளுக்கு இடையிலே ஒரு சாலை இருக்கின்றது. ஒருபுறத்திலே பள்ளியின் விளையாட்டு மைதானம், மறுபுறத்திலே சாலைகள் என அப்பள்ளிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் இதற்கு முன்பே இதே வேண்டுகோளை வைத்திருக்கிறார். அப்போதே அந்த வேண்டுகோளை ஏற்று, நபார்டு திட்டத்தின் மூலமாக கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு பரிந்துரை செய்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*[2019 ஜனவரி 5*

**12—**

## நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம்

***41472—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எழும்பூர் தொகுதி, 58–வது வார்டு, E.K. குரு தெருவில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் AB004, MB 002 ஆகிய சிந்தாமணி கூட்டுறவு நியாய விலைக் கடைகளைப் புதிய கட்டடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எழும்பூர் தொகுதி, 58–வது வார்டு, E.K. குரு தெருவில், பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் AB004 மற்றும் MB 002 ஆகிய இரு முழுநேர நியாய விலைக் கடைகள் முறையே 745 மற்றும் 663 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரையில், நியாய விலைக் கடைகளுக்கு இடம் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. இவ்விரண்டு நியாய விலைக் கடைகளையும் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாற்று இடம் கிடைத்தவுடன் அந்த இரு முழுநேர நியாய விலைக் கடைகளும் இடமாற்றம் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், கழகத்தின் தலைவருமான அண்ணன் தளபதி அவர்களுக்கு வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2019 ஜனவரி 5]*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் தொகுதி, 58–வது வார்டில் E.K. குரு தெரு, சாமி தெரு, பூங்கா நகர் சிந்தாமணி மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் AB004 மற்றும் MB 002 ஆகிய இரு நியாய விலைக் கடைகளில் முறையே 745 மற்றும் 663 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்த இரண்டு கடைகளில், E.K. குரு சாலையில் உள்ள அந்தக் கடை செயல்படும் கட்டடங்கள் பழுதடைந்து எப்பொழுது விழுந்துவிடுமோ என்கிற அளவிற்கு மிகவும் மோசமாக உள்ளது. கட்டடத்தின் உள்ளே பார்த்தால் ** இருக்கும். ஆனால், வெளிப்புறங்களைப் பார்த்தால் அந்தப் பகுதிக்கு பொதுமக்கள் சென்று வரக்கூடிய சூழ்நிலையே இருக்காது. இது அந்த அதிகாரிகளுக்கும் தெரியும். கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் இதே நிலையில்தான் இருக்கிறது. நான் தொடர்ந்து இந்த அவையிலே தற்போது மூன்றாவது முறையாக இதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன். ஆனால், இதுவரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. உடனடியாக அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அது இடிந்துவிழுந்தால் நிலைமை மிகவும் மோசமாகி, அதற்கு எல்லோருமே பொறுப்பேற்கக்கூடிய ஒரு சூழ்நிலை வந்துவிடும். சாமி தெருவில் தேர்தல் நேரத்தில் மட்டுமே பயன்படுத்தக்கூடிய, மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு கட்டடம் இருக்கின்றது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு அடுத்தாற்போல்தான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அப்படியே அவரிடம் சம்மதத்தைப்பெற்று, அந்தக் கட்டடத்தை வாங்கிக்கொண்டு அந்தக் கடைகளை மாற்றிக் கொடுத்தீர்கள் என்று சொன்னால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார், ** எப்படி இருக்குமோ அதுபோல் பார்ப்பதற்குத் தெரிகின்றது, ஆனால் கடைக்குள்ளே மோசமாக இருக்கிறது என்று சொன்னீர்கள். ** எப்பொழுதும் அழகாகத்தான் இருக்கும். ** அழகாக இருப்பதற்குப் பெயர்தான் ** என்று அர்த்தம். இல்லை என்றால் அது வேறுமாதிரி ஆகிவிடும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2019 ஜனவரி 5

எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சாமி தெருவில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் 700 சதுர அடியில் இருக்கின்றது. அந்த இடத்தினைக் கேட்டு 18–8–2018–ல் நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். உரிய ஆணையைப் பெற்று அதிவிரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களை வைத்து அந்தக் கடைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே எனக்கு முதல் கேள்வியைக் கேட்கும் வாய்ப்பினைக் கொடுத்து என்னை ஆச்சரியப்பட வைத்திருக்கிறீர்கள். நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்பதற்கு என்னிடம் இரண்டு கேள்விகள் உள்ளன. அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை கொடுப்பார்கள். உணவு சம்பந்தப்பட்டதுதானே. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. ஏதாவது பார்த்து செய்துகொடுங்கள். கடை எண் NA029 அமுதம் நியாய விலைக் கடை 58–வது வார்டில் உள்ள லாலாகுட்டித் தெருவில் உள்ள ஒரு சிறிய வீட்டில் செயல்பட்டு வருகிறது. பொது மக்கள் பொருட்களை வாங்கும்போது தெருவில் வந்து நின்றுகொண்டுதான் அந்த smart card–ஐ swipe செய்ய வேண்டியுள்ளது. ஏனென்றால் உள்ளே signal வரவில்லை. இதுகுறித்து நான் ஏற்கெனவே இரண்டுமுறை அதிகாரிகளைப் பார்த்து சொல்லியிருக்கிறேன். அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதுபோல், புல்லாபுரம், சாஸ்திரி நகரில் 1,750 கார்டுகள் கொண்ட கடை எண் DA 045 குறித்து நான் ஏற்கெனவே உங்களிடத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரும்படி அறிவிப்பு கொடுத்தபோது, நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தக் கடையை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், அதிகாரிகளிடமிருந்து எனக்கு என்ன பதில் வந்திருக்கிறது என்று சொன்னால், அந்தக் கடையை ஆய்வு செய்தோம், நீங்கள் சொல்கின்ற இடம் மிகவும் குறுகலான சாலையாக இருப்பதால் அங்கு இந்தக் கடையை அமைக்க இயலாது என்று சொல்கிறார்கள். ஆனால், இப்போதிருக்கின்ற அந்தக் கடையில் 1,750 கார்டுகள் உள்ளன. நான் சொல்லும் சாஸ்திரி நகர் கடை உள்ள தெருவைவிட புல்லாபுரம் கடை மிகவும் குறுகலான சாலையில் உள்ளது. 1,750 கார்டுகள் ஒரே



2019 ஜனவரி 5]

இடத்திலே இருக்கிற காரணத்தினாலே அங்கே சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஒவ்வொரு மாதமும் ஏற்படுகிறது. ஆகையால் 1,750 கார்டுகளில், 800 கார்டுகள் சாஸ்திரி நகரில் தனியாக உள்ள ஒரு கடையில் இருக்கின்றன. அங்கேயும் மாநகராட்சிக்குச் சொந்தமான இடமிருக்கிறது. அதிகாரிகளை அழைத்துச் சென்று அந்த இடத்தைக் காண்பித்திருக்கிறோம். 9,000 மெட்ரோ வாட்டர் டேங்கர் லாரிகள் அந்தத் தெருவிற்குள் போகின்றன. ஆனால், அதிகாரிகள் அந்த இடத்தை நேரில் பார்த்துவிட்டு, சரக்குகளை இறக்குவதற்கு லாரிகள் உள்ளே வர முடியாது என்று சொல்கிறார்கள். அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, புல்லாபுரத்தில் இருக்கக்கூடிய அந்தக் கடையை மாற்றி, சாஸ்திரி நகரில் 800 கார்டுகள் தனியாக இருக்கின்றன. அதைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

அதேமாதிரி புதிய பூபதி நகரில் கடை எண் டி.ஏ. 00546. . .

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூலக் கேள்வியை கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுவிட்டு, துணைக் கேள்வியை உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? அதற்கெல்லாம் நேரமில்லை. அதுமட்டுமல்லாமல், இந்தக் கேள்வியின் ஆரம்பத்தில் நீங்கள் ** என்று சொன்னீர்கள். அது தேவையில்லாதது. அது விமர்சனத்திற்குள்ளாகும். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அதுவெல்லாம் தேவையில்லை. ஆகவே, நீங்கள் இந்தக் கேள்விக்கு சம்பந்தமான துணைக் கேள்வி இருந்தால் கேளுங்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதன்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். E.K. குரு தெரு மற்றும் சாமி தெரு இரண்டிற்கும் மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடம் சாமி தெருவில் இருக்கிறது. தேர்தல் நேரத்தில் மட்டும்தான் அதைத் திறந்து, வாக்குச் சாவடியாகப் பயன்படுத்துகிறார்கள். மீதி 5 வருடங்கள் அந்த இடம் பூட்டப்பட்டிருக்கிறது. மாநகராட்சி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அதிகாரிகளிடம் சொல்லி அந்த இடத்தைக் கேட்டதற்கு, அவர்களும் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து அதை இந்த ஜனவரி மாதத்திற்குள் பெற்று, கடைகளை அங்கு மாற்றிக் கொடுத்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மூன்றாவது முறையாக நான் கேட்கிறேன். பார்த்து செய்துகொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நீங்கள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள். இந்த அமைச்சரிடம் கேள்வியை கேட்டுவிட்டு, அந்த அமைச்சரிடம் பதில் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் இங்கே கேள்வி கேட்டுவிட்டு, அந்த அமைச்சரிடம் பதில் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இங்கே கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களில் பொது விநியோகக் கடைகளுக்கு யாரும் இடம் கொடுக்க முன்வருவதில்லை. இடத்தினுடைய value அதிகமாக இருக்கிறது. சங்கத்தால் அந்த இடங்களை வாங்கவும் முடியாது. அரசாங்கத்தினுடைய இடங்கள் கிடைப்பதும் அரிதாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2 நகரும் நியாய விலைக் கடைகளை பூங்கா நகருக்கும், TUCS–க்கும் கொடுத்தார்கள். இன்றைக்கு ஏறத்தாழ 10,963 குடும்பங்கள் வசிக்கும் சென்னையில் அவற்றின் மூலமாகப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, மேலும் நகரும் நியாய விலைக் கடைகளை சென்னையில் கொண்டுவருவது குறித்து துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, சாமி தெருவில் இருக்கிற மாநகராட்சிக்குச் சொந்தமான 700 சதுர அடி இடத்தைக் கேட்டிருக்கிறோம். பலமுறை கேட்டாகிவிட்டது. இப்போது ஆணையாளர் அவர்களிடத்திலும் மனு கொடுத்திருக்கிறோம். அங்கேயிருக்கிற உதவி ஆணையாளர் அவர்களிடத்திலும் துறை ரீதியாக எடுத்துச் சொல்லப்பட்டு, உறுதியாக இடம் கிடைப்பதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதிவிரைவிலே





கடையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## உதவிப் பொறியாளர் அலுவலக புதிய கட்டடம்

***16663—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியிலுள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியிலுள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றது. 19–1–2019 அன்று ஒப்பந்தப்புள்ளியை திறக்கவிருக்கின்றோம். கூடிய விரைவிலே ரூ.30 இலட்சம் செலவில் அந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். எங்களது கழகத் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புவனகிரியில் உதவி மின்

[2019 ஜனவரி 5

பொறியாளர் அலுவலகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கீரப்பாளையம் ஊராட்சிப் பகுதியில் உள்ள சுமார் 25 கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள கிராம ஊராட்சியாகும். வேகமாக வளர்ந்துவரும் ஊராட்சி. அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஊராட்சி. இங்கே ஊராட்சி ஒன்றிய அலுவலகம், உயர் நிலைப் பள்ளி, அதனருகில் தனியார் கல்லூரிகள் ஆகியவை அமைந்துள்ளன. இந்த ஊராட்சியில் இயங்கிவரும் துணை மின் நிலையம் மூலமாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் வருங்காலங்களில் அதிக மின் தேவை ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், இங்குள்ள துணை மின் நிலையத்தை மேம்படுத்தி 33/11 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையமாக அமைத்திட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை, அந்தப் பகுதியினுடைய மின்னழுத்தத்தைப் பொறுத்தது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் பார்க்கின்றபோது, அங்கே 11 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையம் இருக்கிறதென்று நினைக்கின்றேன். அதனை 33 கே.வி.ஏ. ஆக தரமுயர்த்த வேண்டுமென்று கேட்கின்றார்கள். இந்த ஆண்டு கிட்டத்தட்ட 120 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கின்றோம் என்று நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கின்றேன். அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் மின் தேவை இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் விருத்தாசலம் கோட்டத்திற்குட்பட்ட கம்மாபுரம் ஒன்றியம், மேலப்பாலையூர் கிராமத்தில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள புதிய துணை மின் நிலையம் அமைக்க கடந்த 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7.32 கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, சுமார் 9 மாதங்களாகியும் அதற்கான பணி இன்றுவரை தொடங்கப்படவில்லை. மேலப்பாலையூர் கிராமப் பகுதியில் உள்ள கீழப்பாலையூர் மற்றும் சி. கீரனூர் ஆகிய கிராமங்களில் 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் உள்ள விருத்தாசலம், பூதாமூர் பகுதியிலுள்ள 110/33 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த பூதாமூர் துணை மின் நிலையத்தில், அதிக மின் பளு இருப்பதன் காரணமாக கீழப்பாலையூர் மற்றும் கீரனூர் துணை மின் நிலையங்களுக்கு சீரான மின் விநியோகம் கிடைப்பதில்லை. 25 கிராமங்களுக்கு மேல் இருக்கக்கூடிய இந்தப் பகுதியில் வாழும் மக்கள் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மூன்று போகமும் அதிக அளவில் நெல் மற்றும் கரும்பு விவசாயம் செய்து வருகின்றார்கள். இங்கு சீரான மின் விநியோகம் இல்லாத காரணத்தினால், இந்தப் பகுதி விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றார்கள். எனவே, மேலப்பாலையூர் கிராமத்தில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும். எனவே, மேலப்பாலையூரில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை உடனடியாகத் துவங்கிட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கம்மாபுரம் ஒன்றியம், மேலப்பாலையூர் ஒன்றியத்தில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையம் அமைப்பதற்காக ஒப்பந்தம் கோரப்பட்டு அது அப்படியே நிற்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள்.

[2019 ஜனவரி 5

இடம் கையகப்படுத்துவதில் ஏதாவது பிரச்சினை இருக்குமென்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி, அப்படி ஒப்பந்தம் கோரப்பட்டிருந்தும், வேறு ஏதாவது பிரச்சினை இருக்கின்றதா என்பதை ஆய்வு செய்து, அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழிவகுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவை மாநகராட்சி, 56–வது வட்டம், பீளமேடு டவுன் கிழக்குப் பகுதியில் குறிப்பாக, அண்ணா நகர் பகுதியில் உதவி மின் பொறியாளர் அலுவலகம் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாநகராட்சியினுடைய பொது ஒதுக்கீட்டு இடங்கள் அந்தப் பகுதியில் நிறைய இருக்கின்றன. எனவே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சியினுடைய ஆணையர், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோரிடத்தில் பேசி, மின் வாரியத்தினுடைய உதவி மின் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 2,176 அலுவலகங்கள் இருக்கின்றன. அவற்றில் 1,699 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பீளமேடு டவுன் கிழக்குப் பகுதியில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன; அந்த இடத்தைப் பெற்று,



2019 ஜனவரி 5]

அந்த இடத்திலே அலுவலகத்திற்கான கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானதுதான். ஆனால், அதில் இருக்கின்ற சிக்கல் என்னவென்று சொன்னால், மாநகராட்சியாக இருந்தாலும்கூட மின்சாரத் துறைக்கு வருகின்றபோது அதனுடைய வழிகாட்டு மதிப்பீட்டில் என்ன இருக்கின்றதோ அந்தத் தொகையை நாங்கள் கட்ட வேண்டும். அதனுடைய மதிப்பு அதிகமாக இருந்திருக்கும். அது ஒரு காரணமாக இருந்திருக்கலாம்; அல்லது மாநகராட்சி அந்த இடம் தேவை என்று கருதி, அந்த இடத்தைக் கொடுக்க மறுத்திருக்கலாம். ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கை குறித்து அதிகாரிகளோடும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடும் ஆலோசித்திருக்கிறேன். அதோடு மாநகராட்சி நிருவாகம் அந்த இடத்தைக் கொடுக்குமேயானால், தேவை இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## உயர் கோபுர மின் விளக்கு

***10253—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்திவேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கந்தம்பாளையம், மணியனூர் ஒத்தரசு மற்றும் நடந்தை ஆகிய பகுதிகளில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–25

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2019 ஜனவரி 5

பரமத்திவேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கந்தம்பாளையம், மணியனூர் ஒத்தரசு மற்றும் நடந்தை ஆகிய பகுதிகளில் போக்குவரத்து வளர்ச்சி மற்றும் மக்கள் தொகை பெருக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலத் தேவைக்கேற்ப உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. மேலும், பரமத்திவேலூர் தொகுதிக்குட்பட்ட தாலுகா அலுவலகத்திற்கு முன்பும், களச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு முன்பும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதிகளிலும் உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்கப்படுவதால் ஊராட்சிப் பகுதிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் மின்சாரக் கட்டணம் மிக அதிகமாக வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, அவர்களால் உத்தரவிடப்பட்டு, அதேபோன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களாலும் தொடர்ந்து உத்தரவிடப்பட்டு, தெரு விளக்குகள் L.E.D. lights–ஆக மாற்றப்பட்டு வருகின்றன. உயர் கோபுர மின் விளக்குகளால் மின் கட்டணம் மிக அதிகமாக ஒவ்வொரு ஊராட்சியிலும் வருகிறது. உயர் கோபுர மின் விளக்குகளை அமைக்கும்போது, பஞ்சாயத்துகளிலும் மின்சாரக் கட்டணம் மிக அதிகமாக வருகிறது. பல பஞ்சாயத்துகளில் அந்தளவிற்கு வருமானம் வரக்கூடிய சூழ்நிலையில்லை. அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி



2019 ஜனவரி 5]

மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த மின் விளக்குகளை அமைக்கக் கூடாது என்று இதற்காக வழங்கப்பட்ட வரையறைகளில் இருக்கின்றது. தற்போது M.P. Constituency Development Fund–லிருந்து மட்டும்தான் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) M.P. Constituency Development Fund–லிருந்து மட்டும்தான் அமைக்கப்படுகிறது. M.L.A. Fund–ல் இல்லை. எங்கெல்லாம் அவசியம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்படி, ஏற்கெனவே உள்ள தெரு விளக்குகளை L.E.D. lights–ஆக மாற்றுகின்றபொழுது, ஊரகப் பகுதிகளில் மட்டும் பார்த்தோமென்றால் இதுவரையிலும் கிட்டத்தட்ட 20,00,008 L.E.D. lights–ஆக மாற்றப்பட்டதில் மொத்தத்தில் ரூ.170 கோடி அளவிற்கு மின்சாரக் கட்டணம் சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, நகர்ப்புறப் பகுதிகளில் L.E.D. lights–ஆக மாற்றப்பட்டதில் ரூ.116.83 கோடி அளவிற்கு மின்சாரக் கட்டணம் சேமிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் மாதத்திற்கு ரூ.1.50 கோடி என்ற வகையில், வருடத்திற்கு மொத்தம் ரூ.18 கோடி. இதுவரையில் L.E.D. lights–ஆக மாற்றப்பட்டதில் மொத்தம் ரூ.286.83 கோடி அளவிற்கு உள்ளாட்சி அமைப்புகளின் மின் கட்டணத்தில் சேமிப்பு வந்திருக்கிறது. அதனால்தான், அவசியமான இடங்களில் தெரு விளக்குகளை L.E.D. lights–ஆக convert செய்து, அமைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதிகளிலும் கண்டிப்பாக துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, உயர் கோபுர மின் விளக்குகளை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பதற்கு விதிமுறைகளில் வழிவகைகள் இருக்கின்றன. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உயர் கோபுர மின் விளக்குகளை அமைக்க விதிமுறைகளில் வழிவகை இல்லை. அந்த விதிமுறையையாவது தளர்த்தி மக்கள் நடமாட்டம் இருக்கின்ற

பகுதிகளிலேயும், அலுவலகங்கள் இருக்கின்ற பகுதிகளிலேயும் உயர் கோபுர மின் விளக்குகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பதற்கு விதிமுறைகளில் இடமில்லை என்றுதான் தற்போது இருக்கிறது. அவ்வாறுதான் முதலில் இருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உயர் கோபுர மின் விளக்குகளை அமைப்பதற்கு விதிமுறைகளில் இடம் இருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களே நிறைய இடங்களில்—maximum தேவைப்படுகிற இடங்களில் உயர் கோபுர மின் விளக்குகளை அமைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த நிதியை வழங்கி வருகிறார்கள். (குறுக்கீடு) எல்லா கிராமப் பஞ்சாயத்துகளிலும் E.B. Bill கட்டமுடியாத அளவுக்கு மோசமான சூழ்நிலைகள் இருக்கின்றன. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படும். அதேபோல நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல, பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் மட்டும்தான் உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பதில் சற்று சிரமங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துகளின் நிதிச் சூழ்நிலை, வருமானச் சூழ்நிலைகளைப் பார்க்க வேண்டியிருக்கின்றது. இருந்தாலும், தேவை இருக்கின்ற இடங்களில் உயர் கோபுர மின் விளக்குகளை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அரசு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.





முற்பகல் 10–30

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலின் கோரத் தாண்டவம் எங்கள் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியையும் விட்டு வைக்கவில்லை. அதில் கோட்டூர் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டது. அங்கு பல இடங்களில் மிக பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. தற்போது நகராட்சிகள் சம்பந்தப்பட்டவை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்துக்கொண்டிருக்கிற காரணத்தால், இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். மன்னார்குடி நகராட்சியிலும் பல இடங்களில் உயர் கோபுர மின் விளக்குகள் ஒட்டுமொத்தமாகச் சாய்ந்திருக்கின்றன. புதிதாகப் போடப்பட்டுள்ள உயர் கோபுர மின் விளக்குகளும் சாய்ந்திருக்கின்றன. அவற்றில் பல கோபுரங்கள் லேசாக சாய்ந்து அப்படியே நிற்கின்றன. அவற்றில் இருக்கின்ற பாகங்களை யாரும் எடுத்து பத்திரப்படுத்தி வைக்கவில்லை. அவை அப்படியே கிடக்கின்றன. ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை? அதேமாதிரி, சாய்ந்து கிடக்கும் இந்த உயர் கோபுர மின் விளக்குகளை எப்போது நிமிர்த்தி சரி செய்யப் போகிறீர்கள்? இதற்கு ஏதாவது நிதியை நீங்கள் தனியாக ஒதுக்கியிருக்கிறீர்களா? இதற்கு ஏதாவது கணக்கெடுப்பு நடத்தியிருக்கிறீர்களா? கோட்டூர் பகுதியில் பல இடங்களில் இவ்வாறு இருக்கின்றன.

அதேபோல, திரும்பக்கோட்டை என்ற கிராமத்திலும் இருக்கிறது. மன்னார்குடி நகராட்சியில் Findlay school ground அருகில் நிறைய மின் கோபுர விளக்குகள் சாய்ந்திருக்கின்றன. ஆகவே, இதை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, எம்.எல்.ஏ. நிதியிலிருந்து சரி செய்துகொள்ளலாம் என்று நீங்கள் சொன்னாலும் சரி அல்லது இதனை நீங்களே சரி செய்தாலும் சரி. ஏனென்றால், புயல் பாதிப்பு என்பதனால் நீங்களே direct–ஆக செய்வதானாலும் சரி. இதைத் தவிர பல இடங்களில் ஏற்கெனவே போடப்பட்ட பழையவற்றையெல்லாம் நீங்கள் salvage–ஏ செய்ய முடியாது. அந்த அளவிற்கு மோசமாக உள்ளது. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கும் புதிதாக ஒதுக்குவதற்கு— இந்த 'கஜா' புயல் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள பகுதிகளில் MLA CDF–லிருந்து ஒதுக்குவதற்கு இந்த அரசு முன்வருமா? தயவுகூர்ந்து இதனை ஒரு அவசர விஷயமாகக் கருதி, உடனடியாக, இதனை சீர் செய்து தரும்படி தங்கள் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2019 ஜனவரி 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் 'கஜா' புயல் சம்பந்தமாக பாதிக்கப்பட்ட மின் கோபுர விளக்குகள் மற்றும் பிற விளக்குகளெல்லாம் சாய்ந்துவிட்டன என்று கூறினார். 'கஜா' புயலால் அதிகமாக பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்கள் மற்றும் பிற மாவட்டங்களில் எல்லாம் உடனுக்குடன் அந்த விளக்குகள், அதாவது, சாதாரண விளக்குகளையெல்லாம் படிப்படியாக, அதற்கு ஒரு team போட்டு, சரி செய்துகொண்டு வருகிறார்கள். அதில், உயர் கோபுர மின் விளக்குகள் சாய்ந்து கிடக்கின்றன, இன்னும் சரி செய்யப்படவில்லையென்று கூறியிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் நிரந்தரமாகச் சரி செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இன்னும், பல இடங்களில் உயர் கோபுர மின் விளக்குகள் சாய்ந்து கிடக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். உடனடியாக, நம்முடைய துறை அதிகாரிகளுடன் ஒரு team–ஐ அனுப்பி, கண்டிப்பாக அவை சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

## விசைப் படகுகள் அணையும் தளம்

***24857—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2019 ஜனவரி 5]

*(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, பச்சாங்குப்பம் ஊராட்சி, சொத்திக்குப்பம் கிராமத்தில் விசைப் படகுகள் அணையும் தளம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர் ஊராட்சி ஒன்றியம், பச்சாங்குப்பம் ஊராட்சி, சொத்திக்குப்பம் கிராமத்தில் விசைப் படகுகள் அணையும் தளம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி தொகுதி, பச்சாங்குப்பம் ஊராட்சியில் சொத்திக்குப்பம் கிராமமும், அதனைச் சுற்றி கிட்டத்தட்ட 49–க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்களும் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் அதிகமாக விசைப் படகுகள் இருக்கின்றன. அவற்றிற்கு அணையும் தளம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கின்றோம். இது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பதால், அவர்களுடைய உணர்வை மதிப்பார் என்ற அடிப்படையில்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு அணையும் தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்திக்குப்பம் மீனவக் கிராமத்தில் மீனவர்கள் பயன்படுத்துகின்ற கட்டுமரம் 33, இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் 114. எனவே, இவர்கள் தற்போது பக்கத்தில் இருக்கின்ற அணையும் தளத்தினை உபயோகப்படுத்துகிறார்கள்

என்பதிலே எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது கடலூர் மாவட்டத்தில் உள்ள முதுநகரில் ரூ.100 கோடி செலவில் ஒரு மிகப் பெரிய துறைமுகம் அமைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, அதனடிப்படையில் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட இருக்கின்றது. மேற்படி மாவட்ட மீனவர்களுக்கு இப்படி அதிகமான அளவிற்கு சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு மீனவக் கிராமத்திலும் ஒரு மீன்பிடி இறங்குதளம் வேண்டுமென்று சொல்கின்றார்கள். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 660 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. 660 மீனவக் கிராமங்களுக்கும் அணையும் தளம் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 50 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும். அது முடியாத காரியம். எனவேதான் அங்குள்ள மீன்பிடி கலன்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, அவசர, அவசியத்தினை முன்னிட்டு, நாம் அணையும் தளங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். எனவே, வருங்காலத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

*முற்பகல் 10–35*

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதி புயல், வெள்ளத்தினால் அதிகமாக பாதிக்கப்படுகின்ற மாவட்டங்கள் நிறைந்த பகுதியாகும். அதேபோல 49 கிராமங்களில் மீனவர்கள் வசிக்கின்றார்கள். நாங்கள் ஆண்டுதோறும் புயலால் ஏற்படும் பாதிப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். புயல் அடித்தால் எப்போது பார்த்தாலும் கடலூர் மாவட்டத்தைத் தாக்குகிறது. இந்தத் தடவைதான் எங்கள் மாவட்டத்தை புயல் தாக்காமல் விட்டது. எங்களுடைய மாவட்டத்தில் உள்ள பச்சாங்குப்பம் ஊராட்சி பெரிய ஊராட்சி. அது கிட்டத்தட்ட 15,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி. கிட்டத்தட்ட அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல மீனவக் கிராமங்கள் இருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எங்களுடைய





மாவட்டம் புயலால் பாதிக்கப்படுகின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால் இவற்றைக் கருத்தில்கொண்டு, எங்கள் பகுதிமீது சிறப்புக் கவனம் செலுத்தி, முன்னுரிமை அளித்து அணையும் தளம் அமைத்துத் தர முன்வர வேண்டும். கடலூர் மாவட்டத்தில் அமைக்கின்ற திட்டத்தையும் நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், அங்கு அனைத்து மீனவர்களின் படகுகளையும் அணைய வைக்க முடியுமா என்ற கேள்வியும் மக்கள் மனதில் எழுகின்றது.

அதேபோல, சொத்திக்குப்பம் கிராமத்தில் கட்டுமரப் படகுகள், விசைப் படகுகள், கோட்டியா போன்ற படகுகளை அதிகளவில் தயாரிக்கின்ற தனியார் தொழிற்கூடங்கள் இருக்கின்றன. இதுபோன்ற படகுகளைத் தயாரிக்கின்ற தொழில் நிறுவனங்கள் இருப்பதால், இந்தப் பகுதியில் சிறப்புக் கவனம் செலுத்தி, அணையும் தளம் அமைக்க வேண்டுமென்று அரசின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மீனவ சமுதாயத்தைச் சார்ந்தவர்களின் பிள்ளைகள் மீன்பிடித் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்ற காரணத்தால், அதிகமாக படிக்கக்கூடிய வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. படித்த மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு இல்லை. வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தாலும் மாணவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்கிறார்கள். அத்தகைய நிலையை தடுக்கின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகளை அளிக்கக்கூடிய பயிற்சி நிலையங்களை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். MBC மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. SC மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. ஆக, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற மீனவ மாணவர்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு பயிற்சி நிலையங்கள் துவக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று நீண்ட கேள்விகளைக் கேட்டிருக்கிறார். ஒன்று பச்சாங்குப்பம்

[2019 ஜனவரி 5

ஊராட்சி, சொத்திக்குப்பம் கிராமத்தில் அணையும் தளம் அமைய வேண்டும் என்பது. அங்கு அணையும் தளம் அமைப்பதில் அரசுக்கு எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், அரசுக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்குள்ள 600 கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திற்கும் அணையும் தளம் தேவையாக இருக்கிறது. அதில் அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அதனால்தான் கடலூர் மாவட்டத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தை விஸ்தரிப்பதற்காக இந்த ஆண்டு 100 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தப் போவது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கப் போகிறார். அன்னகோவில், சாமியார்பேட்டை, முடசலோடை, எம்.ஜி.ஆர். திட்டு, பேட்டோடை ஆகிய இடங்களிலெல்லாம் அணையும் தளங்கள் இருக்கின்றன. இந்த அணையும் தளங்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கட்டித் தரப்பட்டன. எனவே, அணையும் தளம் அமைக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு எந்த மாறுபட்ட கருத்தும் நிச்சயமாக இல்லை. ஆனால், நீங்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசு நிச்சயமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும். அந்தப் பகுதியில் அணையும் தளம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால், அணையும் தளம் அமைக்க technical feasibility இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். Technical feasibility–ஐ பார்த்துவிட்டு, நிதிநிலைக்கு ஏற்றவகையில், அங்கு மேற்படி திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா என்று அரசு பரிசீலிக்கும்.

இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது FRP. FRP என்பதற்கு முன்பு Albacea nutrana என்ற கட்டுமரம் ஆதிகாலத்தில் உபயோகப்படுத்தப்பட்டது. இது 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த botanical name. காலப்போக்கில் அந்த வகை மரம் குறைந்துவிட்ட காரணத்தினாலே, அதற்கு பதில் fibre re–inforced plastic என்று சொல்லக்கூடிய வள்ளங்களை தயாரித்து வருகிறோம். இதுகூட எப்போது என்றால், முதன் முதலில் 1991–1996 ஆம் ஆண்டு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றைக்கு அந்த வள்ளங்கள் முதன்முதலில் ஈஞ்சம்பாக்கத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டன, இன்று கடல் முழுவதும் கலர் கலராக வள்ளம் இருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள் என்றால், அதற்கெல்லாம் நாம் நன்றி சொல்ல வேண்டிய ஒரே தலைவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த



2019 ஜனவரி 5]

அடிப்படையிலே outboard machine பொருத்தி நீண்ட தூரம் மீன்பிடித்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குகின்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுபோன்ற industry develop ஆகிற சூழ்நிலையில், மீனவர்களே அவற்றைத் தயார் செய்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்த முடியுமா என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி. நிச்சயமாக முடியும். அதற்கு நம்முடைய MSME இருக்கிறது. அதற்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஒரு mini, Small scale industry என்ற அடிப்படையில் அவர்கள் அந்தத் தொழிலைச் செய்வதற்கு பதிவு செய்துவிட்டு, அதன் அடிப்படையில் அவர்களை அணுகினால், அரசு அவர்களுக்கு வேண்டிய சலுகைகளையெல்லாம் தருவதற்குத் நிச்சயமாகத் தயாராக இருக்கிறது.

முற்பகல் 10–40

மூன்றாவது, நம்முடைய மீனவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு Coastal Security Group-இது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியது-நம்முடைய கடற்பரப்பை கண்காணிக்க உருவாக்கப்பட்டது. இதிலே பிரத்யேகமாக நம்முடைய மீனவர்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், நம்முடைய அம்மா அவர்களே என்ன செய்திருக்கிறார்கள் என்றால், Coastal Security Group மூலமாக training கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதாவது, 10 ஆம் வகுப்பு pass செய்த மீனவ சமுதாய மாணவர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து, அவர்களை Navy, Coast Guard, Police ஆகிய துறைகளில் recruit செய்வதற்கு வேண்டிய அரசாணையும் பிறப்பிக்கப்பட்டு, அந்தப் பணியும் இன்றைக்கு department–ல் நடந்து கொண்டிருக்கிறது. இது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியவில்லை என்று நினைக்கிறேன்.

இரண்டாவது, அவர்களை I.A.S., I.P.S. அதிகாரிகளாக உருவாக்க வேண்டும் என்பதற்காக, வருடத்திற்கு கிட்டத்தட்ட 20 மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதாவது, உள்நாட்டு மீனவர்கள், அதேபோன்று கடற்கரை மீனவர்கள், இந்த இரண்டு தரப்பு மீனவர்களையும் நாம் select செய்து, நம்முடைய இந்திய குடிமையியல் பணி மூலமாக அவர்கள் I.A.S., I.P.S. அதிகாரிகளாவதற்கு trainingகூட கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது 1st Batch முடிந்திருக்கிறது. அந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[2019 ஜனவரி 5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், என்ன சொல்லுங்கள்?

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட. . .

(உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி எழுந்து நின்று ஏதோ பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் என்ன ஆகிறது என்று பாருங்கள். (குறுக்கீடு) இது எத்தனையாவது கேள்வி? (குறுக்கீடு) துணைக் கேள்வி நிறைய கொடுத்துக் கொண்டேயிருந்தால் நான் எப்போது கேள்வி நேரத்தை முடிப்பது? (குறுக்கீடு) பிறகு சபையை அதிக நேரம் நடத்தினால் மட்டும் என்னிடம் கேள்வி கேட்கிறீர்கள். (குறுக்கீடு) மாலை 5–00 மணி வரையில் அவையை நடத்துகிறீர்கள் என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. சாமி, என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? சுருக்கமாக உறுப்பினர்கள் பேசினால், பதில் சொல்லலாம்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளந்துறை, புத்தன்துறை, கேசவன்புத்தன்துறை, பொழிக்கரை ஆகிய நான்கு மீனவக் கிராமங்களும் நெருக்கமாக அமைந்துள்ளன. அவற்றில் மூன்று கிராமங்கள் ஒரே ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களாக, இடைவெளியில்லாமல் தொடர்ந்து இருக்கின்றன. இந்த நான்கு கிராமங்களிலே, மூன்று மீனவக் கிராமங்களிலே, அதாவது பள்ளந்துறை, கேசவன்புத்தன்துறை, பொழிக்கரை ஆகிய மூன்று கிராமங்களிலே NABARD நிதியுதவியின் மூலமாக, 75 மீட்டருக்கு ஒரு சிறிய தூண்டில் வளைவு அமைப்பதற்கு, ஒவ்வொரு கிராமத்திற்கும் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் தொடங்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. சாதாரணமாக ஒரு தூண்டில் வளைவு ஒரு கிராமத்திலே போட்டாலே, அதனுடைய தாக்கம், பாதிப்பு பக்கத்து கிராமம் வரையில் இருக்கும். தொடர்ந்து நான்கு கிராமங்கள் இருக்கின்ன நிலையில், நடுவிலே இருக்கக்கூடிய புத்தன்துறை மீனவ கிராமத்தை விட்டுவிட்டு, மீதமுள்ள மூன்று கிராமங்களிலே அதைப் போட்ட காரணத்தினால், அந்தப் பணிகள் நிறைவு பெறுகின்ற நேரத்திலே, அதனுடைய தாக்கம் இந்த ஒரு கிராமத்தை பாதிக்கும் என்ற பயம் அந்த மக்களிடத்திலே இருக்கின்றது. மணல் திட்டு ஏற்பட்டுவிடும்.



*2019 ஜனவரி 5]*

கடல் சீற்றம் ஏற்படுகின்றபொழுது, அலைகளுடைய தாக்கத்தை இரண்டு பக்கங்களிலும் உள்ள தூண்டில் வளைவு தடுக்கின்ற காரணத்தினால், அது ஒட்டுமொத்தமாக இந்த கிராமத்தை பாதிக்கும். எனவே, அங்கேயும் சேர்த்து எங்களுக்கு தூண்டில் வளைவு அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துக்கொண்டே இருக்கின்றார்கள். அதனை அரசினுடைய கவனத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இதோடு இணைத்து புத்தன்துறை கிராமத்திலேயும் சுமார் 4 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலே இந்த தூண்டில் வளைவு அமைக்கப்பட்டால்தான், அந்தக் கிராமத்தைப் பாதுகாக்க முடியும்.

ஏனென்று சொன்னால், வீடுகளெல்லாம் கடற்கரை ஓரங்களில் இருக்கின்றன. கடல் சீற்றம் ஏற்படுகின்றபோது, நிச்சயமாக இரண்டு பக்கங்களிலும் தாக்கம் ஏற்படுகின்றபோது, நடுவிலே இருக்கக்கூடிய கிராமம் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. அந்த பயம், பதற்றம் அந்த மக்கள் மத்தியிலே இருக்கின்றது. அதைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் பணிகளோடு சேர்த்து, அந்தப் பணியையும் செய்து தருவதற்கு முன்வருவாரா? அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகூட கொடுத்திருக்கிறார்கள். கேசவன்புத்தன்துறையைப் பொறுத்தவரையில், 4 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவு மற்றும் மீன் இறங்குதளம் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மீன் ஏலக் கூடம், வலை பின்னும் கூடம் கட்டும் பணியும் தற்போது நடைபெற்று வருகிறது. அருகிலுள்ள பள்ளந்துறையிலும் ரூ.4 கோடி செலவில் தூண்டில் வளைவு மற்றும் மீன் இறங்குதளம் அமைக்கும் பணி நடைபெறுகிறது. ஒரு மாதத்திற்கு முன் பணி தொடங்கிய நிலையில், இன்னும் கிட்டத்தட்ட 6 மாதங்களுக்குள்ளாகவே இந்தப் பணி நிறைவடைந்துவிடும்.

*[2019 ஜனவரி 5*

*உங்களுடைய மாவட்டத்திற்குத்தான் மீன் வளத் துறை மூலமாக அதிக அளவில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, அதிகபட்சமாக 40 சதவீதம் அளவிற்கு, முழுமையான அளவுக்குச் செலவிடப்பட்டிருக்கின்றது. அதிகமான அளவிற்கு மீனவர்கள், மீன்பிடிக் கலன்கள் உள்ள மாவட்டம் அது என்பதை அரசு நன்கறியும். அந்த அடிப்படையில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அந்த மாவட்டத்திற்கு வரும்போது, கடலரிப்பினைத் தடுத்திடும் வகையில், தூண்டில் வளைவுகளை அமைக்க வேண்டுமென்று சொல்லி, சுமார் 116 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள்.*

*அந்த அடிப்படையில், 72 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையைக் கொண்ட அந்த மாவட்டம், ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரத்திற்கும், ஒரு மீனவ கிராமத்தைக் கொண்டுள்ள நிலையில், கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை ஓரங்களைத் தாக்கிய 'ஒகி' புயல் மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால், வள்ளவிளை, மார்த்தாண்டந்துறை மற்றும் நீரோடி கிராமங்களில் மீனவர்களின் வீடுகளும், உடைமைகளும் பலத்த சேதமடைந்துள்ள நிலையில், அம்மீனவர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஆபத்தான அலைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில், மேற்படி மூன்று மீனவ கிராமங்களில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குறைந்த நீளமுள்ள தூண்டில் வளைவுச் சுவர்கள் அமைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதுகூட இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**16—**

## சட்டக் கல்லூரி

***35820—திரு. C.V. சேகர்:**

*மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*2019 ஜனவரி 5]*

*(அ) பட்டுக்கோட்டையில் சட்டக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலே புதிதாக சட்டக் கல்லூரி திறக்கின்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

**திரு. C.V. சேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஏற்கெனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சட்டக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற கொள்கை முடிவை எடுத்திருக்கிறது. அந்த வகையிலே, தஞ்சை மாவட்டத்தில் இதுவரை அரசு சட்டக் கல்லூரி ஏதும் திறக்கப்படவில்லை. அதை பட்டுக்கோட்டையிலே அமைத்துத் தந்தால் அந்தப் பகுதி மாணவர்கள் பயன்பெறுவார்கள். தேவையான இடமும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்யும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது 11 அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த அரசும் செய்யாத அளவிற்கு ஒரே ஆண்டிலே 3 சட்டக் கல்லூரிகளுக்கு அனுமதி அளித்து, தற்போது அந்த 3 சட்டக் கல்லூரிகளும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத்*

தட்டும் ஒலி) புதிதாக சட்டக் கல்லூரி திறப்பதைப் பொறுத்தவரை, இதற்கு முன்பு தனியார் சட்டக் கல்லூரிகளை அனுமதிப்பதில்லை என்ற ஒரு நிலைப்பாட்டில் அம்மாவினுடைய அரசு இருந்தது தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எந்தெந்த மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் இல்லையோ அந்த மாவட்டங்களிலே தனியார் சட்டக் கல்லூரிகளைத் தொடங்கலாம் என்று சட்டத்திலே திருத்தம் செய்ததன் விளைவாக, இப்போது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் மாவட்டத்திலே யாராவது தனியார் சட்டக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்வந்தால், கண்டிப்பாக அது அரசால் பரிசீலனை செய்யப்படும். அரசின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, வருகின்ற நிதியாண்டுகளிலே அது ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

**திரு. C.V. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பட்டுக்கோட்டையிலே தற்போது இயங்கி வரும் கிளைச் சிறைச்சாலை பிரதான வீதியிலே அதுவும் G.H. மற்றும் Bus stand–க்கு பக்கத்தில் மக்கள் அதிகம் கூடுகின்ற இடத்திலே இருந்து வருவதால், இப்போது அந்த G.H.–க்கு இடமும் நெருக்கடியாக இருப்பதால் அந்த இடத்தை அரசு மருத்துவமனைக்கு வழங்கி, வேறு இடத்திற்கு அந்த கிளைச் சிறைச்சாலையை மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டுக்கோட்டை நகர மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற கிளைச் சிறைச்சாலையை ஊருக்கு வெளியிலே மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். பொதுவாகவே, அன்றைய காலத்திலே அமைந்திருக்கின்ற கிளைச் சிறைகள், தாலுகா அலுவலகத்தோடு ஒட்டி அமைந்திருக்கின்றன. திண்டிவனம் நகரத்திலும் அப்படித்தான் நகரத்தின் மத்தியிலே கிளைச் சிறையும், தாலுகா அலுவலகமும் அமைந்திருக்கிறது. பல்வேறு இடங்களிலே அப்படி அமைந்திருக்கின்ற அந்தக் கிளைச் சிறைகளையெல்லாம் துறையின் மூலமாகக் கணக்கெடுக்கச் சொல்லி, ஆய்வு செய்யச் சொல்லி அப்படிப்பட்ட கிளைச் சிறைகளையெல்லாம் ஊருக்கு வெளியிலே கொண்டு செல்வதனால் அந்தக் கிளைச் சிறையையும் விஸ்தீரணமாகக் கட்டுவதற்கும் வசதியாக இருக்கும். நகரத்தின் மையப் பகுதியில் இருக்கின்ற அந்த இடங்களை வேறு பணிகளுக்காக, அரசு நிருவாகத்திற்குப் பயன்படுத்துவதற்கும் வசதியாக இருக்கும் என்று ஏற்கெனவே துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

## பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***19044—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[2019 ஜனவரி 5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

**திருமதி ப. சத்யா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அன்புத் தம்பிகளான மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'எனக்குப் பின்னாலும் 100 ஆண்டுகள் கழகமே தமிழகத்தை ஆளும்' எனும் வேதம் தந்த மாபெரும் மக்கள் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின் மக்கள் நல அரசில் வருங்கால சமுதாயத்தை வழிநடத்தப் போகும் மாணவ, மாணவிகளின் கல்வி நலனைக் கருத்தில்கொண்டு, பண்ருட்டி தொகுதியின் பிரதான நகரமான பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைத்திட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், சுயநிதி கல்லூரிகள் 16-ம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தினுடைய இணைவு பெற்ற கல்லூரி ஒன்றும், உணவு மேலாண்மை மற்றும் பயிலகக் கல்லூரி ஒன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதிலே அரசு கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மட்டும் மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 720, அதிலே 198 இடங்கள் காலியாக உள்ளன. தனியார் சுயநிதி கல்லூரிகளிலே 6,390 இடங்கள் ஒப்பளிக்கப்பட்டதில் 3,258 இடங்கள் காலியாக உள்ளன. ஆகவே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில்*



*2019 ஜனவரி 5]*

*ஏற்கெனவே இருக்கின்ற கல்லூரிகளிலேயே மாணக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மேலும், புதிதாக ஒரு கல்லூரி தொடங்குகின்ற வாய்ப்பு மற்றும் சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

**திருமதி ப. சத்யா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி நகரின் நான்கு திசைகளிலும் 50 கிலோ மீட்டர் தூரத்தில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றுகூட இல்லை. போதுமான இடவசதி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ளது. அங்கு கல்லூரியை அமைத்துக் கொடுத்தால், கடலூர் மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு அது பயனுள்ளதாக அமையும். ஆகவே, தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பண்ருட்டி நகரில் ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்து, தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா வழி தொடரும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 'ஆஞ்சநேயர் ஜெயந்தி' ஆகும். அசோகவனத்தில் சீதை சிறையில் இருக்கின்றபோது, இராமபிரானின் தூதுவராக ஆஞ்சநேயர் சென்று, சீதையை*

[2019 ஜனவரி 5

சந்திக்கும்போது, அவர் கணையாழியைக் கொடுத்து, முத்திரை மோதிரத்தை அடையாளமாகப் பெறுகிறார். அதனைப் பெற்றுக்கொண்டு, 'தாயே! என்னை ஆசீர்வதியுங்கள்' என்று கேட்கிறபோது, பொதுவாக பெரியவர்கள் ஆசீர்வாதம் செய்யும்போது 'அட்சதையையோ அல்லது மலர்களையோ தூவுவது வழக்கம்' என்பதால், சீதை சுற்றுமுற்றும் பார்க்கிறார். ஆனால், அங்கு எதுவுமே இல்லாதபோது, பக்கத்தில் வெற்றிலைக் கொடி ஒன்றைப் பார்க்கிறார். வெற்றிலைக் கொடியைப் பார்த்தவுடன், அதிலிருந்து இரண்டு இலைகளைக் கிள்ளி எடுத்து, எத்தனை இலைகள், இரண்டு இலைகளைக் கிள்ளி எடுத்து, ஆசீர்வதித்து, 'நீ என்றைக்கும் சீரஞ்சீவியாக இரு, இந்த இலை உனக்கு வெற்றி இலையாக இருக்கட்டும்' என வாழ்த்தி அனுப்புகிறார். ஆகவே, ஆஞ்சநேயர் பிறந்த இந்த தினத்திலே, நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், (குறுக்கீடு) இன்றைக்கு அந்த இரட்டை இலையைப் பெற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள், இன்றைக்கு எடுக்கிற முடிவுகள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அறிவிக்கிற அறிவிப்புகள் 'வெற்றி தருபவையாக இருக்கட்டும்' என்று ஆஞ்சநேயரை எண்ணி, வாழ்த்துகிறேன். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், என்னுடைய திருநெல்வேலி மாவட்டம் கல்வியில் மிகச் சிறந்த மாவட்டம் ஆகும். தென்னகத்தின் Oxford என்றழைக்கப்படுகின்ற. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** தென்னகத்தின் Oxford என்று அழைக்கப்படுகின்ற ஊராகும். ஆனால், எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளே இல்லையென்ற அவப் பெயர் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயர் சொல்கிற இந்த அரசு, அந்த அவப் பெயரை நீக்கி, ஒரு நல்ல பெயரை ஏற்படுத்துகின்ற வகையில், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும். அதையும் வள்ளியூரில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறேன். எதற்காக வள்ளியூரில் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்கிறேன் என்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் பெயர் பழனிசாமி. எனவே, பழனிசாமி அவர்களின் தலைமையில் இயங்கும் நம்முடைய அரசு



2019 ஜனவரி 5]

வள்ளியின் பெயரில் இருக்கிற எங்கள் வள்ளியூருக்கு அதனைத் தந்தால் பொருத்தமாக இருக்குமென்பதால், வள்ளியூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசின் முன்பாக சமர்ப்பிப்பதோடு, அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தொடர்ந்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரியானது எங்கெங்கு தேவைப்படுகிறது என்பதைக் கருத்தில்கொண்டு, 16 கல்லூரிகளை வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் இந்தக் கல்வியாண்டிலேயே 5 கல்லூரிகளை தேவைப்படுகின்ற இடங்களில், மாணக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கின்ற இடங்களில் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே, வரும் கல்வியாண்டிலே அந்தப் பகுதி மாணாக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில், அரசு அதனை அமைப்பது பற்றி பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

## நூற்பாலை

***25107—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*[2019 ஜனவரி 5*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

*முற்பகல் 10—55*

**திரு. அ. நல்லதம்பி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லையென்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய தொழிற்சாலைகள் இல்லாத ஒரு பின்தங்கிய பகுதியாக இருந்து வருகிறது. இப்பகுதியில் படித்த இளைஞர்களும், இதர தொழிலாளர்களும் தங்களுடைய வாழ்வாதாரத்தைக் கருதி, தமிழகத்திலுள்ள பல்வேறு பெருநகரங்களுக்கும், அண்டை மாநிலங்களுக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி விளைநிலங்களை உள்ளடக்கிய பகுதியாகும். வேளாண்மையை மட்டுமே நம்பி வாழும் இப்பகுதி விவசாயிகள் அதிகமான பரப்பளவில் பருத்தியை சாகுபடி செய்து வருகின்றனர். மாடப்பள்ளி உழவர் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகவும், அரசின் திருப்பத்தூர் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாகவும் ஏறத்தாழ 40 ஆண்டுகளாக அரசின் சார்பில் இங்கே பருத்தியைக் கொள்முதல் செய்து வருகின்றனர். எனவே, திருப்பத்தூரை மையமாகக் கொண்டு நூற்பாலை அமைக்கப்பட்டால், இப்பகுதி தொழிலாளர்களுக்கும், படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்குகின்ற விதமாக அமையும். மேலும், இது விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் இருக்குமென்பதால் இந்த அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.*



*2019 ஜனவரி 5]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையானது 1—11—1965 அன்று 30,240 கதிர்களுடன் வேலூர் மாவட்டம், அரியூர் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நூற்பாலை பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நஷ்டத்தில் செயல்பட்டு வந்ததால், 1—12—1997 முதல் செயலிழந்தது. ஆலையின் குவிந்த நஷ்டம் 35.32 கோடி ரூபாயாகும். இந்நூற்பாலையின் கடன் பொறுப்புகள் 38.97 கோடி ரூபாயாகும். இந்நூற்பாலையில் குவிந்த நஷ்டம் சொத்தின் மதிப்பைவிட அதிகமாகிவிட்ட காரணத்தால் ஆலையை மேற்கொண்டு இதற்குமேல் நடத்த முடியாது என்று முடிவு செய்து, அந்த ஆலையானது மூடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது விவசாயிகள் அந்தப் பகுதிகளில் பருத்தியை அதிகமாக உற்பத்தி செய்து வருகிறார்கள் என்று தெரிவித்தார். அதற்காகவாவது இந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள். தமிழகத்தில் பருத்தி 5 சதவிகிதம் மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியில் 95 சதவிகிதம் வெளி மாநிலங்களிலிருந்துதான் தருவிக்கப்படுகிறது. தமிழகத்தில் 5 சதவிகிதம் பருத்தி மட்டுமே உற்பத்தியாகிற காரணத்தினால்தான் இந்தத் தொழில் நலிவடைகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

**திரு. அ. நல்லதம்பி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, 2.40 இலட்சம் கோடி ரூபாயை தமிழகத்தில் தொழில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யப் போவதாக அறிவித்தார். அதை நீங்களும் பாராட்டி, வரவேற்றீர்கள். அதனைத் தொடர்ந்து தற்போது மீண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறப் போவதாக அறிவிப்பு வந்தவண்ணம் உள்ளது. இந்த மாநாட்டின் வாயிலாக பின்தங்கிய நிலையிலும்,*

[2019 ஜனவரி 5

நலிவுற்ற பகுதியாகவும் இருக்கும் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நாளுக்கு நாள் நலிவுற்றுவரும், பருத்தியை உற்பத்தி செய்துவரும் விவசாயிகளை ஊக்குவித்து, பருத்தியை உற்பத்தி செய்யும்பொருட்டு, நூற்பாலை அமைத்திடவோ அல்லது துறை சார்ந்த வேறு தொழிற்சாலைகளை அமைத்திடவோ இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு தொழில் சார்ந்த தொழிற்சாலைகளை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இன்னொரு சமயத்தில், வேறு ஒரு கேள்வியின் மூலமாக இந்த அவையில் முன்வைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***37691—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஒன்றியம், பனையம்பள்ளி ஊராட்சி, பனையம்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2019 ஜனவரி 5]

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி, பவானிசாகர் ஒன்றியத்தில் ஏற்கெனவே இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அந்த ஒன்றியத்தினுடைய மக்கள் தொகைக்கேற்ப மேலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே, வருங்காலத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க துறை ரீதியாக உரிய கருத்துரு பெற்று, அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

**திரு. எஸ். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

பவானிசாகர் பகுதியில் அமைந்துள்ள பவானி ஆற்றின் உபரி நீரை கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட மக்களின் நலன் கருதி, நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டமான அத்திக்கடவு–அவிநாசி திட்டத்திற்கு, 1,652 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, விரைவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் ஆகியோரால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்படும் என்ற நற்செய்திக்கு, தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையம்பள்ளி ஊராட்சி அருகில் ஐந்து ஊராட்சிகளும் மற்றும் ஒரு பேரூராட்சியும் உள்ளன. அந்தப் பகுதிகளில் 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஈஸ்வரன்:** இப்பகுதி மக்கள் 15 கி.மீ. தொலைவில் உள்ள புஞ்சை புளியம்பட்டி வட்டார ஆரம்ப சுகாதார

[2019 ஜனவரி 5

நிலையத்திற்கு செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், இப்பகுதியை மையமாகக் கொண்டு பனையம்பள்ளியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர பரிசீலிக்கப்படும் என்ற ஒரு நற்செய்தியை வழங்கிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதியில் அரசூர் பகுதியில் 3 ஊராட்சிகள் அமைந்துள்ளன. 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். அப்பகுதியில் உள்ள மக்கள் 20 கி.மீ. தொலைவில் உள்ள உக்கடம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், தாளவாடி மலைப் பகுதியிலிருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ள சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்குச் சென்றுதான் பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த மலைப் பகுதியிலிருந்து வருகிறபோது, 27 கொண்டைஊசி வளைவுகள் இருப்பதால், அடிக்கடி போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. அப்பகுதியில் உள்ள மக்களின் நலன் கருதி, தாளவாடி அரசு மருத்துவமனையில் புதிய பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்துத் தருமாறு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களை பணிவன்போடு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் ஒரே கல்லிலே பல மாங்காய்களை அடிக்க முயற்சி செய்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். இரண்டாவது கேள்வி கேட்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** ஒரு மாங்காய் நிச்சயமாக விழும் உங்களுக்கு. ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் கடம்பூர், ஓங்கல்வாடி, சூசைபுரம் ஆகிய 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களையும், சத்தியமங்கலத்தில் ஒரு



2019 ஜனவரி 5]

நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தையும் அமைத்துக் கொடுத்து, உக்கடத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தியும் இருக்கின்றோம். மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி, மக்கள் நல்வாழ்வுத் துறையில் மகத்தான உயர்வு பெற்றிருக்கிறது. தாங்கள் கேட்ட பவானிசாகர் ஒன்றியத்தில் இன்னொரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

**திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் இயங்கி வருகின்ற அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருகிறார்கள். அவர்களைச் சரியான முறையில் கவனிப்பதற்கு அதிக அளவில் மருத்துவர்கள் தேவை. அங்கு காவலர்கள் இல்லை, குடிதண்ணீர் இல்லை. அந்த அதிநவீன மருத்துவமனை, மறைந்த நம்முடைய தமிழகத்தின் வரலாற்றுத் தலைவர் ஐயா கலைஞர் அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. இன்றைக்கு ஒரு காவலர்கூட இல்லாத நிலையில் இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனையில் மருத்துவர்கள் அதிகமாகத் தேவைப்படுவதால் சிறப்பு வசதி செய்யப்பட வேண்டும். அவசர அவசியத்தை முன்னிட்டு மருத்துவ உதவிகளைச் செய்வதற்கு மருத்துவர்களை அதிக அளவில் நியமனம் செய்து, அங்கே உள்ள குறைகளைத் தீர்க்க வேண்டும். 4 வழிச் சாலையெல்லாம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு அங்கு நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. அங்கே அவசர மருத்துவ அறை இல்லாத காரணத்தால், விபத்துக்கு உள்ளாகின்றவர்களை Stanley Medical College and Hospital, G.H. போன்ற மருத்துவமனைகளுக்குத்தான் அழைத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்த மருத்துவமனை அப்படித்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குரிய அவசியத்தைக் கருதி, நம்முடைய அமைச்சர் அவர்கள் தேவையானவற்றைச் செய்து தருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருவொற்றியூர் அரசு மருத்துவமனையை நானும் 2 முறை ஆய்வு செய்திருக்கின்றேன். சுனாமி காலத்தில் கட்டப்பட்ட நல்ல கட்டமைப்பு கொண்ட ஒரு மருத்துவமனை. அங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற தேவைகளை நிச்சயமாக அரசு கனிவோடு பரிசீலனை செய்யும். நாங்கள் சில இடங்களை identify செய்திருக்கிறோம். தமிழ்நாடு முழுக்க தாங்கள் குறிப்பிடுவதுபோல சென்னை புறநகரில் விபத்து ஏற்பட்டால், Stanley Medical College and Hospital அல்லது சென்னைக்குத்தான் வர வேண்டுமென்ற நிலையை மாற்றி, 75 இடங்களை identify செய்து, விபத்துக்கான சிகிச்சை மையங்களாகத் தரம் உயர்த்தி, குறிப்பாக தாம்பரம், திண்டிவனம், விழுப்புரம் மற்றும் Highways–ல் இருக்கக்கூடிய எல்லா பகுதிகளையும், திருச்சி, அதைத் தாண்டி Highways–ல் இருக்கக்கூடிய துவரங்குறிச்சி, மதுரை—National Highways-NHAI. நீங்கள் சொல்லக்கூடிய 4 வழிச்சாலையில்-எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய-சாலை ஓரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளைத் தேர்வு செய்து, 75 Accident Trauma Care Centres–ஐ உருவாக்குகிறோம். அதுமட்டுமல்லாமல், நிலைப்படுத்தும் மையங்களை உருவாக்குகிறோம். அதுதான் TAEI என்கின்ற ஓர் அற்புதமான திட்டம். அத்திட்டத்திற்கு 190 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். அந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டதால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விருது வழங்கியுள்ளார்கள். சென்னையில் வரலாறு காணாத அளவிற்கு 8.6 என்றிருந்த மரணத்தின் சதவிகிதத்தை 11 மாதங்களில் 2.8 ஆகக் குறைத்து வரலாற்று சாதனை படைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள திருவொற்றியூர் பகுதியிலும் அதற்கான சாத்தியக்கூறுகள் இருந்து, அங்கு விபத்துகள் அதிகமாக ஏற்பட்டு, referral இருக்கக்கூடிய நிலை இருந்தால், அதைக் கண்டறிந்து தாங்கள் குறிப்பிடுகின்றபடி அதை Accident Trauma Care Centre–ல் II Grade–ல் உருவாக்குவதற்கான வாய்ப்புகளை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை அன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். அங்கே ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது அனைத்து வசதிகளுடன்கூடிய மருத்துவமனையோ இன்று வரை உருவாக்கப்படவில்லை. ஆனால், அன்றாடம் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். அங்கு வசிக்கின்ற ஏழை, எளிய மக்களெல்லாம் இன்றைக்கு மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால், நீண்ட தூரத்தில் இருக்கின்ற சென்னைக்குத்தான் வர வேண்டிய நிலை இருக்கிறது. செம்மஞ்சேரியில் சுனாமி நகர்ப் பகுதியில் ஒரு மருத்துவமனை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதில் நிரந்தர மருத்துவர்கள் இல்லாத நிலையில் ஒப்பந்த அடிப்படையில்தான் மருத்துவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருக்கின்ற machines–ம் சரியான முறையில் இயங்கவில்லை. அங்கு வசிக்கின்ற மக்கள் அனைவரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களாகவே இருப்பதால், அங்கிருக்கின்ற ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, உடனடியாக அனைத்து வசதிகளுடன்கூடிய மருத்துவமனையை பெரும்பாக்கம் பகுதியில் உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் இதே கேள்வியை ஏற்கெனவே ஒரு முறை கேட்டிருக்கின்றார். அப்பொழுதே நான் அதற்குப் பதில் சொல்லியிருந்தேன். சோழிங்கநல்லூர் பகுதியில் 100 படுக்கைகள் கொண்ட ஒரு புறநகர் மருத்துவமனையைக் கட்ட அரசு திட்டமிட்டு, அதற்கான நிலம் identify செய்யும் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. ஏற்கெனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் மற்றும் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம்

*இதுசம்பந்தமாகக் கோரிக்கை வைத்திருந்தார்கள். புறநகர்ப் பகுதிகளில் மருத்துவ சேவையை உறுதிப்படுத்துவதற்கு அரசு* top priority *கொடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் புறநகர்ப் பகுதியிலிருந்து நகர்ப்புறப் பகுதியை அணுகுவதற்கான கால அவகாசம் அதிகமாக இருக்கின்றது. பெருகி வருகின்ற மக்கள்தொகையால்* traffic congestion *அதிகமாக இருக்கின்றது. அதனால்தான், நாம் இப்போது கிழக்குக் கடற்கரைச் சாலையை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்கும், தற்போதைய சட்டமன்றக் கூட்டத் தொடருக்கும் இடைப்பட்ட காலத்தில் 2* Accident Trauma Stabilising Centres, *அதாவது விபத்துகளை நிலைப்படுத்தும் மையங்களை உருவாக்கி, விபத்தினால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளை பெருமளவு குறைத்துக் கொண்டிருக்கிறோம். மகாபலிபுரத்தில் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.* ECR road*–ல் கேளம்பாக்கம் பகுதியில் மற்றொரு நிலைப்படுத்தும் மையத்தை உருவாக்கியிருக்கிறோம். உறுப்பினர் குறிப்பிடுகின்ற சோழிங்கநல்லூர் பகுதியில் உறுப்பினர் எதிர்பார்ப்பதைவிட அதிகமாக, 100 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையைக் கொண்டுவருவதற்கான முதற்கட்டப் பணிகள் ஆயத்த நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. விரைவில் அடுத்த கட்டப் பணிகள் முழு வேகத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**20—**

## நேரடி கொள்முதல் நிலையம்

***10844—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், செந்துறையில் முந்திரிக்கு நேரடி கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் என்றும் தெய்வமாகக் குடிகொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களுக்கு முதலில் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*கஜா புயல் என்றைக்கு உருவானதோ, அன்றைக்கு அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்ததாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததாலும், நிகழவிருந்த பெரும் மனித உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. அதோடு மட்டுமல்லாமல், கஜா புயல் அடித்ததற்குப் பிறகு அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக மீட்புப் பணிகளும், நிவாரணப் பணிகளும் எந்த மாநிலத்திலும் நடக்காத அளவிற்கு சிறப்பான முறையில் நடைபெற்றன. அங்கு வெகுவாகப் பாதிக்கப்பட்ட மக்களையும், குறிப்பாக தென்னை மர விவசாயிகளையும், அந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்ற மாநிலங்களெல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு சீரும், சிறப்புமாக இருந்தன. அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அமைச்சர்களை அந்த இடத்திற்கு அனுப்ப ஆணையிட்டு, எங்களோடு பணியாற்றுவதற்கு அனுப்பி வைத்தார்கள். அதற்கு முன்பாக புயல் அடித்த மறுநாளே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வந்திருந்து அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு, மின்சாரத் துறை அதிகாரிகளை எல்லாம் அழைத்து தக்க நடவடிக்கை எடுத்து சிறப்பான முறையில் செயல்படுவதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்ததோடு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், கஜா புயலைப் பற்றி நிறைய பேசிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் கேள்விக்கு பதிலளியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னென்ன செய்தீர்கள் என்பதைச் சொல்ல வருகிறீர்கள். ஆனால், நேரம் இடம் தரவில்லை. நீங்கள் கேள்விக்கு பதிலளியுங்கள்.*

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர்,*

[2019 ஜனவரி 5

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் ஆகியோர் 10 நாட்கள் இரவு பகலாகத் தங்கியிருந்தார்கள். அங்கே மழை பெய்துகொண்டிருந்தது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அங்கு வந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள். Generatorமூலம் ஒவ்வொரு கிராமத்திற்கும் தண்ணீருக்கு ஏற்பாடு செய்தார்கள். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களும் 12 நாட்கள் இரவு பகலாகத் தங்கியிருந்தார்கள். கடும் மழையையும் பொருட்படுத்தாது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் அந்த இடத்திற்கு வந்திருந்து நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு, எங்களுடைய பாதுகாப்பு கருதி, பாதுகாப்புப் பணிகளைச் செய்து தந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கும், விவசாயிகளுக்கும் காவலனாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கும் அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வைத்த வேண்டுகோளை ஏற்று, கோடிக்கணக்கில் நிவாரணப் பொருட்களை அனுப்பியது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாடுபட்ட அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேனே தவிர, வேறொன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், செந்துறையில் முந்திரிக்கு நேரடி கொள்முதல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.



2019 ஜனவரி 5]

**திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தான், தன் குடும்பம் என வாழ்கின்ற மானிடப் பிறவியாகப் பிறந்து, தனக்கென வாழாமல் தமிழக மக்களுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் ஆட்சியைத் தொடர விடாமல், வந்த இடையூறுகளையெல்லாம் தனது வெற்றிப் படிகளாக்கி, அதன்மேல் ஏறி நின்று நல்லதொரு ஆட்சியைத் தந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த அவையில் உரையாற்றுவதற்கு, என்னை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் பரிந்துரை செய்து, நல்லவர்களாம் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் கரங்கள் ஓங்க, அவர்களோடு நீ பணியாற்ற வேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் தஞ்சை தெற்கு மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் அருமை அண்ணன் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களையும் வணங்குகிறேன்.

குன்னம் சட்டமன்றத் தொகுதியில் அதிகப்படியான விவசாயிகள் முந்திரி பயிரையே நம்பியிருக்கிறார்கள். அங்கு சுமார் 25,000 ஏக்கர் நிலங்களில் முந்திரி பயிரிடப்படுகிறது. தங்களது படித்த பிள்ளைகளுக்கு பணி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தங்கள் விளை நிலங்களையெல்லாம் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அரசு சிமென்ட் ஆலைகள் மற்றும் தனியார் சிமென்ட் ஆலைகளுக்கு விற்றுவிட்டு, விளை நிலம் இல்லாத விவசாயிகளும்கூட அங்கிருக்கக்கூடிய அரசு புறம்போக்கு மற்றும் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில், முந்திரி பயிர் செய்து வருகிறார்கள். அரசு புறம்போக்கு நிலங்களில் சுமார் 5,000 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் முந்திரி பயிர் செய்து, முந்திரி பயிரையே தனது வாழ்வாதாரமாகக் கொண்டு அங்கு பிழைப்பு நடத்தக்கூடிய அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், ஏன்? இன்னும் சொல்லப்போனால், அருகில் இருக்கக்கூடிய ஆண்டிமடம், ஜெயங்கொண்டத்திலும்கூட இதுபோன்று முந்திரி பயிரை மட்டுமே தனது விவசாயப் பயிராகப் பயிரிடக்கூடிய அந்த மக்கள் பயன்பெறக்கூடிய அளவில் ஒரு நேரடி முந்திரி கொள்முதல் நிலையத்தை அமைத்துத் தரவேண்டுமென்றும்,

[2019 ஜனவரி 5

அதை மீண்டும் பரிசீலிப்பார்களா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னம் தொகுதி, செந்துறையில் 9,454 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்பட்டு, 3,781 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு, 3,402 மெட்ரிக் டன் விற்பனை உபரியாகவும் பெறப்பட்டு வருகிறது. மேலும், குன்னம் தொகுதிக்கு அருகில் முறையே 14 கி.மீ. மற்றும் 19 கி.மீ., தொலைவில் உள்ள அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் எடுத்துவரும் அனைத்து விளைபொருட்களையும், மறைமுக ஏலம்மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்து, நல்ல விலை கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை குன்னம் தொகுதி முந்திரி விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், விவசாயத்தை பிரதானமாகக் கொண்ட விவசாயிகள் நிறைந்த மாவட்டம், அதில் மானாவாரி பயிராக இதுவரை பருத்தி பயிர் செய்யப்பட்டு வந்தது. பல வியாதிகளின் தாக்குதல் காரணமாக, அதற்கு மருந்தடித்து, பருத்தி பயிரிடுவதை மாற்ற எண்ணி, மக்காச்சோளத்தை விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். தற்போது படை புழு தாக்குதல் காரணமாக அந்தப் பயிர்களையும் அறுவடை செய்ய முடியாமல், மக்காச்சோளத்தை இயந்திரத்தின்மூலம் தூளாக்கி, அதை பக்கத்திலிருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திற்கு மாட்டுத் தீவனமாக அனுப்புகின்ற அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதிகப்படியான மக்காச்சோளத்தை விளைவிக்கின்ற மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம்தான். ஒன்றாம் தேதியானால் தனது மாத வருமானம் எவ்வளவு என்பதை உறுதி செய்து கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளெல்லாம், மக்கள் பணியைச் செய்யாமல் ஓரிரு தினங்களுக்கு அரசை ஸ்தம்பிக்க வைக்கும் வகையில்,



2019 ஜனவரி 5]

தெருக்களில் வந்து தனது வருமானத்தை உயர்த்திக்கொள்ளப் போராடுகின்றார்கள். தமிழகத்தில், தனது வாழ்வாதாரத்திற்காக மண்ணையும் விண்ணையும் நம்பியிருக்கக்கூடிய விவசாயிகள், தமக்கு ஏற்படுகின்ற இழப்பை, வருடத்திற்கு ஒரு முறை ஈட்டுகின்ற தனது வருமானத்தை நிச்சயிக்க முடியாமல் தவிக்கிறார்கள். இந்த முறை வானும், மண்ணும் பொய்த்துவிட்டதன் காரணமாக அந்த மக்காச்சோள விவசாயிகளுக்கு நமது அரசு ஏதேனும் நிவாரணத்தை வழங்க முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் மன உணர்வை, அவர்களிடம் ஏற்பட்டிருக்கின்ற கஷ்டங்களையெல்லாம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே விரிவாக, தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். விவசாயிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் உழவன் மகன், விவசாயிகளின் காவலன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் கோரிக்கையை எடுத்துச் சொல்லி, தக்க நிவாரணம் கிடைப்பதற்கு என்னென்ன வழிவகைகளைச் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து தரப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகத்தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா (Botanical Garden) ஊட்டியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் அந்தப் பூங்காவிற்கு இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். கடந்த மாதம் முதல் அந்தப் பூங்காவின் நுழைவுக் கட்டணம் சிறுவர்களுக்கு ரூ.15/–லிருந்து ரூ.20/– ஆகவும், பெரியவர்களுக்கு ரூ.30/–லிருந்து ரூ.40/– ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அதனைத் திரும்பப் பெற வேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் இலட்சக்கணக்கில் அங்கு வந்துசெல்லும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஒன்றும் செய்து தரப்படவில்லை. ஊட்டி தாவரவியல் பூங்கா மற்றும் மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட Rose Garden ஆகியவற்றிலிருந்து வருமானமாக சுமார் 10, 15 கோடி ரூபாய் வருகின்றது. அதில் ஒரு பைசாகூட ஊட்டி நகராட்சிக்கென்று செலவு செய்யப்படுவதில்லை. சாலை சீரமைப்பிற்காக மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் 3 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவையில் அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற வருமானம் மற்ற மாவட்டங்களுக்குச் செல்லாமல், அதில் 30 சதவிகிதம் அல்லது 40 சதவிகித நிதியை இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கி, நகராட்சிக்கு உதவ வேண்டுமென்று இந்தப் பேரவை வாயிலாகக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு தனி கேள்வி போட்டு கேட்டுக்கொள்ளுங்கள். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*முற்பகல் 11–20*

## 2. தகவல் கோரல்

### (அ) மேதகு ஆளுநர் அவர்கள் 2–1–2019 அன்று உரை நிகழ்த்தும்போது அவரது கூடுதல் தலைமைச் செயலாளர் பேரவைத் தலைவருக்கு இணையாக பேரவையில் அமர்ந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். யார் மீதும் புகார் கூறுகிற பிரச்சினை அல்ல. ஏதோ எனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாகவும், இந்த மன்றத்தினுடைய பெருமையையும், மன்றத்தை ஆளுகிற தங்களின் பெருமையையும் குறித்துதான் நான் இங்கே ஒரு





பிரச்சினையை எழுப்புகிறேன். யாரையும் குறை சொல்வதற்காக அல்ல. இந்த மன்றம் மகத்தான சர்வ வல்லமை படைத்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டும்தான் இந்த அவையிலே வந்து உட்காரக்கூடிய சக்தி படைத்தவர்கள். இந்த மன்றத்தின் மதிப்பைக் காப்பாற்ற வேண்டியது எல்லோருடைய கடமை. அதிலே எந்தவித குறையும் இதுவரையிலும் நடக்கவில்லை. இந்த மன்றத்தில் நம்மைத் தவிர யாரும் நுழைந்துவிட முடியாது. தலைமைச் செயலாளரும், அமைச்சர்களுடைய செயலாளர்களும் யாரும் நுழைய முடியாது. தொப்பி போட்ட டவாலிகள் மட்டும் உள்ளே வந்து போகலாம். சிறப்பான காலங்களில் இந்த அவையில் நம்முடைய கவர்னர் பெருமான் வரலாம். அல்லது விழாக் காலங்களில் மாண்புமிகு முதல்வரும், தாங்களும் எடுக்கிற முடிவிற்கேற்ப விருந்தாளிகள், ஒரு விதிவிலக்காக இந்த அவையிலே வந்து அமரலாம். அவர்களைத் தவிர வேறு யார் இந்த மன்றத்திற்குள்ளே வந்தாலும் அவர்களை இந்த மன்றம் தண்டிக்கும், சிறைச்சாலைக்கும் அனுப்பும். ஆகையினாலே ,இந்த மன்றத்தினுடைய மாண்பு காப்பாற்றப்பட்டிருக்கிறது, காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதை நான் ஒன்றும் சொல்லவில்லை.

இரண்டாவது, தங்களைப் பற்றியது. தாங்கள் சர்வ வல்லமை படைத்தவர்கள். சபாநாயகராக இருக்கிறவருக்கு—என்னுடைய அருமை நண்பர் பாண்டியன் அவர்கள் சொன்னதைப் போல—வானளாவிய அதிகாரம் உண்டு, அதை நான் மறுக்கவில்லை. காரணம், எந்த Court–ம் தங்களைக் கேள்வி கேட்க முடியாது. As a student of Constitutional History, நான் படித்தவரையில், சபாநாயகரை எந்த நீதிமன்றமும் தண்டிக்க முடியாது, அழைக்க முடியாது. எந்த நீதிமன்றமும் உங்களுக்கு கட்டளையிட முடியாது. சட்டம் படித்த நண்பர்களுக்கெல்லாம் தெரியும். Constitution–ல் Civil Case ஒன்று; உத்தரப் பிரதேசத்தில் சபாநாயகர், ஒருவரை suspend செய்துவிட்டார். அவர் சென்று High Court–ல் stay வாங்கிவிட்டார். Stay வாங்கியவுடன் சபாநாயகர் சொன்னார், என்னுடைய order–ன் மேல் stay கொடுத்த judge யார்? இரண்டு பேரையும் arrest செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார். Police இரண்டு Judges–ஐயும் arrest செய்ய போய்விட்டார்கள். Supreme Court–க்குப் போனதற்குப் பிறகு ஜனாதிபதி தலையிட்டு ஒரு சமரசம் செய்தார். Because it is the separation of power; Legislature–ம் Judiciary–ம் தனித் தனி, independent, அதேநேரத்தில் இணை பிரியாத

[திரு. துரைமுருகன்] [2019 ஜனவரி 5

நண்பர்களாக இருக்க வேண்டும் என்பது. அப்படித்தான் தாங்கள் இந்த மன்றத்தை இதுவரையில் ஒரு கண்ணியமிக்க முறையில், எல்லோருடைய மதிப்பைப் பெறும் வகையில் நடத்துகிறீர்கள். சில நேரங்களில் சிலர் வந்து போகலாம். நீங்கள்கூட கேட்கலாம், ஒருமுறை நீங்கள் எங்களோடு மோதியிருக்கிறீர்கள் என்று. மோதினோம், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதற்காக நாங்கள் பட்ட பாடு எங்களுக்குத் தெரியும். எங்கள் தலைவர், எங்களை நிற்க வைத்துச் சொன்னார், “இந்த இயக்கத்தினுடைய நோக்கமே எப்பேர்பட்டவர்கள் எல்லாம் எங்கே அமர வேண்டும் என்பதற்காக, அந்த அம்மா அவர்கள் அமைத்து வைத்திருக்கிறார்கள். நீங்கள் அதை மதிக்க வேண்டுமே தவிர, செய்தது தவறு” என்று எங்களைக் கண்டித்தது இன்றைக்கு அல்ல; அன்றைக்கே நான் தங்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். எனவே, இந்த மன்றத்தில் எங்களுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் நீங்களும் இதுவரையிலே பாதுகாப்பாக இருந்திருக்கிறீர்கள். உங்கள் மீதும் எங்களுக்கு மரியாதை இருக்கிறது. எனவே, இந்த மன்றத்தில் நுழையக்கூடிய அதிகாரம் கவர்னருக்கு உண்டு. அதிலும் தங்கள் Chair–லும் அமரக்கூடிய அதிகாரம் அவருக்கு இருக்கிறது. அதிலும் வேறு சில மாநிலங்களில் சபாநாயகருடைய நாற்காலியைக்கூட கவர்னருக்குக் கொடுக்கமாட்டார்கள். அவருக்கென்று ஒரு நாற்காலி போட்டுத்தான் உட்கார வைப்பார்கள். காரணம், நீங்கள் அமர்கிற ஆசனம். இந்த நாட்டில் எவருக்கும் இல்லாத அதிகாரம் படைத்த ஓர் ஆசனம். எனவே, இந்த மன்றத்தில் இதை நான் இப்போது கொண்டு வருவதற்குக் காரணம், நான் 1971–லிருந்து சபையிலே இருக்கிறேன், பார்க்கிறேன், கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கவர்னர் வருகிறபொழுது, அவரோடு செயலாளர் வரலாம். பிறகு அவரோடு வருகிற செயலாளர் பின்னாலே போய், Chief Secretary பக்கத்தில்தான் உட்காருவார். ஆனால், நான் முதல் முறையாகப் பார்க்கிறேன், இந்தச் சபையில் அன்றைக்கு நான் இல்லாவிட்டாலும் அவருடைய செயலாளராக இருக்கக்கூடியவர் எனக்கு வேண்டியவர், தனிப்பட்ட முறையில் நண்பர், அது வேறு. ஆனால், அவர் இந்த அவையில் தங்களுக்கு இணையாக பக்கத்திலே ஒரு chair போட்டு, அவர் பக்கத்திலே ஒரு நாற்காலி போட்டு அமர்ந்திருந்தது இந்த மன்றத்தினுடைய மாண்பைக் குலைக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்பது என் பணிவான வேண்டுகோள். எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை. காரணம்,உங்களுக்கு இணையாக அமரக்கூடிய அதிகாரம் ஒருவருக்கும் இந்தச் சபையிலே கிடையாது. You are the Supreme.



2019 ஜனவரி 5] [திரு. துரைமுருகன்]

அதனால்தான் வணக்கத்தை உங்களுக்குக் கொடுக்கிறோம். ஆகையினால், நீங்கள் கவர்னருக்குக் கொடுத்தீர்கள். ஆனால், உங்களுக்கு இணையாகவே ஒரு நாற்காலி போட்டு ஒரு I.A.S. Officer, ஒரு Secretary அவர் உட்கார்ந்திருக்கிறார். Chief Secretary–யே இங்கு உட்கார முடியாது.

முற்பகல் 11–25

எல்லா Secretaries–க்கும் பெரிய Secretary அவர்கள்தான். அவர்களே உட்கார முடியாது. எனவே, இந்த மன்றத்தினுடைய மாண்பைக் குலைக்கிற வகையில் கவர்னருடைய செயலாளர், ஒரு I.A.S. Officer, இந்த அவையில் உங்களுக்கு இணையாக நாற்காலி போட்டு அமர்ந்திருந்தது மன்றத்தினுடைய கௌரவத்தைக் குறைப்பதுபோல இருக்கிறது என்பதற்காக, பழைய உறுப்பினர் என்ற முறையில் என் நெஞ்சில் ஏற்பட்ட வேதனையை உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவையாவது நல்லபடியாக இருக்கட்டும் என்ற முறையில், அடுத்த முறை நம்முடைய மாண்புமிகு முதல்வரும்,—இதற்கு பதில் சொல்ல வேண்டியவர் ஒரே ஒருவர், நம்முடைய அவை முன்னவர். அவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். சொல்லாவிட்டாலும் சரி, நான் ஒன்று கேட்கிறேன். நடந்து விட்டதற்கு தண்டிக்க முடியாது. மறப்போம், ** எனவே, வருகிற காலத்தில் இப்படி நடக்கக் கூடாது என்ற வேண்டுகோளை தங்களுக்கும், மாண்புமிகு முதல்வருக்கும், மாண்புமிகு அவை முன்னவருக்கும் வைத்து நான் அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், எனக்கு இருக்கிற அதிகாரங்களைப் பற்றியும், என்னைப் பற்றியும், தனி அதிகாரங்களைப் பற்றியெல்லாம் விளக்கமாக இந்த மன்றத்திலே தெரிவித்ததற்கும் தனிப்பட்ட முறையிலே என்மீது வைத்திருக்கிற மரியாதைக்கும், நீங்கள் வைத்திருக்கிற அன்பிற்கும் என்னுடைய நன்றி என்றைக்கும் உங்களுக்கு இருக்கிறது. அதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், நீங்கள் எழுப்பியிருக்கிற இந்தப் பிரச்சினை—நேற்று இந்த அவையிலே ஒரு பிரச்சினையாக இல்லை. ஏற்கெனவே உங்களுடைய ஆட்சிக் காலத்திலேயும், எல்லோருடைய ஆட்சிக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2019 ஜனவரி 5

காலத்திலேயும் (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஆளுநர் அவர்கள் வருகிறபோது அவருடைய உதவிக்காக, அவருடைய உதவியாளர் வருவது என்பது மரபாக இருந்திருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. நீங்கள் இந்த மன்றத்திலே அந்தப் பிரச்சினையை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இனி எதிர்காலத்திலே, இதை எப்படிக் கையாள வேண்டுமோ, அப்படி இந்த அரசு கையாளும் என்பதனை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கொண்டு அதைப் பெரிய விவாதமாக ஆக்கவேண்டாம். இதோடு அந்தப் பிரச்சினையை நாம் விட்டுவிடலாம். (குறுக்கீடு) நன்றி. இல்லை, இல்லை, என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, 'உங்களுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது' என்று சொல்கிறார். ஆகவே, அது என்னுடைய அதிகாரம். நான் அதை எதிர்காலத்திலே சரியாக எப்படிக் கையாள வேண்டுமோ, அப்படிக் கையாளுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். அவ்வளவுதான். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் அவர்கள் பேசுகின்றபோது, சில அதிகார வரம்புகளை இங்கே மிக அழகாக குறிப்பிட்டுச் சொன்னார். அதைக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. நீங்களே கேள்வியைக் கேட்டு, நீங்களே பதிலும் சொன்னீர்கள். அந்த பதிலில் மறப்போம், ** என்று சொன்னீர்கள். மறப்போம். ஆனால், ** வேண்டிய கடமை நம்முடைய சபாநாயகருடைய அதிகாரம். அந்த வார்த்தையை மட்டும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு,—நீங்கள் ஏற்கெனவே இம்மாதிரி இனிமேல் நடக்காமல் நாங்கள் கவனமுடன் பார்த்துக்கொள்வோம் என்று சொன்னீர்கள். அதை மட்டும் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள் வைத்த வேண்டுகோளை ஏற்று அந்த ஒரு வார்த்தையை மட்டும் எடுத்துவிட்டு, மற்றவற்றை எல்லாம் வைத்துக்கொள்ளலாம். என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். எதிர்காலத்திலே சரியாக, முறையாகக் கையாளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

## (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகாவை, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இல்லை, நீங்கள் உட்காருங்கள். நேற்று இதைப்பற்றி இந்த மன்றத்திலே நீங்கள் விரிவாகப் பேசியபோது, அதற்குரிய பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுக்குத் தெரிவித்துவிட்டார். மேற்கொண்டும் நீங்கள் அதைப் பேச வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். ஏற்கெனவே, BAC–யிலேயே (குறுக்கீடு) இல்லை, BAC–யிலேயே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். உங்களுக்குரிய பதிலை அவர் அளித்துவிட்டார். நேற்றைக்கும் நீங்கள் அதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்திலே பேசினீர்கள். பேசியதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலை உங்களுக்குத் தெரிவித்துவிட்டார். மேற்கொண்டு அதையெல்லாம் பேச முடியாது. வேண்டாம், விடுங்கள். பேசிய matter–ஐயே திரும்பத் திரும்பப் பேசுவது என்பது முறையல்ல. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு பணிவான வேண்டுகோள். அதை Business Advisory Committee–யிலே சொல்லக் கூடாது. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிச்சயமாக

நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்று சொல்கிறார். அத்தோடு விட்டு விடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்கு கொடுத்ததற்குப் பிறகு, அவரைவிட பெரிய அமைச்சர் யாரும் கிடையாது. (குறுக்கீடு) கொடுப்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஏற்கெனவே அதையெல்லாம் பேசி, ஒரு பதில் உங்களுக்கு கிடைத்தாகி விட்டது. அவ்வளவுதான். அதில் மேற்கொண்டு எதுவும் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

*முற்பகல் 11–30*

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் மற்றும் இஸ்லாமிய சிறைக் கைதிகளின் விடுதலையில் தாமதம் குறித்து சட்டமன்றப் பேரவையில் விவாதிக்க தங்களிடத்தில் அனுமதி கேட்டிருந்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. இங்கே பாருங்கள். அதெல்லாம், மேதகு ஆளுநர் அவர்களுடைய ஆளுகைக்குட்பட்ட விஷயம். அதையெல்லாம், இந்த மன்றத்திலே நாம் விவாதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அதெல்லாம் ஒன்றுமில்லை. அதெல்லாம் அரசு பரிந்துரை செய்துவிட்டது. மேதகு ஆளுநர் அவர்களுடைய ஆய்வில் இருக்கின்ற பொருள் குறித்து இங்கே நாம் பேச முடியாது. உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் மேதகு ஆளுநர் அவர்களுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அரசிடமிருந்து பரிந்துரையெல்லாம் போய்விட்டது. அதோடு விட்டுவிடுங்கள். அதற்கு மேற்கொண்டு என்ன என்பதையெல்லாம் இங்கே, இந்த அவையில் நீங்கள் விவாதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, அதெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள்.

(உறுப்பினர்கள் திரு. எம். தமிமுன் அன்சாரி, திரு. உ. தனியரசு மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)





## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு இரத்தம் ஏற்றப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு இரத்தம் ஏற்றம் செய்ததால் ஏற்பட்ட நிலை குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பார்.

**டாக்டர் V.P.B. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு எச்.ஐ.வி. தொற்றுள்ள இரத்தம் ஏற்றப்பட்ட நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அரசின் கவனத்தையும் ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரிலே கர்ப்பிணிப் பெண்ணுக்கு எச்.ஐ.வி. இரத்தம் ஏற்றியது சம்பந்தமாக நாங்கள் கொடுத்த அறிவிப்பினை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், விளக்கமாகப் பேசுங்கள். டாக்டர் V.P.B. பரமசிவம், நீங்கள் பேசுங்கள். அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் உங்களுடைய கருத்துகளை, விளக்கமாகப் பேசி, கேளுங்கள்.

**டாக்டர் V.P.B. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டு மாத கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு இரத்த சோகை இருந்த காரணத்தினாலே அவருக்கு இரத்தம் ஏற்றுவதற்காக, சிவகாசி அரசு மருத்துவமனை இரத்த வங்கியிலிருந்து வேறொருவருடைய இரத்ததை சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து இரத்தம் ஏற்றியபோது, அவருக்கு அந்த இரத்தப் பரிமாற்றத்தின் மூலமாக எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டதாக அறிந்த செய்தி கேட்டு, உள்ளபடியே மருத்துவர் என்ற முறையிலே மிகுந்த வருத்தமுற்றேன். இந்த நிகழ்வினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலே இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. எந்தச் சூழ்நிலையிலும் இதுபோன்ற ஒரு நிகழ்வு இனிமேல் நடக்கக் கூடாது என்ற ஒன்றும், உள்ளபடியே ஒரு நடுநிலையான சட்டமன்ற உறுப்பினராக இருந்து, இந்தத் தவறுக்கு அரசினுடைய நிருவாகம் காரணமா அல்லது ஒரு தனி மனிதனுடைய தவறு காரணமா என்பதை இந்த மன்றத்திலே விளக்க வேண்டிய ஒரு நிலைப்பாட்டில் நான் இருக்கிறேன். அந்த அடிப்படையிலே இந்த நிகழ்வை உற்று நோக்கியபோது, நான் கண்டறிந்தது முழுக்க, முழுக்க அங்கே, அந்த Lab Technician மற்றும் அங்கே இருக்கின்ற மருத்துவ அலுவலருடைய கண்காணிப்பு குறைப்பாட்டினால்தான் இந்தத் தவறு ஏற்பட்டதாகவே நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்த இரத்த பரிமாற்றம் என்பது, மருத்துவ உலகிலே தவிர்க்கப்பட முடியாத ஒரு விஷயம். கிட்டத்தட்ட, கர்ப்பிணிப் பெண்களை எடுத்துக்கொண்டோமென்று சொன்னால், பத்து இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒவ்வொரு வருடமும் அவர்களுடைய இரத்த சோகையைப் போக்குவதற்காக இரத்தம் ஏற்றிக்கொண்டிருக்கின்றனர். அதேபோல எட்டு இலட்சம் donors, இரத்த தானம் செய்கிறவர்கள் எட்டு இலட்சம் பேரை நாம் பரிசோதித்து, அவர்களுக்கு இரத்தத்தை ஏற்றிக் கொண்டிருக்கின்றோம். கர்ப்பம் தரித்தவர்கள் மட்டுமல்லாமல், விபத்திலே ஒருவர் அடிபட்டாலும் சரி, ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றாலும் நமக்கு இரத்தம்





தேவைப்படுகிறது. மாற்று இரத்தம் நமக்கு தேவைப்படுகிறது. ஆகவே, அப்படிப் பார்க்கின்றபோது, எச்.ஐ.வி. தொற்று இல்லை என்பதைக் கண்டுபிடிப்பதற்கு நாம் என்ன வகையான வழிமுறைகளைக் கையாளுகிறோம் என்று பார்த்தோம். ஏனென்றால், உதாரணத்திற்கு இந்த test செய்கின்ற Kit–ல் ஏதாவது ஒரு தவறு நடந்திருக்குமோ என்று எனக்குக்கூட ஓர் அச்சம் ஏற்பட்டது—உதாரணத்திற்கு பெரிய மருத்துவமனைகளில் Elisa என்ற ஒரு test செய்கின்றனர். Primary Health Centre, ICTC–ல் Rapid Combo Test என்று இரண்டு tests செய்கின்றனர்.

*முற்பகல் 11–35*

இதை test செய்கின்ற ஆட்களை நாம் குறை சொல்வதற்குப் பதிலாக, Kit–னுடைய தயாரிப்பிலே ஏதும் குறை இருக்குமோ என்று பார்க்கின்றபோது, நான் கண்ட உண்மை என்னவென்றால், National AIDS Control Organisation, NACO மூலமாகத்தான் HIV பாதிப்பைக் கண்டறியும் kit முழுமையாகப் பரிசோதிக்கப்பட்டு, தமிழகத்திற்கு வருகிறது. அந்த kit–ஐ ரொம்ப நாள் சரியாகப் பாதுகாக்கவில்லை என்றால், Polio vaccine தரம் குறைந்துவிட்டால், heat sensitive indicator அதைக் காட்டிவிடும். அப்போது அதைப் பயன்படுத்த மாட்டார்கள். அதேபோல, இந்த kit–லும், HIV test பண்ணுகிற Elisa, Rapid Combo test–லும் heat sensitive indicator உடன், NACO, மத்திய அரசினுடைய கொள்முதல் மூலமாகத்தான் நமக்கு வந்திருக்கிறது என்ற அடிப்படையிலே அந்த kit–லே எந்தத் தவறும் இல்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆக, இது ஒரு தனி மனிதனுடைய தவறாகத்தான் இங்கே பார்க்கப்படுகிறது. வேறு எங்கும் இதைப்போல நடந்திருக்கிறதா என்று நாங்கள் பார்த்தபோது, தேசிய அளவிலே கேரளாவிலே ஒரேயொரு incident மட்டும்தான் register ஆகியிருக்கிறது. மற்றபடி எந்தத் தவறும் நடப்பதற்கான வாய்ப்பு இல்லை. இனிவரும் காலங்களிலே, மருத்துவனாக இந்த அரசுக்கு என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், பலவகையான tests செய்துதான் கொடுக்க வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டில் பார்த்தீர்களென்றால், ஒருவர் இரத்த தானம் செய்ய வேண்டுமென்று முன்வந்துவிட்டாரென்றால், சாதாரணமாக, உடனே, அவருடைய இரத்தத்தை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். நம்முடைய அரசு மருத்துவமனைக்கு இரத்தம் கொடுக்க நீங்கள் சென்றீர்களென்றால், அங்கிருக்கின்ற ICTC

counsellors மூலமாக, இரத்த வங்கிகளில் இருப்பவர்கள் மூலமாக முதலில் 12 கேள்விகளைக் கேட்பார்கள். அவருக்கு ஏதாவது தவறான பழக்கவழக்கங்கள் இருக்கிறதா, யாருடனாவது தகாத உறவுகள் வைத்திருக்கிறாரா, மலேரியா போன்ற வியாதிகள் இருக்கிறதா என எல்லா கேள்விகளையும் கேட்பார்கள். ஏனென்றால், இந்த இரத்தத்தை ஏற்றும்பொழுது, இரத்தத்தில் HIV இருக்கிறதா என்று மட்டும் பார்ப்பதில்லை. 5 விதமான விஷயங்களைப் பார்க்கிறார்கள். Syphilis இருக்கிறதா என்று பார்க்கிறார்கள், மலேரியா இருக்கிறதா என்று பார்க்கிறார்கள், Hepatitis B இருக்கிறதா என எல்லாவற்றையும் பார்க்கிறார்கள். இது முக்கியத்துவம் வாய்ந்த காரணத்தினாலே, அந்த donor-உடைய நம்பகத்தன்மையை முதலிலே சரிபார்ப்பதற்காக நம்முடைய தமிழக அரசினால் நியமிக்கப்பட்டுள்ள ICTC கவுன்சிலர்கள் 12 கேள்விகளை முதலிலே கேட்டு, மருத்துவர்கள் மீண்டும் 21 கேள்விகள் அடங்கிய அந்த ஒரு questionnaire–ஐ அவர்களிடம் கொடுத்து, அவர்களை முதலில் manual filtering செய்துவிடுவார்கள். அதற்குப் பிறகு, medical kit–ஐ வைத்து technical filtering செய்கிறார்கள். இதுபோன்று இரண்டுவிதமான filtering செய்துதான் இந்த விஷயங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இனி வருங்காலங்களில், பரிசோதிக்கப்பட்ட அந்த இரத்தத்தை patients–இடம் கொடுப்பதற்கு முன்பு, வேறு ஏதாவது டெஸ்ட் பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்குமா? ஏனென்றால், இரத்தத்தை Patient-க்கு ஏற்றும்போது நர்ஸ்தான் ஏற்றுவார்கள். ஏற்கெனவே பரிசோதிக்கப்பட்டது என்று மருத்துவமனையிலே, இரத்த வங்கியிலே மார்க் செய்துவிடுவார்கள். அப்படி மார்க் செய்துவிட்டால், அது நல்ல இரத்தம் என்று நர்ஸ்கள் கொடுத்துவிடுவார்கள். இப்பொழுது பாதிக்கப்பட்டது ஒரு patient என்றாலும் வருங்காலத்திலே இந்த ஒன்று என்பது பூஜ்யமாக மாற வேண்டுமே தவிர, இந்த ஒன்று என்பது இரண்டு, மூன்று என ஆகிவிடக் கூடாது. நிதி ஆயோக் என்கின்ற அமைப்பிலே Health Development Index–ல் தமிழ்நாடு இன்று இரண்டாவது சிறந்த மாநிலமாக சுகாதாரத் துறையிலே மிளிரிக் கொண்டிருக்கிறது. இந்த மாநிலம் இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. இரத்தத்தை பரிமாற்றம் செய்வதற்கு ஐந்து நிமிடங்கள், பத்து நிமிடங்களுக்கு முன்பாக, அதை மீண்டும் பரிசோதிக்கின்ற வகையிலே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்திய அளவிலே ஏதாவது ஒரு புதிய டெஸ்ட் இருக்கிறதா





என்று கண்டுபிடித்து அதை include செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசானது, அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு, 10 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிறப்பான ஒரு மருத்துவத்தை உடனுக்குடன் வழங்குகிறது. இதிலே இன்னொரு சந்தோஷப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், பிறக்கவிருக்கின்ற அந்தக் குழந்தையை எச்.ஐ.வி. பாதிப்பு இல்லாமல் அந்த கர்ப்பிணிப் பெண் பெற்றெடுப்பதற்கு, 100 சதவிகிதம் வாய்ப்பு இருக்கின்றது என்று அங்குள்ள மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அந்தவொரு நல்ல விஷயம் இருக்கிறது. அந்தளவுக்கு நம்முடைய சுகாதார கட்டமைப்பு இருக்கிறது என்பது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். ஆக, அந்தக் குழந்தை பிறந்த பிறகும், 12 வாரங்கள் மருத்துவக் கண்காணிப்பிலே இருக்க வேண்டும். அவருக்குத் தேவையான மருந்தான Nevirapine என்ற சிரப்பை 12 வாரங்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைக் கொடுப்பதற்குக்கூட இப்பொழுதே மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை தயாராக இருக்கின்றது என்ற செய்தியையெல்லாம் கேட்டு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைந்தேன். ஆகவே, என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவெனில், இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கு during the time of transfusion புதிய ஒரு instant testing செய்வதற்கான checking kit–ஐக் கண்டுபிடிப்பதற்கு ஏதாவது வாய்ப்பு இருந்தால், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரிலே நடைபெற்ற ஓர் அசம்பாவித நிகழ்ச்சியை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதில் உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன். இரத்த தானத்தினுடைய குறிக்கோளே, கோஷமே ‘உதிரம் கொடுப்போம், உயிர் காப்போம்’ என்பதாகும். அப்படிப்பட்ட குறிக்கோளுடைய இரத்த தானத்தில் இன்றைக்கு ஒரு தவறு நடந்திருக்கிறது. இந்தத் தவறை எதிர்காலத்தில் எப்படிச்

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [*2019 ஜனவரி 5*

சரி செய்ய வேண்டும்? நடந்திருக்கின்ற தவறை எப்படி நாம் சரி செய்யப் போகிறோம்? இந்தத் தவறால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் எப்படி நிவாரணம் வழங்கப் போகிறோம் என்பவை குறித்து இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது. காரணம், தமிழ்நாட்டில் இதுவரையிலும் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவில்லை. இதிலே நடந்தது என்னவென்றால், நவம்பர் மாதம் 30 ஆம் தேதி சிவகாசியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு ரமேஷ் என்பவருடைய அண்ணியார் அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக வருகிறார்கள். அவருக்கு இரத்தம் வேண்டுமென்று கேட்கிற நேரத்தில், அவருக்குரிய இரத்தம் இல்லாத காரணத்தால், வேறு இடத்தில் நல்ல இரத்தத்தைக் கொடுத்துவிட்டு, அவருடைய மைத்துனரிடமிருந்து இரத்தத்தை பதிலுக்காக வாங்கியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11–40*

அவருடைய மைத்துனர் பெயர் ரமேஷ். அவருடைய இரத்தத்திலேதான் எச்.ஐ.வி. நோய்த் தொற்று இருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டு, அந்த நபரும் இறந்திருக்கிறார். இந்த இரத்தத்தை எடுக்கிற நேரத்தில் அங்கிருந்த Lab Technicians எப்படி அந்த வேலையைப் பார்த்தார்கள்? அதற்கு யார் தலைமை தாங்கினார் என்பதை விசாரித்து, நீங்கள் அவர்களை suspend செய்திருக்கிறீர்கள். அவர்கள் அத்தனைபேரும் தற்காலிக ஊழியர்கள். ஆனால், இதில் பெரிய அதிசயமான வேலை என்னவென்று சொன்னால், இந்தப் பையன், 2016–லே நம்முடைய பகுதியிலே ஓரிடத்திலே போய் இரத்த மாதிரி கொடுத்திருக்கிறார். அப்பொழுதே அதிலே எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக அன்றைக்கு இருந்த Lab Technician–க்கு தெரிந்திருக்கிறது. அப்படி தெரிந்திருந்து, அந்தப் பையனுக்குத் தகவல் கொடுத்திருந்தார்களென்று சொன்னால், இந்த அசம்பாவிதம் ஏற்பட்டிருக்காது. இந்தப் பையனைப் பொறுத்தளவிற்கு, அவன் ஒரு மனசாட்சி உள்ள பையனாகத்தான் தெரிகிறான். காரணம், அவன் வெளிநாட்டுக்குப் போவதற்காக test எடுக்கும்போது, அவனுக்கு எச்.ஐ.வி. இருப்பதாக அங்கே சொன்ன பிறகு, அவனே முன்வந்து சிவகாசி அரசு மருத்துவமனைக்குப் போய், 'எனக்கு எச்.ஐ.வி. தொற்று நோய் இருப்பதாகச் சொல்கிறார்கள்; நான் கொடுத்த இரத்தத்தை யாருக்கும் கொடுத்துவிட்டீர்களா' என்று அங்கே கேட்கக்கூடிய அளவுக்கு மனசாட்சி உள்ள ஒரு பையனாகத்தான்



*2019 ஜனவரி 5*] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

அவன் இருந்திருக்கிறான். இதிலே என்ன பிரச்சினை என்று சொன்னால், அந்தப் பையன் போய்ச் சொன்னது அவனுடைய உயிருக்கு ஆபத்தாகப் போய்விட்டது. அந்தப் பையன் சொன்னவுடனே அவனுடைய பெயர் விளம்பரப்படுத்தப்பட்டு, அந்தப் பையனுடைய முகத்தை பத்திரிகையிலே போடக்கூடிய அளவுக்கு, டி.வி–யிலே போடக்கூடிய அளவுக்கு வந்த பிறகு, அந்தப் பையன் மன உளைச்சலுக்கு உள்ளாகிறான். அந்த மன உளைச்சலுக்கு உள்ளான பையனுக்கு நம்முடைய அரசாங்கம் என்ன counselling கொடுத்தது அந்தப் பையன் தற்கொலை செய்துகொண்டிருக்கிறான். அப்படி தற்கொலை செய்து கொள்ளாமல் இருப்பதற்கு நம்முடைய அரசாங்கம் கவனம் எடுத்து, அந்தப் பையனுக்கு counselling கொடுத்திருக்க வேண்டும். அது நம்முடைய தவறாக அந்த இடத்திலே இருக்கிறது. அந்தப் பையன் இன்றைக்கு இறந்துபோயிருக்கிறான். இந்தப் பையன் கொடுத்த இரத்தத்திலே பாதிக்கப்பட்ட பெண்ணை இராஜாஜி மருத்துவமனையிலே தனி அறையில் வைத்து சரியான முறையிலே சிகிச்சை செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் கேள்வியாகக் கேட்பது, அந்தப் பெண்ணுக்கு அந்த எச்.ஐ.வி. இரத்தம் ஏற்றப்பட்டுவிட்டது. எச்.ஐ.வி. தொற்றிலிருந்து அந்த அம்மையார் தப்பிப்பாரா என்று சொன்னால், தப்பிப்பதற்கு வாய்ப்பில்லை. தொடர்ந்து அந்த எச்.ஐ.வி. தொற்று அவர் உடம்பிலே இருக்கும். நாம் கொடுக்கிற மருந்து, அந்த நோய் மேற்கொண்டு பரவாமல், அந்த நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்தாகத்தான் இன்றைக்கு இருக்கிறது. முக்கியமாக, எச்.ஐ.வி.–யே வராமல் செய்யக்கூடிய மருந்து இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே, அவருடைய வாழ்நாள் முழுவதும் எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டவராகத்தான் அந்தப் பெண் இருக்கப் போகிறார். அதுமட்டுமல்ல, அவருடைய வயிற்றிலே உருவான கரு, 9 மாத குழந்தையாக வளர்ந்துள்ளது. இப்போது அந்தப் பெண் delivery–க்கு, குழந்தை பெறுவதற்குத் தயாராக இருக்கிறார். அப்படி இருக்கும்போது, அந்த அம்மையாருக்கு, அந்தப் பெண்ணுக்கு பிறக்கும் குழந்தைக்கு எச்.ஐ.வி. இருக்குமா, இருக்காதா? குழந்தையை நோய் தொற்றுமா, தொற்றாதா? மதுரை இராஜாஜி மருத்துவமனை Dean அன்றைக்கு பேட்டி கொடுக்கும்போது, அப்படி வராமல் பார்த்துக்கொள்வோம் என்று சொல்லியிருக்கிறார். அப்படி வராமல் பார்த்துக்கொள்வதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம்? அதற்குரிய குழுவை நீங்கள் போட்டிருக்கிறீர்களா? அதுசம்பந்தமான நிபுணர்களை நியமித்து, பிறக்கிற குழந்தை எச்.ஐ.வி.

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [*2019 ஜனவரி 5*

தொற்றால் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் அதற்கான குழுவை அமைத்திருக்கிறீர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கூர்ந்து பார்க்க வேண்டும். காரணம், இந்தப் பெண்ணுக்கு வாழ்நாள் முழுவதும் எச்.ஐ.வி.–யால் பாதிக்கப்பட்ட பெண் என்ற முத்திரை கிடைத்துவிட்டது. இனிமேல் எதிர்காலத்தில் அவர் எங்கே வேலைக்குப் போனாலும், அவரைப் பார்க்கிற நேரத்தில், அவருக்கு எச்.ஐ.வி. உள்ளது என்று சொல்கிற நேரத்தில் அவருக்கு வேலை கொடுப்பதற்குக்கூட கொஞ்சம் யோசிப்பார்கள். ஆனால், அவருடைய கணவர் என்ன சொல்கிறாரென்று சொன்னால், 'என் மனைவியை எப்படியாவது காப்பாற்றிக் கொடுங்கள், எனக்கு பணம்கூட முக்கியமில்லை, என் மனைவியை நோயிலிருந்து காப்பாற்றுங்கள்' என்று சொல்லக்கூடிய நிலையில் அவருடைய கணவன் இருந்து கொண்டிருக்கிறார். ஆகவே, மனிதாபிமானத்தோடு நம்முடைய அரசாங்கமும் மாண்புமிகு முதலமைச்சரும் இதில் முழு கவனத்தைச் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும். இது அரசாங்கத்தினுடைய கவனக்குறைவால், நம்முடைய அரசாங்க மருத்துவமனையில் நடந்திருக்கிறது. அதற்காக உங்களை நாங்கள் குற்றம் சொல்லவில்லை. உங்களுக்குத் தெரிந்து நடந்ததாக நாங்கள் சொல்லவில்லை. ஆனால், இதுபோல் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்கு நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கு முன்னால் பேசிய சகோதரர் அவர்கள் சொன்னதுபோல், Elisa Test செய்கிறோம். அந்த Elisa Test செய்தால் 6 வார காலம் கழித்துத்தான் அந்த Elisa Test–மூலம் எச்.ஐ.வி. தொற்று இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க முடியும். ஒருவர் இரத்தம் கொடுத்தவுடனே, நாம் Elisa Test மூலம் பார்க்கிற நேரத்தில் 6 வார காலம் கழித்துத்தான் அவருக்கு அந்த Elisa Test மூலமாக எச்.ஐ.வி. தொற்று இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க முடியும். தற்போது அதற்குப் பதிலாக NAT என்று சொல்லக்கூடிய ஒரு test வந்திருக்கிறது. அந்த test இப்போது மும்பையில் மட்டும்தான் இருக்கிறது. அதுபோன்ற ஒரு test–ஐ நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு அதையும் தமிழகத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஏனென்று சொன்னால், இதுபோல் நம்முடைய மாநிலத்திலே ஏறத்தாழ 8 இலட்சம் பேர் இரத்தம் கொடுக்கிறார்கள். அதை 12 இலட்சம் பேருக்கு நாம் இரத்தமாக பிரித்தும், பிரிக்காமலும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, எதிர்காலத்திலே நம்மீது ஒரு நம்பிக்கை வரவேண்டும். அது அரசு மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தனியார் மருத்துவமனையாக



*2019 ஜனவரி 5*] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

இருந்தாலும் சரி, இரத்தம் சரியாக இருக்குமென்ற எண்ணம், நம்பிக்கை, நமக்கே வரவேண்டும். அதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–45*

என்னைப் பொறுத்தளவிற்கு அவர்களுக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அந்தப் பெண்ணிற்கு வாழ்வாதாரமாக என்ன செய்யப் போகிறீர்கள்? அந்தப் பெண் இருக்கின்ற காலம் வரை எச்.ஐ.வி. தொற்று இருக்கும். அந்தப் பெண்ணிற்கு வாழ்வாதாரமாக நாம் என்ன செய்யப் போகிறோம்? பிறக்கின்ற குழந்தைக்கு எச்.ஐ.வி. இல்லாமல் பிறக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? அந்தக் குழந்தை எச்.ஐ.வி. நோயோடு பிறந்தால், அந்தக் குழந்தைக்கு எதிர்காலத்திலே நாம் என்ன செய்யப் போகிறோம்? எச்.ஐ.வி.–யோடு இருக்கக்கூடிய அந்தப் பெண்ணினுடைய கணவருக்கு வேலைவாய்ப்போ, இல்லை ரொக்கப் பணமோ எதுவும் அரசாங்கத்திலிருந்து இதுவரை அறிவிக்கப்படவில்லை. அதையும் செய்து, அந்தக் குடும்பத்திற்கு வாழ்நாள் முழுவதும்-இது ஒரு நாளோடு போகின்ற பிரச்சினை இல்லை. ஒரு நபர் இறந்து போகிறார் என்று சொன்னால், அது அன்றோடு அந்தப் பிரச்சினை முடிந்துபோகும். ஆனால், இது அப்படி இல்லை. வாழ்நாள் வரை உயிரோடு இருக்கின்ற காலம் வரை, எச்.ஐ.வி. நோயாளி என்ற பெயர் அவர்களுக்கு இருக்கும். அந்தக் குழந்தைக்கும் இருக்கும். குழந்தைக்கு இருக்கக் கூடாது என்று நாம் எல்லோரும் வேண்டுகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலை வராமல் இருக்க வேண்டும். அதற்குரிய நிவாரணம், மருத்துவ வசதி, வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதியை மருத்துவ நிபுணர்கள் மூலமாக அரசாங்கம்-special case ஆக, இவர்களுக்கு எல்லா எய்ட்ஸ் நோயாளிகள் போல் இல்லாமல், இது நமக்குத் தெரிய வந்த காரணத்தினால், அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே மருத்துவ வசதிகளை செய்யக்கூடிய சூழ்நிலைகளையெல்லாம் செய்ய வேண்டும். இந்த அரசாங்கம், இந்தப் பழியிலிருந்து

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [*2019 ஜனவரி 5*

தப்பிக்க வேண்டுமென்று சொன்னால், நீங்கள் எடுக்கின்ற அந்த முறையான நடவடிக்கைகள், முறையான செயல்கள், முறையாக அவர்கள்மீது செலுத்தும் கவனிப்புகளெல்லாம்தான் உங்களை இந்தப் பழியிலிருந்து காப்பாற்ற முடியும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், சாத்தூரிலே 24 வயது நிரம்பிய ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு இரத்தம் செலுத்தும்போது அவர்களுக்கு எச்.ஐ.வி. நோய் பரவியிருக்கிறது. இந்த இரத்தம் செலுத்துவது என்பது ஒருவரிடமிருந்து இரத்தத்தைப் பெற்று, இன்னொருவருக்கு செலுத்த வேண்டும். முதல் கட்டமாக அந்த இரத்தத்தை எடுக்கும்போது, அது தகுதியான இரத்தமா என்பதைப் பரிசோதிக்க நம்முடைய அரசிடம் முழு தகுதியும் இருக்கிறதா என்று இப்பொழுது ஓர் ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மருத்துவர்களாக இருக்கக்கூடியவர்கள் இப்பொழுது பேசும்போது சொன்னார்கள். இதைப் பரிசோதனை செய்யும்போது எச்.ஐ.வி. இருக்கிறதா, இல்லையா என்பதைப் பரிசோதிப்பது இல்லை என்று நான் தெரிந்து கொண்டேன். ஆனால், இதுபோல செய்வதைவிட எச்.ஐ.வி. இருக்கிறதா, இல்லையா என்பதை அறிந்து கொண்டுதான் ஒருவருடைய உடலிலிருந்து இரத்தத்தை நாம் பெற வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இந்தப் பிரச்சினையைப் பார்க்கும்போது, நம்முடைய அரசு என்ன நடைமுறையைக் கையாளுகிறது என்பதும் தெரியவில்லை. இந்த இரத்தத்தை சேமித்து வைத்திருக்கிறார்கள். சேமிப்பு வங்கியிலிருந்து இரத்தத்தை ஒருவர் கேட்டால் கொடுக்கிறார்கள். இதற்கு யார் பொறுப்பு? இந்தத் தகவலின்படி 3 நபர்கள்மீது ஏதோ நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் இதற்குப் பொறுப்பானவர்களா? இவர்கள் மருத்துவத் துறையிலே இந்த இரத்தப் பரிசோதனையை செய்து, அதற்குரிய சான்று கொடுப்பதற்கு தகுதியானவர்களா என்பதும் தெரியவில்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் விவரமாகப் பேசிவிட்டார்கள். நான் உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள



*2019 ஜனவரி 5*] [திரு. கரி. இராமசாமி]

விரும்புவது, இப்பொழுது இந்தக் குறிப்பிட்ட இரத்தம் செலுத்திய பிரச்சினையில் தவறுதலாக இரத்தம் செலுத்தியவர்களின்மீது நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? அவர்கள் யார் என்பதை நீங்கள் தெளிவாகக் கண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால், அரசு இரத்த வங்கியிலிருந்து இரத்தம் கொடுத்திருக்கிறீர்கள். மருத்துவமனை இன்றைக்கு அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. என்னதான் கீழ்மட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் தவறு செய்தாலும் அரசுதான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை நன்றாகச் சிந்திக்க வேண்டும். நான் அரசுமீது குற்றம் சொல்வதாக நீங்கள் எண்ண வேண்டாம். இன்றைக்கு அரசு மருத்துவமனைகளைவிட, தனியார் மருத்துவமனைகளுக்குத்தான் அதிகமாக நோயாளிகள் செல்கிறார்கள். நீங்களும் அவ்வாறுதான் செல்கிறீர்கள்; நானும் அவ்வாறுதான் செல்கிறேன். இதற்கெல்லாம் காரணம், அரசு மருத்துவமனைகள் எல்லாவித வசதிகளும் நிறைந்ததாக இல்லை. குறிப்பாக, இந்த இரத்தம் செலுத்திய பிரச்சினையிலே நீங்கள் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தவறை செய்தவர்களுக்கு உடனடியாக உரிய தண்டனையைப் பெற்றுத்தர வேண்டும். இரத்தம் மாற்றுதலால் பாதிக்கப்பட்ட அந்த கர்ப்பிணிப் பெண்ணிற்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், நீங்கள் என்ன செய்தாலும் அவருடைய உயிரை நீங்கள் காப்பாற்ற முடியாது. ஓர் உயிர் போகவில்லை; இப்பொழுது இரத்தம் கொடுத்தவரும் இறந்து போயிருக்கிறார். இதுபோக, மூன்றாவது உயிர், அவருக்கு வியாதி இருக்கிறதா, இல்லையா என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து, இனிமேல் இவ்வாறு நடக்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தயவுசெய்து இதில் நீங்கள் மெத்தனமாக இருக்காதீர்கள். இது மனிதாபிமானப் பிரச்சினை என்று நான் கருதுகிறேன். தயவுசெய்து உரிய நடவடிக்கை எடுங்கள். மருத்துவமனைகள் சரியாக நடப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 5

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30–11–2018 அன்று சிவகாசி அரசு மருத்துவமனையிலுள்ள இரத்த வங்கியில் 19 வயதுள்ள ஒரு நபர் மாற்றுக் கொடையாளர் என்ற முறையிலே இரத்த தானம் செய்துள்ளார். அங்குள்ள ஆய்வக நுட்பனர், Lab technician–னால் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டு எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் தொற்று இல்லையென்று சான்றளிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய இரத்தம் சாத்தூர் அரசு மருத்துவமனையிலே 3–12–2018 அன்று 23 வயதுள்ள 8 மாத கர்ப்பிணிப் பெண்ணிற்கு வழங்கப்பட்டு, சில நாட்களுக்குப் பிறகு 17–12–2018 அன்று சாத்தூர் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்தல் பரிசோதனை மையத்தில் அந்த கர்ப்பிணிப் பெண்ணை நாம் பரிசோதனை செய்ததில் எச்.ஐ.வி. தொற்று இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. கண்டறியப்பட்டு அவருக்கு விருதுநகர் கூட்டு மருந்து சிகிச்சை மையத்திலிருந்து ART மருந்தெல்லாம் வழங்கப்பட்டு, அந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்தவுடனே அரசு அதிர்ச்சியடைந்தது. மிகுந்த வேதனையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடுமையாக அறிவுறுத்தி, உடனடியாக விருதுநகர் இணை இயக்குநர் தலைமையிலே அங்கு முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த விசாரணையில் அனைவரும் ஆட்படுத்தப்பட்டனர். மருத்துவ இரத்த வங்கி அலுவலர், ஏற்கெனவே இரத்த வங்கியில் இருந்த அலுவலர், அந்தக் காலகட்டத்திலே இருந்த Lab technician, இப்பொழுதிருக்கக்கூடிய Lab technician, விருதுநகர் மருத்துவமனை, சாத்தூர் மருத்துவமனை என அனைவரும் அந்த விசாரணைக்கு ஆட்படுத்தப்பட்டார்கள். அதுமட்டுமல்லாமல், உடனடியாக அரசுச் செயலாளர் அவர்களை நேரடியாக அந்தச் சம்பவ இடத்திற்கே அனுப்பி, அரசுச் செயலாளர் அவர்களின் தலைமையில் நாங்கள் விசாரணையை மேற்கொண்டோம். தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு ஆணையர் திரு. செந்தில்ராஜ், I.A.S., அவர்களை அடுத்த நாள் அங்கே அனுப்பி, மிக கடுமையாக விசாரணையை நாம் மேற்கொண்டோம். விசாரணை மேற்கொண்டதிலே, ஏற்கெனவே நமது முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அவர் ஒருமுறை இரத்தம் கொடுத்திருக்கிறார். அன்றைக்கு அவருடைய இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு, பலமுறை அவரை ICTC–யினுடைய கவுன்சிலர் தொடர்பு



2019 ஜனவரி 5] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

கொண்டிருக்கிறார்கள். தொடர்பு கொண்டபொழுதெல்லாம் நான் பெங்களூருவில் இருக்கிறேன், வெளி மாநிலத்தில் இருக்கிறேன் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவரை trace செய்ய முடியாத சூழ்நிலை இருந்திருக்கிறது. இதற்கிடையில் அவருடைய அண்ணிக்கு இரத்தம் தேவைப்படுகிறபோது இரண்டாவது முறை இரத்தம் கொடுக்க அவர் வருகிறார். பொதுவாக, மத்திய அரசினுடைய guidelines படி, யார் இரத்தம் கொடுத்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இரத்தம் கொடுப்பவர்களை NACO வழங்கக்கூடிய தரமான அந்த kit மூலமாகத்தான் test செய்கிறோம். NACO-வினுடைய guidelines மூலமாகத்தான் counselling கொடுக்கிறோம். இருக்கக்கூடிய 1,400 counsellors எல்லோருமே மத்திய அரசினுடைய ஊதியத்தைப் பெற்று தொடர்ந்து counsellors ஆக இருக்கிறார்கள். எல்லோரும் அனுபவம் வாய்ந்தவர்கள். நீங்கள் சொன்னதுபோல, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறைமூலம் இதுவரை வருடத்திற்கு 8 இலட்சம் பேரிடம் இரத்தத்தை தானமாகப் பெறுகிறோம். 12 இலட்சம் பேருக்கு இரத்தக் கூறுகளைப் பிரித்துக் கொடுக்கிறோம். இரத்தத்தை 28 நாட்களுக்கு மட்டும்தான் நாம் சேமித்து வைக்க முடியும். அதிலும் platelets–ஐ 5 நாட்களுக்கு மட்டும்தான் நாம் சேமித்து வைக்க முடியும். அவற்றை உடனே வழங்கிவிடுகிறோம். Frozen என்றால், கிட்டத்தட்ட 2 வருடங்கள் வரை வைத்திருக்கலாம். Plasma என்றால், 2 ஆண்டுகள் வரை வைத்திருக்கலாம். இருந்தாலும்கூட உரிய விதிமுறைகளின்படி, மத்திய அரசினுடைய guidelines படி மத்திய அரசு வழங்கக்கூடிய அந்த kit–ன்படி அந்தப் பரிசோதனையை செய்கிறோம்.

முற்பகல் 11–55

காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, அன்றைக்கே நாம் HIV test செய்கிறோம். Syphilis test செய்கிறோம். மலேரியா test செய்கிறோம். Hepatitis B மற்றும் Hepatitis C test செய்து mark செய்கிறோம். Ledger–ஐ proper ஆக maintain செய்கிறோம். எல்லாமே செய்கின்றோம். அதைத் தாண்டி அங்கு அந்த negative என்ற தவறு நடந்திருக்கின்றது என்பதால்தான், முதல் கட்டத்தில் 3 பேரையும் suspension followed by termination செய்கின்றோம். அவர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, தொடர்ந்து 3 பேருமே பதவியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனைத் தொடர்ந்து, டாக்டர் மாதவி அவர்களுடைய

தலைமையில், மதுரை blood bank–ல் Senior Officer ஆக Chief மூலமாக நியமிக்கப்பட்டு இன்னும் யார் யாரெல்லாம் இதில் கண்காணிக்கத் தவறினார்கள் என்பதற்கான கடுமையான விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அது யாராக இருந்தாலும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதில் அரசு கவனமாக இருக்கிறது, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட அந்த நபரைக் குறித்து அண்ணன்கூட கேட்டீர்கள். பொதுவாக நாம் நோயாளியினுடைய பெயரைச் சொல்வது கிடையாது. அவருக்கு உடனே நாங்கள் counselling கொடுத்தோம். இதற்கிடையில் அவர் ஊடகத்தில் வந்துவிட்ட காரணத்தினால், அவர் யாரிடமும் சொல்லாமல் அவருடைய சொந்த ஊரான இராமநாதபுரத்திற்குச் செல்கின்றார். அங்கு அவர் இராமநாதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றார். அங்கு அவரை பத்திரிகை நண்பர்கள் தொடர்பு கொண்டு பேட்டி கேட்கின்றார்கள். அதனால் அவர் அங்கு மனமுடைந்து தற்கொலைக்கு முயற்சி செய்கின்றார். அவர் உடனே மதுரையில் அனுமதிக்கப்படுகின்றார். மதுரை வந்த பிறகுதான் நான் எந்தவிதமான மன அழுத்தமும் இல்லாமல் இருக்கின்றேன் என்று சொல்கின்றார். AIDS கட்டுப்பாட்டு இயக்குநர் அவர்கள் நேரடியாக அவருக்கு counselling கொடுக்கின்றார். அவர் முழுமையாகப் பாதுகாப்பில் இருந்தார். இதையும் தாண்டி அவர் முன்பே சாப்பிட்ட அந்த விஷத்தினுடைய கடுமையினால் அவர் இறக்க நேரிடுகிறது. இந்த பாதிக்கப்பட்ட பெண்மணியைப் பொறுத்தவரையில், அவருடைய கணவரிடம் நானே தொலைபேசியில் பேசினேன். அரசு அதிகாரிகளும் நேரடியாக அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்களுக்கு என்ன வாழ்வாதார உதவிகளை நாம் செய்ய முடியுமோ அதனை அரசு உறுதியாகச் செய்யும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாகச் சென்று கூறியுள்ளார். அவருடைய கணவர் ஒரு கொத்தனார், கூலி வேலை செய்யக்கூடியவர். நம்முடைய விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. ராஜேந்திர பாலாஜி அவர்களும் சந்தித்துப் பேசினார்கள். பேசி, அந்தக் குடும்பத்திற்கு ஆறுதல் கூற கலெக்டரை அனுப்பி, R.D.O.–வை அனுப்பி தேவையான உதவிகளைச் செய்து பட்டா கொடுத்து, வீட்டு வசதிகளையெல்லாம் செய்திருக்கின்றோம். நீங்கள் சொன்னமாதிரி அவருக்கு அந்த நோய்த் தொற்று இருக்கும். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய இந்தக் கூட்டுமருந்து சிகிச்சையில் 100 சதவிகிதம் வாய்ப்பு இல்லை. கியூபாவிற்கு



அடுத்து mother to child 0 சதவிகிதம் என்பதை நாம் பல முறை தமிழ்நாட்டில்தான் அதனை prove பண்ணியிருக்கின்றோம். 100 சதவிகிதம் அந்தத் தாயிடமிருந்து குழந்தைக்கு நோய்த் தொற்று ஏற்படக் கூடாது என்பதில் அரசு உறுதியாக இருக்கின்றது. தாய்க்கும், குழந்தைக்கும் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று நீங்கள் கேட்கின்றீர்கள். அதற்காகத்தான் ஒரு Special Committee–ஐ நாம் form செய்திருக்கின்றோம். நம்முடைய மகப்பேறு Ogician தலைமையில், Paediatrician தலைமையில், Anaesthesist தலைமையில் ART Medical Officer போட்டு, 10 பேர் கொண்ட குழுவை அந்தத் தாய்க்கு சிகிச்சை கொடுப்பதற்கு மட்டும் அமைத்திருக்கின்றோம். அந்தத் தாயிடமிருந்து எந்தச் சூழ்நிலையிலும் அந்தக் குழந்தைக்கு நோய்த் தொற்று வந்துவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கின்றோம். Nevirapine என்ற ஒரு சிரப் இருக்கின்றது. அந்தச் சிரப்பை குழந்தை பிறந்தவுடன் நாம் மிகச் சரியாகக் கொடுத்துவிடுவோமேயானால், 100 சதவிகிதம் குழந்தைக்கு நோய்த் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. அதனை அரசு உறுதிப்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். தாய் எங்கு விரும்பினாலும், அரசு மருத்துவமனையில் சிகிச்சை திருப்திகரமாக இருந்தால் அங்கேயே தொடர்ந்து சிகிச்சையைத் தொடரலாம். அல்லது வேறு எந்த மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அதற்கான முழு பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதை அவருடைய கணவரிடம் தெரிவித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் என்னிடம் அதனைத் தெரிவிக்குமாறு கூறினார்கள். நம்முடைய சுகாதாரத் துறை இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலையில், இது நிச்சயமாக ஒரு அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கக்கூடிய ஒரு விஷயம் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. இது ஒரு சிறு நிகழ்வாக இருந்தாலும் அது வேதனை தரும் நிகழ்வு. ஆகையினால், அதில் மிகுந்த பொறுப்போடு நடவடிக்கை எடுக்கச் சொல்லி மிகக் கடுமையாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அவர் டாக்டர் என்பதனால் சில கருத்துகளைக் கூடுதலாகச் சொன்னார்கள். இந்தியா முழுக்க ஒரே test–ஐதான் நாம் செய்கின்றோம். அதாவது, இந்தியாவில் இருக்கக்கூடிய, மும்பை ஆக இருந்தாலும் டில்லியாக இருந்தாலும், எல்லா மாநிலங்களிலும் இந்த Rapid HIV Test, Elisa Test என்று இதைத்தான் HIV–க்காக நாம் செய்கின்றோம். அந்த test–ஐத்தான் மத்திய NACO guidelines–படி தமிழ்நாட்டில் செய்கின்றோம். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன்

அவர்களும் சொன்னீர்கள். மும்பையில் ID–NAT என்ற ஒரு test இருக்கின்றது. அதாவது Individual Donor–Nucleic Acid Test என்ற ஒரு test trial basis–ல் இருக்கின்றது. அதனையும் மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலக்கட்டத்தில் 2013 ஆம் ஆண்டு ஸ்டான்லி மருத்துவமனையில் 2 கோடி ரூபாய்க்கு நிறுவி, trial basis–ல் test செய்து அதனை இந்த Elisa Test–ஐவிட successful ஆன test என்று இந்திய அளவில், அதாவது உலகத்திலே 63–வது மெஷினை நாம் வாங்கி இருக்கின்றோம். 2 கோடி ரூபாய் அளவிற்கு அந்த lab–ஐ set up செய்திருக்கின்றோம். அந்த trial–லில் success என்று வந்திருக்கின்றது. ஆகையினால், இன்றைக்கு இருக்கின்ற காலக்கட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்றோம். அது எவ்வளவு ரூபாயாக இருந்தாலும் சரி, அதனை உடனே செய்துவிடலாம் என்று அறிவுரை வழங்கி இருக்கின்றார்கள். ஆகையினால், வருங்காலத்தில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுவரைக்கும் செய்யாத அந்த ID–NAT என்ற test–ஐ உடனடியாக அமல்படுத்துவது என்ற முடிவை எடுத்திருக்கின்றோம் என்ற செய்தியை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

Rapid Test, Elisa Test என்று இப்போது existing ஆக இந்தியா முழுக்க இருக்கக்கூடிய இந்த test–ஐத் தாண்டியும் இந்த ID–NAT Test என்பது incubation period என்று சொல்வோம், incubation period–ல் இருக்கக்கூடிய அந்த time–ஐயும் proper ஆக நமக்கு நன்றாகத் தெரிவிக்கக்கூடிய, ஒரு தரமான, உலக அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய, மேலை நாடுகளில் செய்யக்கூடிய பரிசோதனை. அதையும் உடனடியாக அமலுக்குக் கொண்டுவருவதற்கு, trial basis–ல் ஸ்டான்லி மருத்துவமனையில் தற்போது இருக்கிறது. அதனை அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, இந்த வேதனையான, அதிர்ச்சியான சம்பவத்தில்,—12 இலட்சம் பேருக்கு, டெங்கு பாதிப்பு இருந்த காலக்கட்டத்தில் உடனே நாம் blood donation பெற்று ஐந்து நாட்களில் ஆயிரக்கணக்கான பேருக்கு platelets கொடுக்கிறோம். டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்ட நேரத்தில் ஒரு நோயாளிக்கே கிட்டத்தட்ட 10 platelets வரை கொடுத்திருக்கிறோம். சிறிய குழந்தைகளுக்கு ICH மருத்துவமனைகளில் platelets





ஏற்றுகிறோம். இதுவரைக்கும் இதுபோன்ற எந்தப் புகாரும் register ஆகவில்லை. இதுவரையில் 12 இலட்சம் பேருக்கு ஓராண்டாகக் கொடுக்கப்படுவதில் தமிழகத்தில் இதுமாதிரியான எந்தப் புகாரும் எழுந்ததில்லை. இந்தப் புகாருக்கு நிச்சயமாக அந்தக் குடும்பத்திற்குத் தேவையான உதவிகளையும், பிறக்கவிருக்கிற குழந்தையையும் 100 சதவிகிதம் HIV தொற்று இல்லாத குழந்தையாக உருவாக்கி தாய்க்கும், அவருடைய கணவருக்கும் தேவையான அத்தனை வாழ்வாதாரத் தேவைகளையும், அவர்கள் விரும்புகின்ற பணிகளையும் அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கண்காணிப்புப் பணியில் தவறிழைத்தது Lab Technicians மட்டுமல்ல; அது மருத்துவராக இருந்தாலும் சரி; மூத்த மருத்துவராக இருந்தாலும் சரி; செவிலியராக இருந்தாலும் சரி; அந்தக் கண்காணிப்புப் பணியில் இருக்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் சரி; எந்தப் பாரபட்சமுமின்றி, அரசு மிகக் கடுமையான, உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, இந்த ID–NAT என்கிற individual Donar Nucleic Acid test–ஐ,—அந்த lab equipment–க்கு ரூ.1.50 கோடி செலவாகிறது. அந்த lab–ஐ set up செய்வதற்கு ரூ.50 இலட்சம் ஆகிறது. ஆக, ஒரு lab–ஐ set up செய்வதற்கு மொத்தம் ரூ.2 கோடி செலவாகிறது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்த test இதுவரையிலும் இல்லை. Mumbai hospital–லில் ஒரு trial ஆகவும், நம்முடைய ஸ்டான்லி மருத்துவமனையில் ஒரு trial ஆகவும் test செய்யப்படுகிறது. வருங்காலத்தில் இந்த test–ஐ நம்முடைய மாநிலத்தில் செய்வதன்மூலம் தமிழகத்தை முன்னோடி மாநிலமாகச் செயல்படுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த HIV விஷயத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். ஆக, விலை மதிக்கமுடியாத ஓர் உயிர் பிரிந்திருக்கிறது. ஓர் அப்பாவிப் பெண்ணினுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகியிருக்கிறது.

இதற்குக் காரணமானவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் கேள்விப்பட்ட வரையிலே கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய ஊழியர்கள்மீதுதான் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களிலும் சில அப்பாவிகள் இருக்கிறார்கள். ஆனால், சில உயரதிகாரிகளும் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் இதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். அவர்கள்மீது இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்கிணங்க முதற்கட்ட விசாரணையில் மூன்று lab technicians suspend செய்யப்பட்டு, அதற்குப் பிறகு அரசுச் செயலாளர் நேரடியாக விசாரணை செய்த பிறகு, suspension followed by termination என்ற அடிப்படையில் மூன்று பேரை பணி நீக்கம் செய்தாகிவிட்டது. அதைத் தொடர்ந்து, கூடுதல் இயக்குநர், Additional Director, Directorate of Medical and Rural Health Services, டாக்டர் எஸ். மாதவி அவர்களுடைய தலைமையில் குழு அமைக்கப்பட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் யாரெல்லாம் இந்த விஷயத்தில் கண்காணிக்கத் தவறியிருக்கிறார்கள் என்பது குறித்தும் தற்போது முழு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த விசாரணையின் முடிவில் உறுதியான நடவடிக்கை, எந்த பாரபட்சமுமின்றி எடுக்கப்படும் என்பதை அன்போடு, உறுதிபடத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது, சிவகாசி lab technician, இன்னொரு நபர் AIDS counsellor, இன்னொரு நபர் AIDS Lab technician ஆகிய இந்த மூன்று பேரை





மட்டும்தான் நாம் suspend செய்திருக்கிறோம். இவர்கள் மூன்று பேருமே temporary staff ஆவர். எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, அவர்களுக்கு மேலிருக்கிற மேலதிகாரிகளுக்கு இதில் என்ன சம்பந்தம்? உங்களுடைய கமிட்டி இதுகுறித்து விசாரணை செய்திருக்கிறது. அதற்குமேல் விசாரித்து, அதன்மீது மேல் நடவடிக்கை எடுத்தால்தான் மீதமுள்ளவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க முடியும். இன்னொன்று என்னவென்றால், நாம் இரத்தத்தைப் பெறும்பொழுது, இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்றால், அதனை ஒரு நர்ஸ் வாங்கி வந்து கொடுத்துவிடுகிறார். அதற்குமேல் ஒரு டாக்டர் பார்ப்பது போன்ற ஒரு chain work இல்லை. அதனால், அந்த டாக்டர் பார்க்கவேண்டிய chain work நடைமுறையும் வேண்டும். டாக்டரும் பார்த்த பிறகுதான் இரத்தம் வழங்கப்பட வேண்டும் என்கிற ஒரு நடைமுறை வேண்டும். இரண்டாவது என்னவென்றால், அந்தப் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நாம் நிதியுதவி செய்தால்தான் நியாயமானதாக இருக்கும். ஏனென்றால், எதிர்காலத்தில் அவர்களால் வேலைக்கே போக முடியாது. எனவே, அதனையும் கொடுக்க வேண்டும். அந்த இளைஞர் மனசாட்சியோடு வந்து சொல்லவில்லையென்றால், இன்னும் இரண்டு பேருக்கு எய்ட்ஸ் நோய் வந்திருக்கும். அந்த இளைஞர்தான் மனசாட்சியோடு சிவகாசி மருத்துவமனையில் வந்து ‘எனக்கு எய்ட்ஸ் நோய் இருக்கிறது என்றும் நீங்கள் check செய்யுங்கள்’ என்றும் சொல்லியிருக்கிறார். அவர்தான் வந்து சொல்லியிருக்கிறார். ஆகவே, அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுத்தால்தான் நியாயமாக இருக்கும். ஆகவே, அந்த இரண்டு காரியங்களையும் அரசு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் குழு டாக்டர் எஸ். மாதவி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த விசாரணைக் குழு வெகு விரைவில் அறிக்கையை சமர்ப்பிக்கும். அந்த அறிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, இதனைக் கண்காணிக்கத் தவறிய உயர் பதவியிலே இருப்பவர்கள்மீதும் எந்த பராபட்சமுமின்றி உறுதியான

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, அந்தக் குடும்பத்திற்குத் தேவையான, அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் கேட்டறிந்து-அவர்கள் நம்முடைய தொடர்பில்தான் இருக்கிறார்கள். இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தினமும் நாம் update செய்துகொண்டிருக்கிறோம். IAS அதிகாரிகளோடும் அவர்கள் தொடர்பில் இருக்கிறார்கள். நானும், அந்தப் பெண்ணின் கணவரோடு பேசியிருக்கிறேன். எனவே, அவர்கள் விரும்புகிற வாழ்வாதாரப் பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான விஷயம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை விசாரிப்பதற்கு ஒரு கமிட்டி போடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். கமிட்டி போடுவது என்பது, கிணற்றிலே கல்லைப் போடுவது என்பதற்கு ஒப்பாகச் சொல்வதுண்டு. இது அரசினுடைய நிலையைப் பொறுத்தவரையில் நான் சொல்வது. எனவே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், ஒரு நாளைக் குறிப்பிட்டு, இத்தனை நாட்களுக்குள் என்று ஒரு time limit–ஐ நிர்ணயித்தால்தான் இதற்கு முறையான தீர்வு கிடைக்கும் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் Lab Technician test செய்தபோது negative என்று report கொடுத்திருக்கிறார்கள். தவறு நடந்திருக்கிறது. எந்த இடத்தில் தவறு நடந்திருக்கிறது என்று பல்வேறு கோணங்களில் பார்க்கிறோம். அதற்காக மதுரையிலிருந்து ஒரு expert committee வந்து அந்த Blood Bank–ல் உள்ள Chief Doctor சிந்து அவர்கள் தலைமையில் ஒரு team–மும், இந்தத் தவறைக் கண்காணிக்கத் தவறிய உயர் அலுவலர்கள் யார்? யார்?





என்பதைக் கண்டறியவும் தனியாக ஒரு team போட்டிருக்கிறோம். Time bound என்ற அடிப்படையில் நிச்சயம் காலதாமதமின்றி விசாரணை செய்து, அறிக்கை பெற்று தவறு செய்த அதிகாரிகள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். இன்று ஆறு உறுப்பினர்கள் விவாதத்திலே பேச இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது உரையினை சுருக்கமாக முடித்து அவையினுடைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

***திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

'மார்கழி திங்கள் மதிநிறைந்த நன்னாளாம்' என்று ஆண்டாள் திருமகள் போற்றிய புனித மார்கழி மாதத்தில் சட்டசபையைக் கூட்டியதற்கு நன்றி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று மார்கழி 21 ஆம் நாள். பக்த அனுமன் ஜெயந்தி.
'ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால் சொரியும்
வள்ளல் பெரும்பசுக்கள்... என்ற இன்றைய பாசுரம்.
"வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை
திங்கள் திருமுகத்து சேய்இழையார் சென்றுஇறைஞ்சி
அங்கப் பறை கொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான்கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைதோள்

[திரு. ஆர். நடராஜ்] [*2019 ஜனவரி 5*

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்”

என்று காக்கும் கடவுள் கண்ணபிரானை மார்கழி முப்பது நாளும் பாடிய திருமகள் ஆண்டாளை துதித்து, தெய்வமாகிய கழகத்தையும், ஆட்சியையும் காக்கும் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வியாழன் அன்று அவையில் நிகழ்ந்த இரங்கல் தீர்மானம் பண்பாட்டின் பரிமாணம். மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறித்து பேசிய மாண்புமிகு முதல்வரும், மாண்புமிகு துணை முதல்வரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், மாண்புமிகு உறுப்பினர்களும் கலைஞரின் தொண்டுக்கும், தமிழுக்கும் பாராட்டிய பாங்கு நெகிழ வைத்தது.

எல்லா துறைகளையும் உள்ளடக்கி 40 அம்சங்கள் கொண்ட முழுமையான திட்ட வடிவை தெளிவாகக் கொடுத்தமைக்கு ஆளுநர் உரைக்கு நன்றி சொல்லவேண்டும்.

‘VISION–*2023*’ என்ற வளர்ச்சிப் பாதையில் தமிழகம் பயணிக்க அம்மா அவர்கள் அளித்த தொலைநோக்குத் திட்டத்தை திறம்பட செயலாக்கும் தமிழக அரசுக்கு நன்றி.

தொழில் வளர்ச்சி, மின்னாளுமை, தகவல் மற்றும் தொழில்நுட்பம், வேளாண்மை, இளைஞர் மேம்பாடு, உணவு பதப்படுத்தல், சுற்றுப்புறச்சூழல், சுற்றுலா, வனப் பாதுகாப்பு உட்பட பல்வேறு துறைகளுக்கான கொள்கை வடிவமைப்புகள் வெளியிடப்பட்டு, ஒருங்கிணைந்த வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

திட்டங்கள் செயல்வடிவம் பெற உரிய உடனடி ஆணைகள் தேவை. To cut the Gordian knot என்ற ஆங்கில மரபுத்தொடர் உண்டு. மாவீரன் அலெக்சாண்டர் காலத்தில் ‘ப்ரைஜியா’ நாட்டு அரசன் கார்டியஸ் வடிவமைத்த அவிழ்க்க முடியாத முடிச்சினை தனது வாளால் வெட்டி அவிழ்த்தவர் ஆசியா கண்ட பேரரசன் ஆவார் என்ற தெய்வ வாக்கு பலிக்கும்வகையில் ஆட்சிபுரிந்தான் அலெக்சாண்டர். தீர்க்க முடியாத பிரச்சினை தீர்க்கப்பட்டால் ‘Gordian முடிச்சு அவிழ்க்கப்பட்டது’ என்று புகழ் பாடுவர்.



*2019 ஜனவரி 5*] [திரு. ஆர். நடராஜ்]

முட்டுக்கட்டை கொடுக்கக்கூடிய 11,286 கோப்புகளை ஆராய்ந்து ஆணை வழங்கி Gordian முடிச்சுகளைத் தொடர்ந்து அவிழ்த்து வெற்றிகாணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–10*

பேரிடர் எப்போது தாக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், தாக்கும்பொழுது எவ்வாறு அதை நிருவாகம் எதிர்கொள்கிறது என்பது அரசின் ஆளுமையைக் குறிக்கிறது. Disaster Mitigation, பேரிடர் முன்னெச்சரிக்கை மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் பேரிடர் ஆளுமையின் மைய குறியீடுகள். கஜா புயலின்போது, மெச்சத்தக்கவகையில் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது, போற்றுதலுக்குரியது. சேதாரம் பற்றி உடனடி கணக்கெடுப்பு, 4.81 இலட்சம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், 6.5 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் அளித்தல், மத்திய அரசிடம் ரூ.15,190 கோடி நிவாரண நிதி கோரிக்கை, ரூ.2,335.48 கோடி முதற்கட்ட நிதி அளித்தல், அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பெட்டகம் என்று வரலாறு காணாத நிவாரண நடவடிக்கைகள். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2004 ஆம் ஆண்டு சுனாமி தாக்கியபோதும், 2005 ஆம் ஆண்டு மழை, வெள்ளம் தாக்கியபோதும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் ஆளுமையை நினைவூட்டியது. அம்மா அவர்களிடம் பாடம் பயின்றவர்கள் அல்லவா? குருவை மிஞ்சிய சிஷ்யர்கள் அடங்கிய பெருமைக்குரிய அம்மாவின் அரசை பாராட்டுகிறேன்.

இது இளைஞர்கள் உலகம். தமிழக இளைய தலைமுறையினர் மிக ஆர்வமாக உயர் கல்வியில் ஈடுபடுகிறார்கள். நமது உயர் கல்வியில் 48.6 என்ற மொத்த சேர்க்கை விகிதம் நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை என்பது மட்டுமல்ல, உலக அளவில் சீனா 43 சதவிகிதம், ஐரோப்பிய நாடுகளில் 40 சதவிகிதம் இருக்கையில், மேலை நாடுகளைவிட அதிகமாக நமது சேர்க்கை விகிதம் இருக்கிறது என்பதில் நாம் எல்லோரும் பெருமைகொள்ள வேண்டும்.

மக்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்வது அரசின் கடமை. 6 முதல் 7 சதவிகிதம் தொழிலாளர்கள் முறைப்படுத்தப்பட்ட

[திரு. ஆர். நடராஜ்] [*2019 ஜனவரி 5*

*தொழில்களிலும், 50 சதவிகிதத்தினர் விவசாயத்திலும், மீதமுள்ளவர்கள் சேவை மற்றும் அமைப்புசாரா நிறுவனங்களிலும் பணியாற்றுகிறார்கள். அரசு வேலை, முறைப்படுத்தப்பட்ட அமைப்புகள், சேவை பணிகள் இவற்றில்தான் பணியாற்ற இளைஞர்கள் விரும்புகிறார்கள்.*

*நாட்டின் முன்னேற்றத்திற்கு உற்பத்தித் துறையில் மக்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அதற்கான கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாக தடையில்லா மின்சாரம், சாலை விரிவுபடுத்துதல், முதற்கட்டமாக ரூ.608 கோடி செலவில் 1,436 கி.மீ. சாலைகளைத் தரம் உயர்த்துதல், இரண்டாம் கட்டத்தில் ரூ.882 கோடி செலவில் 1,538 கி.மீ. சாலைகளைத் தரம் உயர்த்த, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–*II, *ரூ.3,770 கோடி செலவில் மெட்ரோ இரயில் திட்டம் சென்னை வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரை முதல் கட்ட விரிவாக்கத் திட்ட சேவைகள், மூன்று வழித்தடங்கள் உள்ளடக்கிய இரண்டாம் கட்ட திட்டம் 107.55 கி.மீ. நீளத்திற்கு செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.*

*சட்டம்–ஒழுங்கு சீராக பராமரிக்கப்படுகிறது. இந்தியாவில் பாதுகாப்பான நகரம் சென்னை. இந்தியா டுடே நிறுவனத்தால் செயல்திறனுக்கான சிறந்த மாநிலம், உறுப்பு மாற்று சிகிச்சை, உயர்தர சுகாதார சேவைக்கு அங்கீகாரம், பள்ளிக் கல்வியில் புரட்சி, உட்கட்டமைப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு போன்ற பல்வேறு துறைகளில் தமிழகம் சிறந்த மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டிருப்பது பெருமைக்குரியது. அமைதி, வளர்ச்சி கட்டமைப்பு உறுதியாக இருப்பதால், தொழில் துவங்க உகந்த மாநிலம் தமிழகம். உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடக்க இருக்கிறது. அதற்கு முன்னோடியாக ரூ.32 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்க்கும் வகையில், 15 தொழில் நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கு தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நிச்சயமாக முதலீட்டு குறியீடு எட்டப்படும்; அதிகமாக வேலைவாய்ப்பு உருவாகும்.*

"The poor of the masses cannot be helped by mass production but only production by masses" *என்றார் மகாத்மா காந்தி அவர்கள். சுயதொழிலை ஊக்குவிக்கும் விதமாக புதிய தொழில்முனைவோர்களையும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் ஒற்றைச் சாளர முறையையும் மேம்படுத்தி, புதிய தொழில்முனைவோர் தொழில் மேம்பாட்டுத்*



*2019 ஜனவரி 5*] [திரு. ஆர். நடராஜ்]

*திட்டம் வலுவாக்கப்பட்டு, அதற்கான புதிய கொள்கை வெளியிடப்படும் என்ற அறிவிப்பு நல்ல முடிவு. மேலும் பாதுகாப்பு தளவாடங்கள், வானூர்தி சாதனங்கள்* (Defence and Aerospace production corridor) *தயாரிப்பது உறுதி செய்யப்படும் என்பது நல்ல அறிவிப்பு.*

*பிற்பகல் 12–15*

*குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், 25 சதவிகிதம் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய அரசு துறைகள், பொது நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மகாத்மா காந்தியின் கொள்கையைச் செயல்படுத்தும் விதமாக இது அமைந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.* Change is permanent*–மாற்றம்தான் நிரந்தரம். 1,800 ஆம் வருடத்தில் துவங்கிய முதல் தொழில் புரட்சி, இப்போது உலகம்* Internet of things, Cloud technology, automation *என்ற நான்காவது தொழில் புரட்சியை கண்டுகொண்டிருக்கிறது. மாறிவரும் உலகில் புதிய திறன்கள் தேவைப்படுகின்றன. உணர்ச்சிப்பூர்வமான அறிவு (*Emotional intelligence), *பன்முக புரிதல் சக்தி* (cognitive flexibility) *ஆகியவை இன்றைய தேவைகள். அதற்கேற்றவாறு* Data Science, Analytics, Product Designing *போன்றவை பற்றி பயிற்சி அளிக்க வேண்டும். வேலைக்கு உகந்த செயல் திறன் அளிக்க தமிழக திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில் துறைகளுடன் இணைந்து மத்திய அரசின் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் பயிற்சியையும், வேலைவாய்ப்பையும் உறுதி செய்ய நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது.*

*அரசுப் பணி 'தெய்வீகப் பணி' ஆகும். அரசுப் பணியில் சேர இளைஞர்கள் ஆர்வமாக இருக்கின்றனர், தமிழக தேர்வாணையம் நடத்தும் அரசுப் பணிக்கான போட்டித் தேர்வில் பங்குகொள்ள சுமார் 50 இலட்சம் தேர்வர்கள் பதிவு செய்துள்ளது தேர்வாணையத்தின்மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது. இந்த வருடம் தேர்விற்கான அட்டவணையை உரிய நேரத்தில் வெளியிட்டதற்கு தேர்வாணையத்திற்கு நன்றி.*

*முதன்மை குரூப்–*I*–ல் காலிப் பணியிடங்கள் 139 என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மற்ற பணியிடங்களுக்கான காலியிடங்கள் அறிவிக்கப்படவில்லை. விரைவில் அரசு காலிப் பணியிடங்களை தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.*

[திரு. ஆர். நடராஜ்] [2019 ஜனவரி 5

விவசாயத்தை மேம்படுத்தும்விதமாக நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்த, தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் 2,962 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளது. 'குடிமராமத்து திட்டம்' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த உன்னத திட்டம். இந்திய குடிமக்கள் எல்லோருக்கும் 'ஆதார் அட்டை' வழங்கப்பட்டது ஒரு சாதனை என்கிறார்கள். அதுபோல அனைவருக்கும் பொது விநியோகத் திட்டத்தில் ஆதார் எண்ணுடன் இணைத்து குறுகிய காலத்தில் 'ஸ்மார்ட் கார்டு' வழங்கியது மிகப் பெரிய சாதனை.

'குடிசையில்லா கிராமங்கள், குடிசைப் பகுதியில்லா நகரங்கள் திட்டம்' அம்மாவால் உருவாக்கப்பட்டது. Right to Housing என்ற அடிப்படை உரிமையை நிலைநாட்டும்விதமாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 21,604 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சம் வீடுகள் கட்டும் பணிகளை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதில், நான் சட்டசபையில் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மயிலை வெள்ளீஸ்வரன் தோட்டம், குப்பைமேடு, பல்லக்கு மாநகர், ராஜா முத்தையாபுரம், ஆண்டியமான் தோட்டம், நாட்டன் தோட்டம் மற்றும் விசாலாட்சி தோட்டம் ஆகிய குடியிருப்புகளை அகற்றி, புது குடியிருப்புகள் கட்ட ஆணை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி.

சென்னை பாதுகாப்பு நகரமாகவும், பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் முதன்மை மாநிலமாகவும் இருப்பது பெருமை அளிக்கிறது. 'காவலன்' என்ற மென்பொருள்மூலம் 'தகவல் பரிமாற்றம்' இந்தப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

சிசிடிவி கேமிராக்கள் முக்கியமான இடங்களில் அப்பகுதி மக்களோடு இணைந்து பொருத்தப்படுகின்றன. இந்தியாவில் முதன் முறையாக கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்ட நகரம் சென்னை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2004-ல் சென்னை பிரதான சாலைகளான காமராஜ் சாலை, அண்ணா சாலை, பூவிருந்தவல்லி சாலை சந்திப்புகளில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்டு, கட்டுப்பாட்டு அறையிலிருந்து இயங்கும் தொழில்நுட்பத்தோடு அமைக்கப்பட்டன. அப்போது, நான் சென்னை காவல் ஆணையராக இருந்தேன். இப்போது அம்மா அரசு, இத்திட்டத்தை விரிவுபடுத்தியது போற்றத்தக்கது.



2019 ஜனவரி 5] [திரு. ஆர். நடராஜ்]

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்த அரசு ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். குஜராத் மாநிலத்தில் இதற்கு வழிவகை செய்துள்ளார்கள். இதுசம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து செலவு செய்வதற்கான ஆணைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுகோள் வைக்க கடமைப்பட்டுள்ளேன். இப்போதுள்ள ஆணையில் பல பணிகள் தடை செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, தொகுதியில் உள்ள காவலர் குடியிருப்புகளுக்கு அவசர மராமத்து பணிகளுக்கு நிதி ஒதுக்க ஆணையிடுமாறு வேண்டுகிறேன்.

அதேபோல், பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்களுக்குப் பதிலாக புதிய குழாய் போட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுக்க ஆணையில்லை. புதிய இடத்திற்கு குழாய் போடலாம். ஆனால், பழுதடைந்த பழைய குழாய்களை நீக்க முடியாது. சென்னையில் பல இடங்களில் இந்தப் பிரச்சினை உள்ளது. சிறு மதிப்பீட்டில், விரைவில் முடிக்கக்கூடிய பணி தாமதமாகிறது. எனது தொகுதியில் 5 கிலோ மீட்டர் நீளம் பக்கிங்ஹாம் கால்வாய் உள்ளது. அதில் குப்பைகள் சேர்ந்துள்ளன. அதனைக் களைய நிதி ஒதுக்க முடியாது. ஆகையால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பணிகளுக்கு, நிதி ஒதுக்கும் அரசாணையை மறு பரிசீலனை செய்யக் கோருகிறேன்.

எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை பேச வாயப்பு கிடைத்தபோது, சபையில் வைத்துள்ளேன். மாண்புமிகு துணை சபாநாயகர்போல் நானும் குறைகளை நிறைவேற்றியதற்கு நன்றி கூறும் வாய்ப்பு விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எனது கோரிக்கைகளை நான் படித்ததாக ஏற்று பதிவு செய்ய வேண்டுகிறேன்.

அதில், முக்கியமான கோரிக்கை லஸ் சர்ச் ரோடு பக்கத்தில் இருக்கக்கூடிய பல்லக்கு மாநகர் குடிசைப் பகுதியில், இரண்டு டாஸ்மாக் கடைகள், அருகருகே இருக்கின்றன. அவற்றை அகற்ற வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனை நிச்சயமாக செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-20

அதேபோல் தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையிலுள்ள டாஸ்மாக் கடைகளை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதிகளுக்குப் புறம்பாக அவை

அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்கள். இதில் அரசு உடடினயாக கவனம் செலுத்தி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2012 ஆம் ஆண்டில் சட்டசபையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உரை, "இந்த அரசை பழிக்கும் உண்மைக்கு மாறான அறிக்கைகள் அரசின் நற்பணிகளை மறைத்து விடாது. இந்த அரசை பழிக்கும் உண்மைக்கு மாறான அறிக்கைகள் அரசின் நற்பணிகளை மறைத்து விடாது." புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தனது பாடலில் கூறியபடி

"பொய்மை எப்போதும் ஓங்குவதும் இல்லை;
உண்மை எப்போதும் தூங்குவதும் இல்லை;
என் மனதை நான் அறிவேன்;
என் உறவை நான் அறிவேன்." (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வைர வரிகளை நினைவுகூருகிறேன். அது இப்போதும் சாலப் பொருந்தும்.

"மனைவியை ஆள, அடக்க நினைத்தால் மகிழ்ச்சியில்லை; மனைவியை ஆள, அடக்க நினைத்தால் மகிழ்ச்சியில்லை; மனைவியின் உணர்வுகளைப் புரிந்து இல்லறத்தை நல்லறமாக்கினால் ஆனந்தத்திற்கு எல்லையில்லை; மனைவியின் உணர்வுகளைப் புரிந்து இல்லறத்தை நல்லறமாக்கினால் ஆனந்தத்திற்கு எல்லையில்லை என்பது முதியோர் வாக்கு. மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, மதிப்பளித்து மக்கள் பணி செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மண்ணில் நல்வண்ணம் காண உழைக்கும் அரசு. என்றென்றும் நீடித்திருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் சுபிட்சம் நிலைத்திருக்கும். காலச் சுவட்டில் கால் சுவடுகளைப் பதித்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகியோர் வழியில் தடம் மாறாமல் தடம் பதிக்கும் தமிழக அரசின் செயல் திட்டங்களின் இரத்தின மணிகளாக மிளிரும் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவையோர் அனைவருக்கும் இதயம் கனிந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





**தொகுதிக் கோரிக்கைகள்:**

மயிலாப்பூரில் 124–வது வார்டில் வெங்கடேச அக்ரஹாரத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமுள்ளது. அந்த இடத்திலுள்ள பழமையான கட்டடத்தை இடித்துவிட்டு, பல்நோக்கு அங்காடி மற்றும் தரைதளத்தில் வாகன நிறுத்தங்கள் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில், மாட வீதி, லஸ் சர்ச் ரோடு, லூப் ரோடு ஆகிய சாலைகளை மேம்படுத்தும் பணியின் ஓர் அங்கமாக (Beautification Project) மயிலை கபாலீஸ்வரர் கோயிலின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வகையில் நான்கு மாட வீதிகளிலும் Heritage Light பாரம்பரிய மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு 91 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்து, மேம்படுத்தும் பணியை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, 123–வது வார்டு, லஸ் அவென்யு, நாகேஸ்வரராவ் பூங்கா அருகே ஜவஹர் சிறுவர் மன்றக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்த சிறு கட்டடம் சுமார் பத்து கிரவுண்ட் பரப்பளவுள்ள காலியிடத்தில் அமைந்துள்ளது. இந்த இடத்திற்கு மூன்று புறமும் சாலை வசதி உள்ளது. இயல், இசை, நாடகம் போன்ற பல்கலைகளை வளர்க்கும் வகையில் பாரத ரத்னா டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி பெயரில் அரங்கம் அமைக்க மத்திய அரசு நிதி அளித்திருப்பதாக அறிகின்றேன். இந்த அரங்கத்தை மேற்கண்ட இடத்தில் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாப்பூர் கலங்கரை விளக்கம் இரயில் நிலையம் அருகிலிருந்து பசுமை வழிச்சாலை இரயில் நிலையம் வரை செல்லும் பக்கிங்ஹாம் கால்வாய் ஓரத்தில் வண்ணக் கல் பதித்து நடைபாதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாப்பூர் பசுமை வழிச்சாலை முகப்பில், தேஸ்முக் ரோடு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்திற்கு "டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டுத் திடல்" என பெயர் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். நடராஜ்] [2019 ஜனவரி 5

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, 173—வது வார்டு, கோவிந்தசாமி நகர், இளங்கோ தெரு குடியிருப்புகளை வரைமுறைப்படுத்தி சுமார் 48 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்துவரும் குடியிருப்புவாசிகளுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

***திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துகளை இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 32 ஆண்டு காலம் தான் பெற்ற பிள்ளையைப்போல என்னைப் பராமரித்து, ஒரு சாதாரண விவசாய, சுயமரியாதை குடும்பத்தில் பிறந்த என்னை, தன்னுடைய அமைச்சரவையில் சேர்த்து அழகு பார்த்த, உலகம் போற்றும் உத்தமத் தலைவர், எங்கள் கழகத்தினுடைய தலைவர், இந்த அவையில் 56 ஆண்டு காலம் சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, முதலமைச்சராகப் பணியாற்றி, 80 ஆண்டு காலமாக மக்களுக்காக உழைத்து, இன்றைக்கு தன்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து இரவலாகப் பெற்ற இதயத்தை தன்னுடைய தலைவரின் திருவடியில் சமர்ப்பித்து, அவரோடு உறங்கி, ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிற என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத்தினுடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், தமிழகத்தினுடைய எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா மற்றும் துணைக் கொறடா ஆகியோருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.



2019 ஜனவரி 5] [திரு. உ. மதிவாணன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் நான் கலந்துகொள்கிற நேரத்தில், இன்றிலிருந்து 50 நாட்களுக்கு முன்பாக பல்வேறு மாவட்டங்கள் என்று குறிப்பிடுவதைவிட, நாகப்பட்டினம் மாவட்டத்தில், குறிப்பாக, என்னுடைய கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் தாக்கிய புயலின் காரணமாக என்னுடைய தொகுதி மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை விவரிக்க வேண்டிய அவசியத்தில் நான் இருக்கிறேன். 16—11—2018 அன்று புயல் கரையைக் கடந்த பிறகு என் தொகுதி மக்களைப் பார்க்கச் சென்றிருந்த நேரத்தில் "யாரும் எங்களைப் பார்க்க வரவில்லை" என்ற ஆதங்கத்தோடு தெரிவித்தார்கள். அழுது புரண்டார்கள். அரசு அதிகாரிகள் வரவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்தார்கள். அவர்களுடைய வருத்தத்திற்குக் காரணம் இருந்தது.

பிற்பகல் 12—25

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நம்மை நம்பி இருக்கக்கூடிய மக்கள், நமக்கு வாக்களித்த மக்கள், அவர்கள் நல்லவிதமாக சிறப்பாக வாழ்ந்த நேரத்தில் அவர்களிடம் சென்று நாம் வாக்கு கேட்டு, வெற்றி பெற்று இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக வந்திருக்கிறோம். ஆனால், முந்தைய தினம் எல்லாம் பெற்றிருந்தவர்கள், மறுநாள் காலையில் எல்லாம் இழந்திருக்கின்ற நேரத்தில் நம்மை பார்ப்பதற்கு யாராவது வர மாட்டார்களா என்ற ஏக்கத்தோடு இருந்தார்கள். காலையில் 8½ மணி, 9 மணிக்கு நான் சந்திக்கின்ற நேரத்தில்கூட ஒரு தாய், "இரவு முழுவதும் புயல் அடித்தது, யாரும் வரவில்லை, இப்பொழுதுதான் வந்திருக்கிறீர்களா" என்று கேட்டார்கள். ஆகவே, அவர்கள் எதிர்பார்ப்போடு இருந்த நேரத்தில் நாம் செல்லாத காரணத்தால் அந்த மக்கள் வருத்தத்தோடு இருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கஜா புயலின் பாதிப்பினால் அந்த மக்கள் அடைந்த வேதனைகளை இங்கே பதிவு செய்ய வேண்டும், நான் அந்தத் தொகுதியிலிருந்து வந்திருக்கிறேன் என்று இங்கே சொன்னார்கள்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [*2019 ஜனவரி 5*

அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அரசு அதிகாரிகள் யாருமே வரவில்லை என்று சொன்னார்கள். ஒரு தாழ்மையான கருத்தை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதல் நாள், அனைத்துப் பகுதிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சருடைய உத்தரவைப் பெற்று, அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் அனைத்து அரசு அலுவலர்களையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களை அரசு அலுவலர்களோடு சென்று நிவாரண முகாமிற்கு—5½ மணி அளவிலே 5,000 பேர்தான் நிவாரண முகாமிலே இருக்கின்றார்கள். 7½ மணிக்குள்ளாக தாழ்வான பகுதியில் உள்ள அனைத்து மக்களையும் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'என்ன செய்வீர்களோ தெரியாது, வேண்டுமானால் காவல் துறையின் உதவியைக்கூட நாடுங்கள், அந்த மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் அவர்கள் அந்தப் பகுதியில் அரசு அலுவலர்களோடு சென்று மீனவ மக்களை எல்லாம் சந்தித்து, நீங்களும்கூட வந்தீர்கள், மத்திய குழு வருகின்றபோது மீனவ மக்கள் சொன்னார்கள், 'ஐயா, அரசு அலுவலர்கள் வந்தார்கள், அமைச்சர்கள் வந்தார்கள், அதனால் இதுவரை வரலாற்றிலே இல்லாத அளவுக்கு ஒரு மீனவர்கூட உயிரிழப்பு இல்லை என்கின்ற ஒரு சரித்திரத்தை இந்தப் புயலிலே அடைந்திருக்கிறோம்'. நீங்களும் அதைக் கேட்டீர்கள். ஆனால், யாருமே வரவில்லை என்று பொத்தாம்பொதுவாக உள்நோக்கத்தோடு ஒரு கருத்தை இங்கே பதிய வைப்பது என்பது எந்த வகையில் நியாயம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது கஜா புயலால் பாதிக்கப்பட்டபொழுது எந்த அதிகாரியும் அந்தப் பகுதிக்கு வரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே பதிவு செய்துள்ளார். அது தவறானது. மாண்புமிகு



*2019 ஜனவரி 5*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, கஜா புயல் வருவதற்கு முன்பாகவே இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, என் தலைமையில் 2 முறை கூட்டம் கூட்டப்பட்டு, அந்தக் கூட்டத்தில் மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலர், மூத்த இந்திய ஆட்சிப் பணியாளர்கள் எல்லாம் கலந்துகொண்டு, புயல் ஏற்பட்டால் நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தெல்லாம் ஆலோசித்து அந்த ஆலோசனையின்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், புயலால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அறிவுறுத்தப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, புயல் ஏற்படக்கூடிய மாவட்டங்களிலே அந்த மாவட்ட அமைச்சர்கள் அங்கேயே தங்கியிருந்து புயல் வருகின்றபொழுது மக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது, அதற்கு முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அவர்களுக்குத் துணையாக மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஆகவே, இவர்களையெல்லாம் முன்கூட்டியே அனுப்பி வைத்த காரணத்தாலே, அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்த காரணத்தாலே அனைத்து மின் இணைப்புகளும் புயல் அடிப்பதற்கு முன்பு 6 மணிக்கே நிறுத்தப்பட்டன. மின்சாரம் எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டது. இயக்கப்பட்ட போக்குவரத்து எல்லாம் நிறுத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல், இந்தப் புயல் கடுமையாகப் பாதிக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் குடிசையில் வாழ்ந்த மக்கள், தாழ்வான பகுதியில் வாழ்ந்த மக்களையெல்லாம், அதிகாரி பெருமக்கள்தான் அழைத்து வந்து பாதுகாப்பான முகாம்களில் தங்க வைத்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 81,948 நபர்களை 471 முகாம்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்க வைத்ததன் காரணமாக உயிர்ச்சேதம் பெருமளவுக்கு தடுக்கப்பட்டிருக்கின்றது.

*பிற்பகல் 12–30*

ஆகவே, அதிகாரிகள் எல்லாம் வந்த காரணத்தினால்தான் இந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கஜா புயல் ஏற்பட்டபொழுது

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 5

அங்கு யாரும் வரவில்லை என்று குற்றச்சாட்டு கூறுவது தவறு. புயல் வருவதற்கு முன்பாகவே அங்கேயிருக்கின்ற மாவட்ட அமைச்சர்கள், மூத்த இந்திய ஆட்சிப் பணியாளர்கள், அங்கேயிருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரிகள், மின்சாரத் துறை அதிகாரிகள், வேளாண்மைத் துறை அதிகாரிகள் இன்னும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் எல்லாம் அங்கே அனுப்பிவைக்கப்பட்டு, புயல் ஏற்படுவதற்கு முன்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டதை நான் மறுக்கவில்லை. புயல் அடிப்பதற்கு முதல் நாள் அமைச்சர்கள் சென்றார்கள், அதிகாரிகளும் சென்றார்கள், நானும் அனைத்து முகாம்களுக்கும் சென்றேன். எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், பணியாளர்கள் அங்கே தங்கிக்கூட இருந்தார்கள். நான் சொல்வது புயல் அடித்த மறுநாள் காலை 8.30, 9.00 மணிக்கு நான் மோட்டார் சைக்கிளில் சென்றேன். சாலையில் ஒவ்வொருவராக என்னுடைய கட்சித் தொண்டர்களை வைத்துக்கொண்டு நான் சென்ற நேரத்தில் மக்களிடத்தில் இந்த ஆதங்கம் இருந்தது. உடனடியாக அதிகாரிகள் வரவில்லை என்ற ஆதங்கம் இருந்தது என்பதைச் சொல்கிறேனே தவிர, அரசு நடவடிக்கைகள் எடுத்தது என்பதை நான் மறுக்கவில்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு என்னுடைய கட்சிக்காரரே சொன்னார். பாதுகாப்பு கொடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சரை வைத்துக்கொண்டே சொன்னார். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், மறுநாள் காலையில் செல்கிறபோது மக்களிடம் ஆத்திரம் வந்ததற்குக் காரணம் எந்த அதிகாரிகளும் செல்லவில்லை என்ற குறை இருந்த காரணத்தால் என்பதைத்தான் நான் தெரியப்படுத்துகிறேன்.



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு கீழ்வேளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இங்கே வரிசையாக உண்மையில்லாத செய்திகளை அடுக்கடுக்காக அவைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருடைய தொகுதியில் 3 கடற்கரையோர மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. ஒன்று விழுந்தமாவடி, இன்னொன்று காமேஸ்வரம் அடுத்தது செருதூர். இந்த 3 கிராமங்களுக்கும் நான் மற்றவர்களோடு இணைந்து அரசு அதிகாரிகளோடு கடற்கரைக்கு நேராகச் சென்று தள்ளி வைக்கப்பட்டிருக்கின்ற படகுகளை இன்னும் அதிகமாகத் தள்ளி வையுங்கள், புயல் கடுமையாக அடிக்க இருக்கிறது, வெயிலடிக்கிறது என்று நம்பிவிடாதீர்கள், மேகம் இல்லை என்பதால் புயல் வராது என்று நினைக்காதீர்கள், மழை இல்லை என்பதால் புயல் வராது என்று நினைக்காதீர்கள். இரவு கண்டிப்பாக புயல் அடிக்கப் போகிறது, நம்முடைய பகுதியிலேதான் அடிக்கப் போகிறது, அதுவும் இரவு 6 மணி நேரம் அடிக்கும் என்று சொல்கிறார்கள், வேதாரண்யத்திலேதான் புயல் கரையேறப் போகிறது, நம்முடைய வட்டாரத்திலேதான் இது பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது என்பதைச் சொல்லி, கண்டிப்பாக 6 மணிக்கு முன்னதாக முகாமுக்கு வந்துவிடுங்கள். அதற்கு முன்னதாக பெரியவர்களையும், குழந்தைகளையும் கட்டாயம் அனுப்பி வைத்துவிடுங்கள். அதற்குப் பின்னர் மற்றவர்கள் சாப்பிட்டுவிட்டுக்கூட காலையில் வரலாம். ஆனால் முதியவர்களையும், பெரியவர்களையும், குழந்தைகளையும் கட்டாயமாக அனுப்பி வைத்துவிட வேண்டுமென்று அவருடைய தொகுதியில் உள்ள அனைத்து கடற்கரைக் கிராமங்களுக்கும் நாங்கள் சென்று சொல்லி வந்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர் சொல்கிற செய்தி என்னவென்றால், 'காலை 8–30 மணிக்கு நான் போனேன். அப்பகுதி மக்கள் என்னிடத்திலே அதிகாரிகள் வரவில்லை, அவர்கள் வரவில்லை, இவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள்' என்று சொல்கிறார். 8–00 மணிக்கு அல்லது 8–30 மணிக்கு அவர் தொகுதிக்குள்ளே போகிறார் என்று சொன்னால், ரோட்டில் மரங்கள் அறவே விழுந்துவிடவில்லையா? அந்த மரங்களைத் தாண்டி இவர்

எப்படி பைக்கில் உள்ளே போனார்? 300–க்கும் மேற்பட்ட ஜே.சி.பி.-க்களை அனுப்பி, மரங்களை வெட்டி, துப்புரவு செய்ததற்குப் பிறகுதான் உள்ளே அனைவரும் நுழைய முடிந்தது, நடக்க முடிந்தது. அப்படியிருக்கும்போது, தொகுதி மக்களை இவர் எப்படி 8–30 மணிக்குப் போய் பார்க்க முடியும்? வேதாரண்யத்திலிருந்து நாகப்பட்டினத்தை நோக்கி நாங்கள் மரங்களை அறுத்துக்கொண்டு வருகிறோம். நாகப்பட்டினத்திலிருந்து அதிகாரிகள் மரங்களை அறுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கே 36 மணி நேரம் ஆகிவிட்டது. அப்படியிருக்கும்போது புயல் அடித்த 16 ஆம் தேதி காலையில் 6–30 மணிக்கு எப்படி உள்ளே போக முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அக்கரைப்பேட்டை, மரம் விழுகிற இடம் இல்லை. அக்கரைப்பேட்டை, செருதூர், பி.ஆர். புரம், பிறகு பி.ஆர். புரத்திலிருந்து வேட்டைக்காரனிருப்பு வரைக்கும் போய் வந்திருக்கிறேன். அதற்குப் பிறகுதான் காமேஸ்வரம் வரை போனேன். அதற்குமேல் நான் போகவில்லை. அதற்குப் பிறகு 17 ஆம் தேதி எங்களுடைய கழகத்தின் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் அக்கரைப்பேட்டை கிராமத்திலிருந்து தொடங்கி மன்னார்குடி வரை மக்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்டார். சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் 'என்ன காரணம்' என்று கேட்டபொழுது, தங்களுடைய குறைகளைச் சொன்ன நேரத்திலே, 'அதை அரசுக்கு நாங்கள் தெரிவிக்கிறோம்' என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

*பிற்பகல் 12–35*

சாலை மறியல் ஏற்பட்ட நேரத்தில்கூட, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அங்கே தங்கியிருந்த நேரத்தில், நான் ஒரு அதிகாரியைத் தொடர்புகொண்டு பேசியபோது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் என்னுடன் பேசினார்கள். சாலை மறியல் நடக்கிறது என்று அவர்கள் சொன்ன நேரத்தில், எங்களுடைய தலைவர், 'இந்த அரசுக்கு எந்த அளவிற்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்' என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். எங்கள் கழகத் தோழர்களால்





உங்களுக்கு பிரச்சினையே வராது என்ற உத்தரவாதத்தைக்கூட நான் அவரிடம் கொடுத்தேன். ஆகவே, அந்தவகையிலே எங்கள் கழகத் தோழர்கள் ஒத்துழைப்பாக இருந்ததோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்படாத பல்வேறு மாவட்டங்களிலிருந்து கழகத்தின் மூலமாகப் பொருட்களை வரவழைத்துக் கொடுத்தோம். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள் எங்களுடைய பகுதிக்கு பொருட்களை அனுப்பி வைத்தார்கள். அந்த நிவாரணப் பொருட்களையெல்லாம் கழக வித்தியாசமின்றி, கட்சி வித்தியாசமின்றி அனைவருக்கும் வழங்கியது திராவிட முன்னேற்றக் கழகம்.

அதோடு மட்டுமல்லாமல், முரசொலி நிறுவனத்தினுடைய நிருவாக இயக்குநர் திரு. உதயநிதி அவர்களும், நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. மகேஷ் பொய்யாமொழி அவர்களும் நேரடியாக வந்து பல்வேறு உதவிகளைச் செய்தார்கள். அரசாங்கம் அந்த நேரத்தில் எவ்வளவுதான் உதவி செய்தாலும்கூட, நாங்களும் பல்வேறு உதவிகளைச் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, முகாம்களிலே தங்கியிருந்த மக்களின் கூரை வீடுகள் அனைத்துமே அடியோடு சாய்ந்துவிட்டன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், முதலாவதாக அது கடற்கரைப் பகுதி, இரண்டாவதாக பழங்கள் தரக்கூடிய மரங்களுள்ள பகுதி, மூன்றாவதாக மானாவாரியும், விவசாயமும் நிறைந்த பகுதி. கடற்கரைப் பகுதிகளைப் பொறுத்தளவில் கட்டுமரங்கள், விசைப் படகுகள், வலைகள் உள்ளிட்ட அத்தனையும் சீரழிந்து போய்விட்டன. நமது அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆகியோர் வந்தார்கள். அவர்களையும் அழைத்துச் சென்று நான் காட்டினேன். அதோடுமட்டுமல்ல, அதற்கடுத்த நிலையிலுள்ள மரங்கள் அத்தனையும் அடியோடு சாய்ந்து போய்விட்டன. 30 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக இருந்த மரங்கள் அவை. மரங்கள் உயிரோடு இருக்கும்போது பலன் தருமே தவிர, அவை சாய்ந்துவிட்டால், அதிக விலைக்கு அந்த மரங்களை விற்க முடியாது. அத்தனை மரங்களையும் அவர்கள் இழந்திருக்கிறார்கள்.

அதற்கடுத்து குடிசைப் பகுதிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது,

[திரு. உ. மதிவாணன்] [*2019 ஜனவரி 5*

*நிலத்தின் வகைப்பாடு குறித்து எந்தப் பாகுபாடும் பார்க்காமல், எந்த நிலத்தில் அவர்கள் வீடு கட்டியிருந்தார்கள் என்று பார்க்காமல், வீட்டு வரி ரசீதோ அல்லது மின் இணைப்புக்கான ரசீதோ இருக்குமேயானால், அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், பல்வேறு நிலப் பகுதிகளிலே வகைப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு, எந்த வகைப்பாடுள்ள நிலமாக இருந்தாலும், சொந்தமாக வீடு கட்டியிருக்கக்கூடியவர்கள் நிரந்தரமாக நல்ல வீடுகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். கூரை வீடுகளைக் கட்டி, அவை இடிந்துவிட்டால், பட்டா இருந்தால்தான் வீடு கட்டிக் கொடுக்க முடியும் என்ற ஒரு வரையறை இருக்கிறது. எனவே, இந்தத் தருணத்தில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த வரையறையைத் தளர்த்தி, எந்தெந்த இடங்களில் கூரை வீடுகளைக் கட்டி குடியிருந்தார்களோ, அங்கேயே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்த நேரத்தில், கூரை வீடுகளை மாற்றி கான்கிரீட் வீடுகளாக பல்லாயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், உத்தரவாத அட்டைகளையும் நாங்கள் வழங்கியிருந்தோம். ஆனால், அதற்குப் பிறகு வந்த இந்த அரசு, அந்த அட்டைதாரர்களுக்கு வீடு வழங்குவதைப் பொருட்படுத்தாத காரணத்தால், குடிசை வீடுகள் அதிகரித்து, அவை சேதமடைந்திருக்கின்றன. எனவே, அதைக் கருத்திற்கொண்டு குடிசை வீடுகளுக்கு மாற்றாக அனைவருக்கும் கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலால் வீடுகளை இழந்ததால் பாதிக்கப்பட்டுள்ள பெருமக்களுக்கு, அவரவர்களுக்கு தனியாக வீட்டுமனைப் பட்டா இருந்தால், தாமாக வீடு கட்டிக்கொள்ளும் திட்டத்தின்கீழ் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பட்டா இல்லாதவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிலங்கள் கண்டறியப்பட்டு, அங்கு அவர்களுக்கு அடுக்குமாடி வீடுகளாகவோ அல்லது* individual



*2019 ஜனவரி 5*] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*வீடுகளாகவோ, அரசின் நிதியைப் பெற்று கட்டித் தரப்படும். அரசு மூலமாக கிட்டத்தட்ட 8.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீடுகள் கட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதியில் மட்டும் இதுவரை 18,000 வீடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தக் கணக்கில் ஏதேனும் விடுபட்டுப் போயிருந்தால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விடுபட்டுப்போயிருக்கின்ற இடங்களை, இனங்களைக் கண்டறிந்து தெரியப்படுத்தினால் அவையும் சேர்த்து கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இடம் இருக்கிறது, இல்லை என்ற நிலை வேண்டாம், பட்டா இருக்கிறது, இல்லை என்கிற நிலை வேண்டாம். வீடுகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் உறுதியாக வீடு இருக்கிறது. ஏனெனில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதியாக தரமான கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஏதோ அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களிடம் மட்டும் நாங்கள் நிவாரணப் பொருட்களை வாங்கி அனைத்து மக்களுக்கும் கொடுத்ததாகச் சொல்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாங்கள் கொடுத்ததை மறந்துவிட்டுச் சொல்கிறார் என்று நினைக்கின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முதன்முதலாக 15 கிலோ அரிசி, 2 கிலோ பருப்பு, சர்க்கரை, வேட்டி, சேலை, துண்டு, லுங்கி, பக்கெட், மளிகைச் சாமான்கள் உட்பட உங்களுடைய தொகுதியில் அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு நன்றாகத் தெரியும், நீங்கள் அங்கேயே இருந்தீர்கள். அதற்கும் மேலாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உங்களுடைய தலைவர் இல்லத்தில் மரம் விழுந்ததைக்கூட நானும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகச் சென்று எடுத்தோம்.*

[திரு. பி. தங்கமணி] [2019 ஜனவரி 5

நாங்கள்தான் முதன்முதலில் அங்கே சென்றோம், நீங்கள் அங்கே செல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல குடிசை வீடுகள் உள்ள பகுதிகளிலே சமுதாயக் கூடங்கள், புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும். ஏனென்று கேட்டால், 50 பேர் தங்கக்கூடிய ஒரு மாடி வீடு இருக்குமேயானால் தெருவில் உள்ள அத்தனை பேரும் அதிலே தங்கியிருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால், அன்பிற்குரிய தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளுக்குப் பாலூட்டுவதற்குக்கூட ஒதுங்குவதற்கு இடம் இல்லாமல் ஒரு தவிப்பு, வேதனை அங்கே இருந்தது. குடிசைப் பகுதி அங்கே உள்ளது. அதனால், நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எல்லா இடங்களிலும் இல்லாவிட்டாலும், டெல்டா மாவட்டங்களிலாவது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் வீடு இருக்குமேயானால், அங்கு ஒரு சமுதாயக் கூடமோ, பாதுகாப்பு இல்லமோ கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசுக்கு நான் கோரிக்கையாக வைக்கிறேன். இவ்வளவு சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. கஜா புயல் காரணமாக 60–க்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயிருக்கிறார்கள், பொருட்களை இழந்திருக்கிறார்கள், இயக்கங்கள் எல்லாம் அந்த மக்களோடு மக்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால், இந்திய நாட்டினுடைய பிரதமர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்களின் நலன் கருதி, எதிர்காலத்திலே புயல் பாதுகாப்பு மையங்கள் எல்லாம் உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். முதன்முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் என்று, அதாவது புயல் காலங்களில் மட்டுமே பயன்படாமல், சாதாரண காலங்களிலும் அது பயன்படுகிற வகையிலே கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். உங்கள் தொகுதியிலேயும்கூட இருக்கிறது,



2019 ஜனவரி 5] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

நீங்களும் அங்கே வந்தீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அதிக எண்ணிக்கையில், இதுபோன்ற புயல் காலங்களிலே மக்களைப் பாதுகாக்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்யும் என்கிற அந்த உத்தரவாதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கக்கூடிய பாதுகாப்பு இல்லங்கள் என்பது கடற்கரையோரத்தில், மீனவ சமுதாய மக்களுக்கு மட்டும்தான் இருக்கின்றன. ஆனால், புயல் அடிக்கக்கூடிய நேரத்தில் உள்ளே உள்ள மற்ற பகுதிகளுக்கும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கிறேன்.

இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் தமிழ்நாட்டு மக்கள் புயலால் பாதிக்கப்பட்டு வேதனையில் இருக்கிறார்கள், இந்திய நாட்டினுடைய பிரதமர் ஒரு மாநிலத்திற்கு மட்டும் உரிமையுடையவர் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள், 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று சொன்னார்கள். உடனடி நிவாரணப் பணிகளுக்காக ரூ.2,709 கோடியும், Permanent restoration–க்காக ரூ.15,190 கோடியும் நிதியுதவி தேவையென மத்திய அரசிடம் மாநில அரசு கோரிக்கை வைத்தது. ஆனால், இந்த நாட்டினுடைய ஏழைகளைப் பற்றி கவலைப்படாமல், 1,500 கோடி ரூபாய் வரைதான் மத்திய அரசாங்கம் வழங்கியிருக்கிறது. 'ஏழைகளினுடைய சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய பிரதமர் ஏழைகள் கஷ்டப்படுவதை, வேதனைப்படுவதைப் பார்த்து மகிழ்ச்சியடையக்கூடிய மனோநிலையில் இருக்கிறாரோ என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. ஆக, மத்திய அரசாங்கம் இப்படிச் செய்துள்ளதால், 'மத்திய அரசாங்கம் இப்படிச் செய்வது சரியல்ல' என்று ஒரு கண்டனத்தை தமிழ்நாடு அரசு தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உ. மதிவாணன்] [2019 ஜனவரி 5

புயலால் பாதிக்கப்பட்ட பகுதியிலே மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஏழையெளியவர்கள், வங்கிகளிலே தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கடன் பெற்றிருக்கிறார்கள். புயலால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்க நான் சென்றிருந்த நேரத்தில்கூட, கடன் வசூல் செய்வதற்கு அங்கு வந்திருந்தார்கள். அங்கிருந்த மக்கள், ஏழையெளிய பெண்கள், இந்த நேரத்தில் எங்களிடம் கடன் வசூல் செய்ய வந்திருக்கிறார்களே என்று அழுதார்கள். எனவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக வங்கியில் பெற்றிருக்கக்கூடிய அந்தக் கடன்களை அறவே இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மரங்களுக்கு நிவாரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 4 ஹெக்டேர் அளவுக்கு உச்சவரம்பை உயர்த்தியிருப்பதாக நேற்றையதினம் அறிவித்தார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நான் செல்கிற இடங்களில் எல்லாம் சுய உதவிக் குழு பெற்ற கடன்கள் தொடர்பாக வசூலுக்கு வந்தார்கள், கஷ்டமாக இருக்கிறது என்கிற தகவலை இங்கே தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், திருச்சியில் அனைத்து வங்கியாளர்களையும் அழைத்து, தலைமையிடத்து வங்கியாளர்களையும் அழைத்து கூட்டம் நடத்தி, பேசி, மக்கள் வருமானத்தை ஈட்டுகிற காலம் வருகிறவரை 6 மாத காலத்திற்குக் கடன் வசூல் செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும், இப்போது வேண்டாமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். வங்கியாளர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுதவிர, தனியார் நிதி நிறுவனங்கள் மக்களிடத்திலே பணம் கொடுத்து, தினந்தோறும் வசூல் செய்கிற ஒரு பழக்கமும் இருக்கிறது. எந்தெந்தத் தனியார் நிறுவனங்கள் அங்கே பணத்தைக் கொடுத்து வசூல் செய்கிறார்கள் என்கிற பட்டியலையும் தயார் செய்து, மாவட்ட ஆட்சியரிடத்திலே கொடுத்து, அவர்களையும் அழைத்து இதுபோன்ற நெருக்கடியை இந்தக் காலக்கட்டத்தில் நீங்கள் யாரும் செய்யக் கூடாது. அவர்களுக்கு நீங்கள் சிலகாலம் அவகாசம் கொடுத்தே தீர



2019 ஜனவரி 5] [திரு. ஓ.எஸ். மணியன்]

வேண்டும், கண்டிப்பாகத் திரும்பக் கொடுப்பார்கள். ஆனால், கொஞ்சம் கால அவகாசம் வேண்டும், இப்போது நெருக்கடி கொடுக்கக் கூடாது, வசூலுக்கு வர வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நெருக்கடி இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மரங்களுக்கு 4 ஹெக்டேர் வரை உச்சவரம்பை உயர்த்தியிருப்பதாக அறிவித்தார்கள். வேட்டைக்காரனிருப்பில் தங்கபாபு என்ற ஓர் அ.தி.மு.க. தோழர் இருக்கிறார். அவருக்கு ஏற்பட்ட பாதிப்பே 50 ஏக்கருக்குமேல் இருக்கும். ஆக, இந்த ceiling–ஐ உயர்த்தி, அதாவது, 4 ஹெக்டேர் என்பதை 5 ஹெக்டேர், 10 ஹெக்டேர் என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்குமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஓட்டு வில்லை வீடுகள்; ஓட்டு வில்லை வீடுகளில் ஓடுகள் எல்லாம் பறந்து போய்விட்டன. அந்த ஓட்டு வில்லை வீடுகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு ஹெக்டேர் என்று சொன்னால், எத்தனை ஏக்கர் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். 4 ஹெக்டேர் என்று சொன்னால் 10 ஏக்கர் வரை வரும். அதுவும் தேசிய பேரிடர் நிவாரணத்திலே அதற்கு அனுமதி இல்லை. மாநில அரசுதான் மக்களுடைய சுமையை தன் சுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற அந்த உயர்ந்த நோக்கத்திலே முதன்முறையாக இந்த அளவிலே அறிவித்திருக்கிறது. இது மக்களுடைய துயர் துடைக்கின்ற

நிவாரணம். ஆக, 10 ஏக்கர் வரை இருக்கிறது. அந்த எண்ணிக்கையை நேற்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நிச்சயமாக இந்த நிவாரணம் மக்களுடைய துயர் துடைக்கின்ற வகையிலே இருக்கும். அண்ணா தி.மு.க.–காரர் என்று நீங்கள்கூட சொன்னீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, கட்சிப் பாகுபாடின்றி அனைவருக்குமே நிவாரணம் வழங்குகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமாத்திரமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். நீங்கள் நேரடியாக வந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தீர்கள், அங்கே மக்கள் பிரதிநிதிகளிடமும் கோரிக்கை வைத்தீர்கள். பாதிக்கப்பட்ட மக்களுடைய மறுசீரமைப்பிற்காக, மீண்டும் அவர்களின் முழு வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே, முதன்முறையாக தென்னங்கன்றுகளை இலவசமாகக் கொடுத்து, அவர்களிடத்தில் மறுவாழ்வினை உருவாக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கென்று மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் மா மரங்கள் இருக்கின்றன. அந்த மாமரங்கள் 30, 40 வருடங்களாக உள்ள மா மரங்கள். தென்னை மரங்கள் அந்த மக்களுக்குத் தேவையாக இருக்கின்றன. அதிகமான சக்தி உள்ள மா மரக் கன்றுகளை அவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக 2,962 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நடைமுறையில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் கேட்டுக்கொள்வது, எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற விவரங்கள் யாருக்கும் தெரிவதில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எந்தெந்தப் பணிகள் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற ஒரு பட்டியல் இருந்தால், எந்தெந்த ஏரி, குளங்களை வெட்டலாம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அணை பாதுகாப்புச் சட்டம். இன்றைக்கு இருக்கக்கூடிய மத்திய அரசு, அணை பாதுகாப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்திலே முன்மொழிந்திருக்கிறது. நமக்கு காவேரி நதிநீர்ப் பிரச்சினையிலே உச்ச நீதிமன்றமும், நடுவர் மன்றமும் கொடுத்த தீர்ப்புக்கு அப்பாற்பட்டு, தீர்ப்பையும் மீறி, இன்றைக்கு மேகதாதுவிலே அணை கட்டுவதற்கு மத்திய அரசு ஒரு விரிவான திட்ட அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கர்நாடக அரசுக்கு அறிவுறுத்தி இருக்கிறது. நமக்கு சட்டப் பாதுகாப்பு இருந்தும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினுடைய பாதுகாப்பு நமக்கு இருக்கிற நேரத்திலேயே மத்திய அரசு கர்நாடக அரசுக்கு அந்த உரிமையைக் கொடுக்கிறது. அப்படி இன்றைக்கு அணை பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றி விடுமேயானால், மாநில அரசுக்கு இருக்கக்கூடிய உரிமைகள் அறவே இல்லாமல் போய்விடும். தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் வழியாக வரக்கூடிய நீரினை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதுபோன்ற மாநிலங்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருந்துவிட்டால், நம்முடைய உரிமைகளை நாம் அடியோடு இழக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், இந்த அரசையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தக் கூட்டத் தொடரிலேயே, இதுபோன்ற அணை பாதுகாப்புச் சட்டங்களை நிறைவேற்றக் கூடாது என்பதை ஒரு தீர்மானமாக இயற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வைக்கிறேன்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 5

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணை பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். இதுவொரு முக்கியமான பிரச்சினையாகும். ஏனென்று சொன்னால், நம்முடைய மாநிலம் அண்டை மாநில நீரை நம்பித்தான் இருக்கிறது. இன்றைக்கு முல்லைப் பெரியாறு அணையை எடுத்துக்கொண்டால், கேரள மாநிலத்தில் இருக்கின்றது. ஆகவே, அணை பாதுகாப்புச் சட்டம் வந்துவிட்டால் அந்த மாநிலத்திற்குத்தான் அந்த அணையைப் பராமரிக்கின்ற அதிகாரம் கிடைத்துவிடும். அந்த மாநிலம்தான் அதைப் பராமரிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, இதை நம்முடைய நாடாளுமன்றக் குழு கடுமையாக நாடாளுமன்றத்தில் எதிர்த்துக் கொண்டிருக்கிறது. இந்த அணை பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாது; இந்த அணை பாதுகாப்புச் சட்டம் நம் மாநிலத்தை மிகவும் பாதிக்கும் என்று நம்முடைய நாடாளுமன்றக் குழுவின் மூலமாக நாடாளுமன்றத்திலே குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றோம். இந்த அணை பாதுகாப்புச் சட்டத்தினை மத்திய அரசு அமல்படுத்தக் கூடாது என்று நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்கிறேன். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டது, பாராளுமன்றத்தில் நம்முடைய எம்.பி.–க்கள் இருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் அதில் கொள்கை கொண்டிருக்கிறது; எதிர்க்கட்சியும் அதில் கொள்கை கொண்டிருக்கிறது. அதை அழுத்தந்திருத்தமாகச் சொல்வதற்கு வேண்டுமானால், நீங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரலாமே என்று கேட்டார். முடியுமானால், அதை யோசித்துப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அணை பாதுகாப்புச் சட்டத்தை கடுமையாக நாங்கள் எதிர்க்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் 2006–ல், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில், உச்ச நீதிமன்றம் வரை சென்று, உச்ச நீதிமன்றத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள். முதற்கட்டமாக, பராமரிப்புப் பணிகளுக்காக குறைக்கப்பட்ட அளவான 136 அடியிலிருந்து 142 அடி வரை நீரைத் தேக்கிக்கொள்ளலாம், பேபி அணையும், சிற்றணையும் பழுதுநீக்கம் செய்யப்பட்டதற்குப் பின்னால், அதனுடைய முழுக் கொள்ளளவான 152 அடி நீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் மூலமாகப் பெற்றுத் தந்தார்கள். உடனடியாக கேரள அரசு என்ன செய்தது என்று சொன்னால், சட்டமன்றத்தைக் கூட்டி, கேரள அரசினுடைய அணைகளில் இருக்கின்ற பாதுகாப்பு குறித்து ஓர் அவசரச் சட்டத்தை இயற்றியது. அந்த அவசரச் சட்டத்தில் பல்வேறு அணைகளுடைய நீர்மட்டத்தை வரையறுத்து சட்டம் இயற்றுகின்றபோது, முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டம் 136 அடிதான் என்று அதையும் வரையறுத்து, அந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தார்கள். உடனடியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேரள அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டத் திருத்தம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். அந்த வழக்கு இன்றைக்கும் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, இந்த அணை பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தால், அதாவது ஒரு மாநிலத்தில், இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட நீர்ப் பிரச்சினைகள், மூன்று மாநிலங்கள் சம்பந்தப்பட்ட நீர்ப் பிரச்சினைகள், அவரவர்கள் அவரவருக்குத் தகுந்தாற்போல், சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கருதிதான், நம்முடைய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்கு அணை பாதுகாப்புச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உ. மதிவாணன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் 12–20 மணிக்கு உரையாற்ற ஆரம்பித்தீர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** குறுக்கீடு இருந்தது. நான் ஒன்றும் நிறைய பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள், 12–20 மணிக்கு உரையாற்ற ஆரம்பித்தீர்கள். மணி என்னவென்று பாருங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கிடையேயான 2017–2018 ஆம் ஆண்டைய பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய 5,454 கோடி ரூபாய், 2017–2018 ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகை 455 கோடி ரூபாய், 2018 ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து செப்டம்பர் வரை 1,305 கோடி ரூபாய், ஆக, 7,214 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து டெல்லிக்குச் சென்று கேட்டு வந்த பிறகும்கூட, இன்றும் கிடைக்காமல் உள்ளது. ஆக, அது கிடைப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நடைபெறவிருக்கின்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு. இந்த மாநாட்டைப் பொறுத்தளவில், யார் முதலீடு செய்ய வருகிறார்களோ அவர்களுக்கு நிலம் கொடுக்கிறோம், மின்சாரம் கொடுக்கிறோம். ஆனால், தமிழ்நாட்டில் இளைஞர்கள், பட்டதாரிகள், B.E. படித்தவர்கள் இருக்கிறார்கள்; டிப்ளமோ படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான ஒரு வேலைவாய்ப்பினைத் தேடித் தருவதற்கு முயல வேண்டும். நம்முடைய சலுகையால், நாம் கொடுக்கக்கூடிய சலுகையால் தொழிற்சாலைகளைத் தொடங்குகின்றனர். அதன் மூலமாக, நம்முடைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு, அந்த ஒப்பந்தங்களை செய்யக்கூடிய முதலீட்டாளர்களை நீங்கள் வரவழைத்து, அதை இந்த நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கிறேன். என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கையாக. . .

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டில் இருக்கின்ற 50 சதவிகித இளைஞர்களுக்கு, skilled manpower–க்கு ஏற்ற வேலை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். Global Investors Meet–க்கு வருகிற முதலீட்டாளர்களிடம் நிச்சயமாக மீண்டும் இதை வலியுறுத்துவோம். குறிப்பாக, தமிழ்நாட்டில் படித்து, பட்டம் பெற்ற வேலையில்லா பட்டதாரிகளுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைப்படி நிச்சயமாக வலியுறுத்தி, அதனை வாங்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சியாக இருந்தாலும், உங்களுடைய ஆட்சியாக இருந்தாலும், தொழில் செய்ய வருகிறவர்கள், 'இது ஒரு பெரிய திட்டம், 6 ஆயிரம் கோடி ரூபாயில் செய்கிறோம், முதலில் 2 ஆயிரம் கோடி ரூபாயில் ஆரம்பிக்கிறோம், 2 வருடம் கழித்து 3 ஆயிரம் கோடி ரூபாயில் செய்வோம், பிறகு 6 ஆயிரம் கோடி ரூபாயில் செய்வோம்' என்று முதலில் சொல்வார்கள். எடுத்த எடுப்பிலே, முதல் 2 வருடத்திற்குள்ளாக நாங்கள் 3 ஆயிரம் பேருக்கு வேலை கொடுப்போம், அவர்களை local area–விலிருந்து எடுப்போம் என்றுதான் சொல்கிறார்கள். Cabinet கூட்டத்தில் வைக்கும்போதே, அவர்களை அழைத்துப் பேசும்போது, அதைப் படித்துப் பார்த்தீர்களென்றால், இதுதான் இருக்கும். ஆனால், ஒருவரையும் பணியமர்த்துவதில்லை. அவர்கள் ஊரில் இருப்பவர்களை, first class officers ஆக நியமனம் செய்து விடுவார்கள். இதுதான் எங்கள் ஆட்சிக் காலத்திலும் நடந்தது. தமிழ்நாட்டைச் சேர்ந்த யாராவது ஒரு first class officer உண்டா என்றால், இல்லை. எவர் தொழிற்சங்கத்தினுடைய செகரட்டரியாக இருக்கின்றாரோ, அவர்கள் ஊரில் இருப்பவர்தான் அங்கே வந்துவிடுவார். நம்முடைய ஆள் வரமாட்டார். ஆக, அவர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள். 2, 4, 5 பேர் வருவார்கள். நீங்கள் statistics–ஐ எடுத்துப் பாருங்கள், அவர்கள் நம்மிடம் அளிக்கும் memorandum–ல் முதலில் என்ன

குறிப்பிட்டிருக்கிறார்களோ, அந்தக் குறிப்பிட்ட அளவிற்கு தமிழ்நாட்டிலிருந்து வேலைக்காரர்களை எடுத்திருக்கிறார்களா என்று கேளுங்கள்; இல்லை. எல்லோரையும் அங்கிருந்துதான் கொண்டு வருகிறார்கள். எல்லா ஆட்சியிலும் ஏமாற்றுகிறார்கள், எங்களையும் ஏமாற்றினார்கள், உங்களையும்தான் ஏமாற்றுகிறார்கள். நீங்களாவது, புதிதாக தொழில் தொடங்க வருகிறவர்களிடம், அதெற்கென தனி section–ஐ கண்டிப்பாகப் போட்டு, இங்குள்ளவர்களை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார், வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணை பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டதையடுத்து, அதற்கான விளக்கத்தை இங்கே நான் தர விரும்புகின்றேன். மத்திய அரசு 12–12–2018 அன்று அணை பாதுகாப்புச் சட்ட மசோதா, 2018–ஐ நாடாளுமன்ற மக்களவையில் அறிமுகம் செய்தது. இதுதொடர்பாக, தமிழக முதல்வர் என்ற முறையில், பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் 14–12–2018 அன்று எழுதிய கடிதத்தில், இந்தச் சட்ட மசோதாவை திரும்பப் பெற நீர்வள அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளும் வரை இம்மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இந்த மசோதாவிற்கு முன்பாக, மத்திய அரசு ஏற்கெனவே வரைவு அணை பாதுகாப்புச் சட்ட மசோதா, 2016–ஐ நாடு முழுமைக்கும் பொருந்தும் வகையில், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்பாக அனைத்து மாநிலங்களின் ஆலோசனை/கருத்துகளைக் கோரியது. ஒரு மாநிலத்திற்குச் சொந்தமான அணை வேறு ஒரு மாநிலத்தில் அமைந்திருந்தால், அதற்கென தனிப்பட்ட சட்டப் பிரிவு ஏதும் இந்த மசோதாவில் தரப்படாததால், இந்த மசோதா தமிழ்நாட்டிற்கு ஏற்புடையதல்ல. எனவே, இந்த மசோதாவை எதிர்த்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 11–9–2016 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இந்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார். 15–6–2018 அன்று மாண்புமிகு பாரதப்





பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் என்ற முறையில் இதுதொடர்பாக நான் மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளேன். மேலும், இதே கருத்தினை வலியுறுத்தி 26–6–2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், தமிழ்நாடு சட்டசபையில், 26–6–2018 அன்று தமிழக மக்களின் கருத்துகளை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் நான் எனது 14–12–2018 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

அணை பாதுகாப்புச் சட்ட மசோதா, 2018–ன் பிரிவு 23(1)–ன்படி, ஒரு மாநிலத்திற்குச் சொந்தமான அணை வேறொரு மாநிலத்தில் அமைந்திருக்கும்பட்சத்தில், அந்த அணை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வரும். தமிழ்நாட்டிற்குச் சொந்தமான முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளும் இரு மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்களின் அடிப்படையில், தமிழக அரசால் கட்டப்பட்டு, இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த அணைகளை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து, அணையின் மேல் பகுதி மற்றும் கீழ் பகுதியில் அமைந்துள்ள மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை அமைப்பது தமிழ்நாட்டின் உரிமைகளில் தலையிடுவதாகும். இது அரசியல் சாசன அமைப்பிற்கும், கூட்டாட்சித் தத்துவத்திற்கும் முரணானதாகும். எனவே, அணை பாதுகாப்புச் சட்ட மசோதா, 2018–ன் பிரிவு 23(1)–ஐ, அணை வேறு மாநிலத்தில் இருந்தாலும் எந்த மாநிலத்திற்குச் சொந்தமோ அந்த மாநிலத்தின் மாநில அணை பாதுகாப்பு அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும்படி திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் இக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளேன்.

பிற்பகல் 1–00

மேலும், முல்லைப் பெரியாறு அணையின்மீதான தமிழ்நாட்டின் உரிமை, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு 7–5–2014 அன்று வழங்கிய தீர்ப்பின்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் 14–12–2018 தேதியிட்ட கடிதத்தில் நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 5

மேலும், அணையைப் பராமரிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக அணை அமைந்துள்ள காடுகள் மற்றும் வன விலங்குகள் சரணாலயத்திற்குச் சென்று வர முழு உரிமை அளிக்கும் வகையில், பிரிவு 23–ன்கீழ் ஒரு துணைப் பிரிவினை கூடுதலாக இந்த மசோதாவில் சேர்க்க வேண்டும் எனவும் 14–12–2018 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன். எனவே, அணை பாதுகாப்புச் சட்ட மசோதா, 2018–ஐத் திரும்பப் பெற்று, தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மதிவாணன், உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புயலில் பாதிக்கப்பட்ட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** இல்லை, சொல்லிவிடுகிறேன். இது ஒரு முக்கியமான செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) எனக்கு ஒத்துழையுங்கள். இன்னும் 4 உறுப்பினர்கள் பேச வேண்டும். மணி இப்போது என்ன ஆகிறதென்று பாருங்கள். உங்களை மாதிரி எல்லோரும் 40 நிமிடங்கள் கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) கொடுத்தாலும் திருப்திப்படுத்த முடியவில்லையே! (குறுக்கீடு)

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களைச் சந்திக்கிற நேரத்தில், முதியோர் உதவித் தொகை சிலருக்கு norms படி கிடைக்கப்பெறாமல் உள்ளது. குழந்தைகள் இருப்பார்கள், பிள்ளைகள் இருப்பார்கள். எனவே, அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால், பிள்ளைகள் இருந்தும் கவனிக்கப்படாத முதியோர்கள் நம்முடைய நாட்டில் நிறையபேர் இருக்கிறார்கள். எனவே, 3, 4 ஊராட்சிப் பகுதிகளில் ஊராட்சிக்கு ஒன்று வீதம் அரசாங்கத்தின் மூலமாக ஒரு முதியோர் இல்லத்தை



2019 ஜனவரி 5] [திரு. உ. மதிவாணன்]

அமைத்தோமென்று சொன்னால், வயதான காலத்தில், ஒரு நல்ல பாதுகாப்பான இடத்தில் வாழ்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, இந்த அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் முதியோர் இல்லங்களை அரசாங்கத்தின் மூலமாக நீங்கள் அமைத்திட வேண்டும். அடுத்ததாக, நம்முடைய மாண்புமிகு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததாக எல்லாம் பிறகு பேசலாம். இப்போது உட்காருங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** இல்லை, நான் ஒன்றுமே பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடு) மீதி இருந்தால் உங்கள் கட்சி உறுப்பினர் அடுத்து பேச இருக்கிறார். அவரிடம் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கும் புகழாய் தமிழகம் ஆண்ட தாயே! பொங்கும் புரட்சியாய் கழக ஆட்சி தந்த தாயே!. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் நன்றி சொல்லமாட்டார். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடிப்பதாக இருந்தால் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லி உரையை முடிப்பதாக இருந்தால் அனுமதிக்கிறேன். இல்லையென்றால் மீதியிருக்கிற குறிப்பை அடுத்து பேசும் உங்கள் உறுப்பினரிடம் கொடுங்கள். அடுத்து உங்கள் உறுப்பினர் திரு. ரகுபதி பேசுகிறார். அவர் பேசிக்கொள்வார், அவ்வளவுதான். (குறுக்கீடு) நன்றாகப் பேசுவீர்கள். (குறுக்கீடு) விடுங்கள், எனக்கு ஒத்துழையுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** எனது தொகுதிப் பிரச்சினை இரண்டைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினையையெல்லாம் எழுதிக்கொடுங்கள். பதிவு செய்துகொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம்தான். (குறுக்கீடு) சரி, பேசி முடியுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலிருந்து நாகப்பட்டினம் வரையுள்ள சாலைப் பணிகளை மதுகான் என்ற ஒரு நிறுவனம் செய்தது.

[திரு. உ. மதிவாணன்] [*2019 ஜனவரி 5*

*அந்தச் சாலையை பாதியிலே விட்டு விட்டுச் சென்றுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களிடம் பேசியிருக்கிறேன் என்று சொன்னார்கள். அந்தப் பணியை உடனடியாகத் துவங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திருவாரூரிலே அரைவட்டச் சாலை;* Bye–pass *ரோடுக்கு 60 கோடி ரூபாய்* sanction *ஆகி, 10 கோடி ரூபாய் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டது. அந்தப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*திருவாரூரில் பேருந்து நிலையம் இன்றுவரை திறக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அதை உடனடியாகத் திறந்திட வேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள், மத்திய பல்கலைக்கழகம், மருத்துவக் கல்லூரி இவற்றையெல்லாம் திருவாரூருக்குத் தந்தார்கள். நாங்கள் கொண்டுவந்த பேருந்து நிலையத்தை இந்த அரசு திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர் பேசியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. குமரகுரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லவேயில்லையே! நான் என்ன செய்யட்டும். கோரிக்கையல்லவா வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் வருகிற கீழ்வேளூர் நெடுஞ்சாலைப் பணியை ஒப்பந்ததாரர் செய்யாமல் விட்டுவிட்டுப் போய்விட்டார். அதனால் அரசுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும்கூட, மறு டெண்டர் வைத்து அந்தப் பணி வேறு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது கஜா புயலால் பணிகள் நின்றுபோயிருக்கின்றன. உடனடியாக பணி தொடங்கவிருக்கிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு, பேசுங்கள்.*

**திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கும் புகழாய், தமிழகம் ஆண்ட தாயே! பொங்கும்*



*2019 ஜனவரி 5*] [திரு. இரா. குமரகுரு]

*புரட்சியாய் கழக ஆட்சி தந்த தாயே! மறைந்தாலும் மறவா வரம் பெற்று மக்களின் மனம் நிறைந்த தாயே! துணிவொன்றே துணையாய்க் கொண்டவரே! என்றென்றும் உங்கள் புகழ் ஓங்குக! வங்கக் கடலோரம் சங்கத் தமிழ் அலைகள் தாலாட்டு பாடிட சந்தனப் பேழையில் துயில் கொள்ளும் தங்கத்தாரகை, மாண்புமிகு அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–05*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக்கு தலைவர், புகழுக்கு அம்மா, எங்களுக்கு தாங்கள், உங்களுக்காகவே நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அழகுள்ளம் கொண்டவரே, அம்மாவின் அன்புத் தம்பியே, கழகத்தையும், ஆட்சியையும் காப்பவரே, எடப்பாடி ஈன்றெடுத்த மன்னனே; எதிரிகளுக்கும், துரோகிகளுக்கும் சிம்ம சொப்பனமாய் உள்ளவரே, உழைப்பால் உயர்ந்த உத்தமரே, உற்றார்கள் மட்டுமல்ல, மற்றோரும் வியக்கும்வண்ணம் குறையேதும் இன்றி முறையோடு ஆட்சி செய்யும் எங்கள் முதல்வரே, பழகுவதில் எளிமையானவரே, திட்டங்களைத் தீட்டுவதில் திறமையானவரே, பைந்தமிழ் பாடும் பண்பாளரே, ஏழைகளின் ஏந்தலே, விவசாயிகளின் பாதுகாவலரே, எளிமையின் சிகரமே, கருணை வடிவாய், கலியுக கர்ணனாய், எல்லோருக்கும் இனியவராய், எங்களின் வழிகாட்டியாய், கொங்கு நாட்டுத் தங்கமாய், ஈகைத் திட்டங்களை ஏராளமாய்த் தந்திட்ட எங்கள் முதல்வராய், எதிரிகளின் சூழ்ச்சிகளாயினும் எளிதில் உடைத்தெறிந்து உண்மையை உணர்த்தும் உத்தமராய் வாழ்பவரே! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இல்லத்திற்குச் செல்வோரை, முதலில் கேட்பது 'சாப்பிட்டாயா' என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவழியிலே, எளிமையின் சிகரமாய், ஏழைகளின் முதல்வராய்த் திகழும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அவரின் வீட்டிற்கு வருகைதரும், கழக நிருவாகிகள் முதல் தொண்டர்கள் வரை உள்ள அனைவரையும் முதலில் 'சாப்பிட்டீர்களா' என்று கேட்டு, கழகத் தொண்டர்கள் அனைவருக்கும் தனது வீட்டிலேயே உணவு செய்து, அனைவருக்கும் உணவளித்து வரும் அன்னதானப் பிரபுவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களே, தங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னகத்து சிங்கமே, அமைதியின் பூங்காவே, தேனி மாவட்டத்தின் தேனீ போன்று உழைப்பால் உயர்ந்தவரே, மாண்புமிகு அம்மா அவர்களிடம் பயின்ற அறிவுக்கூர்மையால் பண்புடன் பணி செய்து படிப்படியாய் உயர்ந்தவரே, வீரத்தின் விளைநிலமே, விவேகத்தின் பிறப்பிடமே, மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு துணை முதலமைச்சருமான அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் கழகத் தொண்டர்களை அரவணைக்கும் அரணாகத் திகழ்பவரே, மாவட்டத்தில் எத்தனை எதிரிகளும், துரோகிகளும் வந்தாலும் அத்தனையையும் தவிடுபொடியாக்கி சிங்கமென கழகத்தைக் காத்துவரும் பண்பாளரே, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு கனிம வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்விதமாக இந்த அவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, எனது உரையினைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் வகுத்துத் தந்த திட்டங்களையும், கொள்கைகளையும் முனைப்போடு செயல்படுத்தி, அவர்கள் பின்பற்றி வந்த பெருமைமிகு மரபைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு உறுதியாக உள்ளது.

தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு, குறிப்பாக, ஏழையெளிய மக்கள் நலனையும், எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினரின் நலனையும் பாதுகாப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தி, தொடர்ந்து பாடுபட்டுவரும் மக்கள் நல அரசு நம்முடைய அம்மா அவர்களின் அரசு என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தனது திறமைமிக்க தலைமையின் மூலமாக பதவியேற்ற நாள் முதல் இன்று வரை, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, 11,286 கோப்புகளில் துரிதமாக முடிவு கண்டு, பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படும் அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இத்தகைய உறுதியான செயல்பாட்டின் காரணத்தினால், பெங்களூருவில் அமைந்துள்ள பொது விவகார மையம் வகுத்துள்ள நிருவாகக் குறியீட்டில் நல்ல ஆளுமைக்கான மாநிலமாக நாட்டிலேயே இரண்டாம் நிலையை தமிழ்நாடு பெற்றுள்ளது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகின்ற வகையிலே நல்லாட்சி அளிப்பதன் காரணமாக வேளாண் துறைக்கான ‘கிரிஷி கர்மான்’ விருதையும், செயல்திறனுக்கான சிறந்த மாநிலம், சுற்றுலா, உட்கட்டமைப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் “இந்தியா டுடே” நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிறப்புடைமைக்கான விருதுகளையும், பொது விநியோகத் திட்டத்தினை கணினிமயமாக்கியதற்கான சிறந்த நடைமுறை விருதையும், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பான செயல்முறை உட்பட உயர்தரமான சுகாதார சேவைக்கான அங்கீகாரம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான பல்வேறு விருதுகளைப் பெற்று சிறந்த ஆட்சி செய்துகொண்டு வருகிறார் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கின்ற காவேரிப் பிரச்சினையாக இருந்தாலும், முல்லைப் பெரியாறு பிரச்சினையாக இருந்தாலும் எத்தனை பேர் போராடினாலும் அதில் வெற்றி கண்டவர் மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. இரா. குமரகுரு] [2019 ஜனவரி 5

பிற்பகல் 1–10

காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு வெளியிடப்பட்டபோது, மத்தியிலே காங்கிரஸ் கட்சியோடு கூட்டணியில் இருந்தவர்கள், காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடுவதற்கு குரல் கொடுக்கவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளின் நலன் ஒன்றையே கருத்தில்கொண்டு, காவேரி நீரைப் பெறுவதற்கு பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தி, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் 9–வது அட்டவணையில் வெளியிட்டு, காவேரியை மீட்டெடுத்தவர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் காவேரி டெல்டா விவசாயிகளைப் பாதுகாத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களும் உச்ச நீதிமன்றத்தின் மூலமாக பல சட்டப் போராட்டங்களை நடத்தி காவேரி மேலாண்மை வாரியம் அமைத்து வெற்றி கண்டவர் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தி, ஆணை பெற்றுத் தந்தவரும் மறைந்த நம் தானைத் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்நிலையிலே முல்லைப் பெரியாறு அணைக்கு மாற்றாக, புதிய அணை கட்டுவதற்கான கேரள அரசின் முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு எதிர்த்து வருவதோடு 142 அடி கொள்ளளவை 152 அடியாக உயர்த்துவதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கர்நாடக அரசு தமிழகத்தை வஞ்சிக்கின்ற வகையிலே காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பினை மீறி, காவேரி நதிநீர் மேல்படுகையில் மேகதாது அணையினைக் கட்டிட, மத்திய நதிநீர் ஆணையம் அனுமதி வழங்கியதை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதன் வாயிலாக, நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரிலே நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை ஒருவார



2019 ஜனவரி 5] [திரு. இரா. குமரகுரு]

காலமாக இயக்க விடாமல் செய்த போராட்டத்தை நாம் அனைவரும் அறிவோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மத்திய அரசாங்கம் நதிநீர் பாதுகாப்புச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டுமென்பதற்காக நாடாளுமன்றத்தில் நிறைய போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே சிறப்புக் கூட்டத்தினைக் கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி, எதிர்ப்பைக் காட்டியதோடு மட்டுமல்லாமல், நாடாளுமன்ற கூட்டத் தொடரிலும் எதிர்ப்பைக் காட்டினார்கள். இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தையும், காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பையும் மீறினாலும், எந்தக் காலத்திலும் மேகதாது அணையையோ அல்லது மற்ற அணையையோ கட்டிட ஒருபோதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை நான் இங்கே தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைப் பேரிடர் காலங்களில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில், தற்போது ஏற்பட்ட கஜா புயலின்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை அறிவிப்பு அனைவரையும் வியக்க வைத்தது. இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அறிவிக்கும் விவரங்கள் உடனுக்குடன் மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அதிகாரிகளையும் அழைத்து உத்தரவு வழங்கியதன் காரணமாகவும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கையினாலும் புயல் தாக்கும் அபாயம் உள்ள இடங்களில் இருந்த நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 82,000 குடிசைவாழ் மக்களை 471 முகாம்களில் தங்கவைத்து பாதுகாத்ததனாலும், கஜா புயல் பற்றிய விழிப்புணர்வு தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களின் மூலமாக உடனுக்குடன் மக்களைச் சென்றடையும் வகையில் அரசு இயந்திரம் செயலாற்றிய காரணத்தினாலும் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்படாமல் மக்களைப் பாதுகாத்த செயலுக்காக பல கட்சித் தலைவர்களும், ஏன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பாராட்டியுள்ளார்கள். அந்த அளவிற்கு மக்களின்பால் அக்கறையுடன் செயல்படும்

[திரு. இரா. குமரகுரு] [*2019 ஜனவரி 5*

*அரசாக நமது தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் கஜா புயல் வீசியதால் முற்றிலும் பாதிப்படைந்த மின் கட்டமைப்புப் பணிகளை வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 28,000 மின் பணியாளர்களைக் கொண்டு வந்து, 6 மாதங்களில் முடிக்க வேண்டிய பணிகளை 60 நாட்களுக்குள் முடித்து, சுமார் 95 சதவிகிதத்திற்கு மேல் உள்ள பாதிக்கப்பட்ட மின் இணைப்புகளுக்கு போர்க்கால அடிப்படையில் மின்சாரம் அளித்த விதத்தை ஊடகங்களும், மக்களும் வியந்து பாராட்டுகின்றார்கள்.*

*மின் துறைப் பணியாளர்களைப் போலவே, உள்ளாட்சி நிருவாகத் துறையும், சுகாதாரத் துறையும் அவர்களது பணியாளர்களைக் கொண்டு சிறப்பான சேவையினை அளித்து திறம்படப் பணிபுரிந்தார்கள். கஜா புயலினால் இறந்த 52 நபர்கள் மற்றும் மின் சீரமைப்புப் பணியின்போது இறந்த 5 மின் பணியாளர்களுடைய குடும்பங்களின் துயர் துடைக்க உடனடியாக 10 இலட்சம் ரூபாயை நிவாரண நிதியாக அளித்து மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*பிற்பகல் 1–15*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால், விவசாயிகளின் கஷ்டங்களைக் களைந்திடும் நோக்கத்தில் புயல் பாதித்த இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, தென்னை விவசாயிகள், கரும்பு, நெல், வாழை, காய்கறிகள் மற்றும் மலர் பயிரிட்ட விவசாயிகளின் சேதாரங்களைக் கணக்கிட்டு உரிய நிவாரணம் வழங்க ஆணை பிறப்பித்திருக்கிறார் என்பதை நான் பெருமையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்திய அரசு போதிய நிவாரண நிதி அளித்திடாத நிலையிலும், சிறப்பான முறையில் நிவாரணம் வழங்கி, எப்போதும் இந்த அரசானது மக்களின் அரசாக*



*2019 ஜனவரி 5*] [திரு. இரா. குமரகுரு]

*செயலாற்றி வருகிறது என்பதனை மிக்க பெருமையுடன் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலினால் வீடு இழந்து தவிக்கும் குடும்பங்களில் உள்ள தகுதியானவர்களுக்கு ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்திட நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள் என்பதனை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்று இந்த அவையில் எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட கஜா புயல் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், சிறந்த முறையில் தெள்ளத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் தனது பதிலுரையை இந்த அவையில் எடுத்து வைத்து, இந்த அரசு என்றும் மக்களுக்கான அரசு என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். கஜா புயலின்போது சிறப்பாகப் பணியாற்றிய அனைவருக்கும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அனைத்து மக்களும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பாக ஆட்சி புரிந்துவரும் எளிமையின் சிகரம், விவசாயிகளின் விடிவெள்ளி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையால் விவசாயிகள் தனது வியர்வையை வித்தாக்கி, உழைப்பை உரமாக்கி, உழவர் கொண்டாடும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை, அனைத்து ஏழை எளிய குடும்பங்களும் இன்பம் பொங்கி கொண்டாடும் வகையில், பொங்கல் பரிசாக, பச்சரிசி, கரும்பு, ஏலக்காய், சர்க்கரை, வேட்டி, சேலை ஆகியவற்றோடு, கடுமையான நிதிநிலை இருந்தபோதிலும், மக்களின் நலனில் அக்கறைகொண்டு, ரூ.1,000/– வழங்கிட மின்னல் வேகத்தில் ஆணை பிறப்பித்து இன்று தங்களின் திருக்கரங்களால் பொங்கல் பரிசை வழங்க ஆரம்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

[திரு. இரா. குமரகுரு] [*2019 ஜனவரி 5*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை தொழில் துறையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றவும், உற்பத்திக் கட்டமைப்பு மற்றும் சேவைத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், மாண்புமிகு அம்மா அவர்களால் முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பெற்று, அதில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் அளவிலான முதலீடுகளை ஈர்க்க வேண்டுமென இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சிறப்பான முயற்சியின் காரணமாக ரூ.2,42,160 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. இதனால் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 68 நிறுவனங்கள் உடனடியாக தொழில் தொடங்கின. இதன்மூலம் 1,10,027 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், பல இலட்சம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்களால் தொலைநோக்குத் திட்டம் 2023 (Vision 2023) மூலமாக இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாகவும், தொழில் மையமாக்கலில் மூன்றாவது இடமாகவும், தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, பணியாளர்களின் எண்ணிக்கையில் முதலிடமாகவும் தமிழ்நாடு பெற்றதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த சிறப்பான தொழில் கொள்கையே காரணம் என்பதைக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். தமிழகத்தைத் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்ற, தொழில் துவங்குவதற்கு எளிதாகவும், விரைவாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் இருந்தால்தான், தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்க இயலும் என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு வர்த்தக எளிதாக்கல் சட்டம் மற்றும் விதிகள் 2018 மற்றும் இணையம் அடிப்படையிலான ஒற்றைச்சாளர முறை ஆகிய இரண்டு முக்கிய சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இந்நிகழ்வு தொழில் துறையில் ஒரு மைல் கல்லாக அமைந்திருக்கின்றது. முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தின் சிறப்புகளை உலகறியச் செய்யும் முகமாக மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை 2019, ஜனவரி 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் நடத்தி, உலகத்தில் இருக்கின்ற முதலீட்டாளர்கள் எல்லாம் தமிழ்நாட்டில்



*2019 ஜனவரி 5*] [திரு. இரா. குமரகுரு]

முதலீடு செய்து, அதன்மூலம் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள் என்பதனை நான் இங்கே பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெறும் ஆட்சியில் தமிழகப் பள்ளிக் கல்வித் துறை சிறப்பாகச் செயல்படுகிறது. பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விலையில்லா சீருடை, விலையில்லா காலணி, சத்துணவில் முட்டை, சாமானிய வீட்டுப் பிள்ளைகளைப்போல் ஏழை, எளியவர்களின் பிள்ளைகளும் உணவை அருந்த வேண்டுமென்ற எண்ணத்தில் அறுசுவை உணவு வகைகள் வழங்க தாயுள்ளத்தோடு உத்தரவிட்டவர் நமது மாண்புமிகு அம்மா அவர்கள். விலையில்லா மடிக்கணினி, விலையில்லா சைக்கிள், விலையில்லா சீருடை, நோட்டுப் புத்தகம், பென்சில், உலக வரைபடம், geometry box போன்ற 14 வகையான கல்வி உபகரணங்களை வழங்கி, உலகத் தரத்திலான கல்வியை ஏழையெளிய குழந்தைகள் பெற அறிவுசார் பள்ளிகள் தந்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

*பிற்பகல் 1–20*

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்தும் முத்தான திட்டங்கள், முத்திரை பதிக்கும் திட்டங்கள் என எண்ணி, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் ஆங்கிலக் கல்விக்கு நிகரான கல்வி அரசுப் பள்ளிகளிலும் கிடைக்கும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

NEET தேர்வாக இருந்தாலும், GATE தேர்வாக இருந்தாலும், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எளிதில் எதிர்கொள்ளும் வகையில் பயிற்சி மையம் அமைத்தும், சிறப்பு வகுப்புகள் நடத்தியும், தரமான கல்வியை ஏழையெளிய வீட்டுப் பிள்ளைகள் பெற்றிட ஆணையிட்ட முதல்வர் நம்முடைய தமிழ்நாட்டு முதல்வர் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது கல்வியே! கல்லாமையை இல்லாமையாக்க வேண்டுமென்ற உயரிய சிந்தனையில், தமிழகத்தில் உள்ள அனைத்துப் பிள்ளைகளும் கட்டாயம்

[திரு. இரா. குமரகுரு] [*2019 ஜனவரி 5*

கல்வி பெற வேண்டும் என்பதனைக் குறிக்கோளாகக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், கல்வியில் புரட்சியை ஏற்படுத்தும் விதமாகவும், கிராமப்புற மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் விதமாகவும், நித்தம், நித்தம் புதிய திட்டங்களையும், சலுகைகளையும் வழங்கி வருவதோடு உயர் கல்வி பெற 65 புதிய கல்லூரிகளையும், 961 புதிய பாடப் பிரிவுகளையும் தொடங்கி மாபெரும் வரலாற்றுச் சாதனை புரிந்தவர் எங்களின் கல்வித் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தொடரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையிலான அரசு 16 அரசு கலைக் கல்லூரிகள் மற்றும் 624 புதிய பாடப் பிரிவுகளைத் துவக்கியதன் மூலமாக, 2011–2019 வரையில் 81 புதிய கலைக் கல்லூரிகளும், 1,585 பாடப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மாணவர்களின் சேர்க்கை விகிதம் இந்திய சராசரியான 25.8 சதவிகிதத்தை விடவும், உலக சேர்க்கை சராசரியான 36 சதவிகிதத்தைவிடவும், வளரும் நாடுகளுக்கு மேலாகவும் தமிழக மாணவர்களின் சேர்க்கை விகிதம் 48.6 சதவிகிதமாக இருக்கிறது எனக் கூறிக்கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

நெடுஞ்சாலைத் துறை. ஒரு மனிதனின் தலையெழுத்தை நிர்ணயிப்பது அவனது கைரேகை என்பார்கள். அதேபோன்று, ஒரு நாட்டின் பொருளாதாரத்தையும், வேலைவாய்ப்பையும், தொழிற்சாலைகளையும், தொழில் உற்பத்தியையும் பெருக்குவதற்கு மூலக் காரணமாகத் திகழ்வது அந்த மாநிலத்தின் சாலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அமைச்சரவையிலும், தனது அமைச்சரவையிலும் நெடுஞ்சாலைத் துறையை தன்வசம் கொண்டிருப்பதால், குக்கிராமங்கள் முதல் கோட்டை வரை தரமான சாலைகளை அமைத்திருப்பதால் பிற மாநிலத்தைவிட தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இதற்கு பளிச்சிடும் சாலைகளே சாட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 7,964 கிலோ மீட்டர் நீளமுள்ள 2,596 ஊராட்சி மற்றும் ஒன்றியச் சாலைகளை மூன்று ஆண்டுகளில் படிப்படியாக நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்து பிற மாவட்ட சாலைகளின் தரத்தினையும் உயர்த்தி வருவது மாண்புமிகு



*2019 ஜனவரி 5*] [திரு. இரா. குமரகுரு]

முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தலைமையிலான அம்மா அவர்களின் அரசுக்குப் பெருமை சேர்க்கிறது என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மக்கள் நலன் ஒன்றையே அக்கறையாகக் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2012–ல் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கி, உயர்தர மருத்துவ சிகிச்சைக்கு ஆணையிட்டார்கள். மருத்துவக் காப்பீட்டுத் திட்ட உதவித் தொகையை, மத்திய அரசின் உதவியோடு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி ஏழைகள் பயன்பெறும் வகையில் அம்மா வழியில் வந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கான உதவித் தொகையை ரூ.12,000/– லிருந்து ரூ.18,000/– ஆக உயர்த்தி ஆணையிட்டமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மகளிர் சுகாதாரத் திட்டம், அம்மா குழந்தை நலப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ் சீவி போன்ற முன்னோடித் திட்டங்கள் தாய்–சேய் நலம் பெற பேருதவியாக உள்ளன.

இந்தியாவிலேயே உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை சிறப்பாகச் செய்து, உயிரைக் காத்த மாநிலம் தமிழ்நாடுதான். இதற்கான சிறப்புப் பரிசையும் மத்திய அரசிடம் மக்கள் நல்வாழ்வுத் துறை பெற்று வருகின்றது என்பதை இந்த அவையின் வாயிலாக நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் மருத்துவமனைக்கு இணையாக அரசு மருத்துவமனை செயல்பட்டு, மக்கள் நலனைக் காத்து வரும் அரசு, நம்முடைய அரசு என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தென் மாவட்டங்களைச் சார்ந்த மக்களெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்த எய்ம்ஸ் மருத்துவமனையை மத்திய அரசிடம் முறையிட்டு, வாதாடி, மதுரை மாவட்டம், தோப்பூரில் ரூ.1,264 கோடி மதிப்பில் பெற்றுத் தந்து, தென் தமிழகத்தில் இருக்கிற 5 மாவட்ட மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த முதல்வர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில்தான் ‘தோல் வங்கி’

உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் நல்வாழ்வுத் துறைமூலம் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் உன்னதமான அரசை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*பிற்பகல் 1–25*

காவல் துறை. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற நாள் முதல் தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு திறம்பட நிருவகிக்கப்பட்டு, அமைதி நிலைநாட்டப்படுகிறது. குறிப்பாக, பெண்கள் எந்தத் தொந்தரவுமின்றி, எந்த நேரத்திலும் பாதுகாப்பாகச் சென்று வருகிறார்கள். தமிழகக் காவல் துறையும் மக்களும் இணக்கமாக உள்ளதை உறுதி செய்யும்வகையில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்த சமீபத்தில் உருவாக்கப்பட்ட ‘181 உதவி எண்’ மற்றும் ‘காவல் செயலி’ அனைவரிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, குடிமராமத்துத் திட்டம். ‘நீரின்றி அமையாது உலகு’ என்பதற்கு ஏற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி செய்யும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் ஒரு விவசாயி என்பதால், விவசாயிகள் படும் இன்னல்களை உணர்ந்து நீர்ப்பாசன கட்டமைப்பை வலுப்படுத்தவும், நீர் சேமிக்கும் திறனை வலுப்படுத்தவும், பண்டைய காலங்களில் ஏரிகளைப் பராமரிப்பதற்கு மட்டும் பழக்கத்தில் இருந்த நீர் சேமிக்கும் பழக்கத்தை முறையாக ஒழுங்குபடுத்தி, நீர்நிலைகளை மீட்டெடுத்து புத்துயிர் அளிக்கும்விதமாக ஏரிகளை குடிமராமத்து செய்து, 2016–2017 ஆம் ஆண்டில் 30 மாவட்டங்களில் 1,519 பணிகளுக்கு ரூ.100 கோடியிலும், 2017–2018 ஆம் ஆண்டில் 2,065 பணிகளுக்கு ரூ.331.68 கோடி மதிப்பீட்டிலும் நிருவாக ஒப்புதல் கொடுத்து, விவசாயிகளின் மத்தியில் நீங்கா இடம் பிடித்தவர் நமது மாண்புமிகு முதல்வர் என்பதை இங்கே பெருமையுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, கால்நடை பராமரிப்புத் துறை. கிராமங்களின் முன்னேற்றமே ஒரு நாட்டின் முதுகெலும்பு என்றுணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளை வழங்கி, வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி, கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், கோழி அபிவிருத்தித் திட்டம், தீவன அபிவிருத்தித் திட்டம், கால்நடை பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு மேம்படுத்துதல் போன்ற திட்டங்களை உருவாக்கி, பால் வளத் துறையில் உயர்ந்தபட்ச அளவான 37.03 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் உரையை முடித்துவிடுகிறேன். ‘ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என வாழ்ந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா, சத்துணவுத் திட்டம் தந்து சரித்திரப் புகழோடு வாழ்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அம்மா உணவகம் தந்த மனித தெய்வம் புரட்சித் தலைவி அம்மா; இவர்களின் ஆட்சிக் காலம் தமிழகத்தின் பொற்காலம். ஏழைகளின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி, வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவி அம்மா ஆகியோருக்கு “பாரத ரத்னா” விருது வழங்கிட வேண்டுமென்று ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது என்பதை நான் பெருமையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவராக மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் திலகத்தின் திருப்பெயரைக் கொண்டு, சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு “புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம்” எனப் பெயர் சூட்ட வேண்டுமென்று ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், தமிழ்நாட்டின் முதலமைச்சராக அண்ணன் அவர்கள் பதவியேற்ற நாள் முதல், “Work hard in silence, Let your success make the noise”, “Actions speak louder than words” என்ற சொல்லுக்கேற்ப, கூச்சலும், வெற்று ஆர்ப்பாட்டமும் இல்லாமல் மாண்புமிகு அம்மாவின்

[திரு. இரா. குமரகுரு] [*2019 ஜனவரி 5*

எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற வகையில் மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவது, ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளதை வரவேற்று சுட்டிக்காட்டுவதில் பெருமைப்படுகிறேன்.

உதாரணமாக, ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஏற்றம் பெற்றிட உதவித் தொகையினை ரூ.12,000/–லிருந்து ரூ.18,000/– ஆக உயர்த்தி வழங்கியது, பணிக்குச் செல்லும் மகளிருக்கு 50 சதவீத மானியத்தில் அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருவது. படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கியது, ஏழை மீனவர்கள் 5,000 பேருக்கு இலவச வீடுகள் வழங்கியது, அம்மாவின் கூற்றுக்கிணங்க, இரண்டாம் கட்டமாக 500 டாஸ்மாக் கடைகளை மூட ஆணை பிறப்பித்தது, பொது விநியோகத் திட்டத்தின்மூலம் ஏழையெளிய மக்கள் அத்தியாவசியப் பொருட்களை தங்கு தடையின்றி பெற்றிடும்வகையில், அனைத்து குடும்ப அட்டைகளையும் மின்னணு (Smart Card) அட்டைகளாக மாற்றி விநியோகத்தை செம்மையாக்கியது, அணைகள், ஏரிகள், குளங்களில் விவசாயிகள் நேரடியாக வண்டல் மண் எடுத்து விளை நிலங்களுக்குப் பயன்படுத்தும் திட்டம், ஏரிகளைத் தூர்வாரி, மழை நீரை சேமித்திடும்வகையில் கொண்டு வரப்பட்ட குடிமராமத்து புத்துயிர் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் 1.50 கோடி பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கிய திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் இயற்கை மரணத்திற்கு ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்கியது, அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து விவசாயிகளின் நில வரியை முழுவதும் தள்ளுபடி செய்தது, விவசாயிகளின் இடுபொருட்களுக்கான மானியத்தை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தியது, விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றம் செய்தது, தென்னை விவசாயிகளின் நலன் காக்க “நீரா பானம்” திட்டம் கொண்டு வந்தது, ஏழையெளிய குடும்பப் பெண்களுக்கு திருமண உதவித் தொகை, தாலிக்குத் தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தி வழங்கியது, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள் மற்றும் 14 வகையான கல்வி உபகரணப் பொருட்கள் வழங்கி வருவது, பள்ளிக் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், அனைத்து வீட்டு மின் இணைப்புகளுக்கும் 100 யூனிட் மின்சாரம்



*2019 ஜனவரி 5*] [திரு. இரா. குமரகுரு]

இலவசமாக வழங்கும் திட்டம், அம்மா சிமெண்ட், அம்மா உணவகம், அம்மா குழந்தைகள் நலப் பெட்டகம், அம்மா குடிநீர், அம்மா மருந்தகம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி வருவது போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு செயல்படுத்தி வருவதை நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் *1–30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலுள்ள சில முக்கிய பிரச்சினைகள். விழுப்புரம் மாவட்டத்தில் எனது தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனையானது தாலுகா மருத்துவமனையாக உள்ளதால், இந்த மருத்துவமனைக்கு உளுந்தூர்பேட்டை தொகுதியிலுள்ள அனைத்து பொதுமக்களும் மருத்துவ சிகிச்சைக்காகவும், அதிக அளவில் பிரசவ சிகிச்சைக்காகவும் வருகிறார்கள். மகப்பேறு பிரசவத்தின்போது தாய்மார்கள் தங்கி சிகிச்சை பெற போதிய இட வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் அங்கே CEmONC centre ஒன்றை அமைத்து, ரூ.5 கோடி மதிப்பீட்டிலே அடுக்குமாடிக் கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட கொள்ளிடம் ஆற்றிலிருந்து தண்ணீரைப் பெற்று, விழுப்புரம் நகராட்சி மற்றும் பெண்ணாடம், திட்டக்குடி, மங்கலம்பேட்டை, விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை ஆகிய 5 பேரூராட்சிகள் மற்றும் 822 கிராமக் குடியிருப்புப் பகுதிகளின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிடும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டில் விதி 110–ன்கீழ், கூட்டுக் குடிநீர்த் திட்டம்–II செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்தத் திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கனிவுடன் அதைப் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா விழுப்புரத்தில் பிரம்மாண்டமாக

நடைபெற்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் விழுப்புரத்திற்கு வருகை தந்து, விழுப்புரம் மாவட்டத்தில் எங்கெல்லாம் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறதோ, அவற்றையெல்லாம் மரக்காணம் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் நிவர்த்தி செய்வதற்காக ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவித்தார்கள். அதையெல்லாம் செய்து, எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, மக்களின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற நிலையில், எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் குக்கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் சுமார் 20 ஆண்டு காலமாக புதிய பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டுமென்று கோரிக்கை வைத்து வருகிறார்கள். அந்தக் கோரிக்கை இதுவரையிலும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அரசின் விதிமுறைகளைத் தளர்த்தி, புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டுமென்று எனது உரையின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் மேலான பார்வைக்கு நான் கொண்டு வருகிறேன்.

எனது தொகுதியில் உள்ள பேரங்கியூர் குச்சிப்பாளையம், கொத்தனூர் குச்சிப்பாளையம், பரிந்தல் மேட்டுக்காலனி, குணமங்கலம், முஸ்லிம் காலனி, ரஹ்மான் தக்கா, சவரியார்புரம், பின்னல்வாடி காலனி மற்றும் ஆமூர்காலனி ஆகிய கிராமங்களில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் காவல் நிலையம் சுமார் 88 கிராமங்களை உள்ளடக்கியுள்ளதால், மேற்படி காவல் நிலையத்திற்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண முடியாத நிலை உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி, திருநாவலூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து, களமருதூரை மையமாகக் கொண்டு புதிய காவல் நிலையம் அமைத்திடவும், அதேபோன்று திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து அரசூரை மையமாகக் கொண்டு புதிய காவல் நிலையம் அமைத்திடவும் வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூரைச் சுற்றிலும் சுமார் 50–க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஏழையெளிய விவசாயிகள் குடிசைப் பகுதியில் மிகவும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வருகிறார்கள். இப்பகுதியில் தீ விபத்து ஏற்படும்போது சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ள உளுந்தூர்பேட்டை மற்றும் திருவெண்ணெய்நல்லூர் தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீயணைப்பு வாகனங்கள் வருவதற்குள்ளாக அப்பகுதியில் உள்ள குடிசை வீடுகள் முழுவதும் எரிந்து சேதமடைந்து விடுகின்றன. எனவே, இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான திருநாவலூரை மையமாகக் கொண்டு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்திலேயே எனது உளுந்தூர்பேட்டை தொகுதி கல்வியில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், மாணவ, மாணவிகளின் நலனில் அக்கறை கொண்டு அவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு வசதியாக உளுந்தூர்பேட்டையில் அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

எனது உளுந்தூர்பேட்டை தொகுதியானது 121 ஊராட்சிகளையும், 180–க்கும் மேற்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கிய மிகவும் பெரிய தொகுதியாகும். கிராமங்களிலிருந்து உளுந்தூர்பேட்டை நகரத்திற்குச் சென்று வருவதற்கு வசதியாக அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி ஏற்படுத்திடவும், கூடுதல் நடைகளை இயக்கிடவும், உளுந்தூர்பேட்டை போக்குவரத்து பணிமனைக்கு 5 புதிய நகரப் பேருந்துகளை ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு, போதும். மீதி கோரிக்கைகளை எல்லாம் எழுதிக்கொடுங்கள், பதிவு செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) மீதி கோரிக்கைகளையெல்லாம் பதிவு செய்துகொள்ளலாம், உட்காருங்கள். மீதி கோரிக்கைகளையெல்லாம் பதிவு செய்துகொள்ளலாம், கொடுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி பகுதியில் நீண்ட

[திரு. இரா. குமரகுரு] [*2019 ஜனவரி 5*

நாட்களாக மக்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தை விழுப்புரம், கடலூர் என இரண்டு மாவட்டங்களாகப் பிரித்தார்கள். தற்போது விழுப்புரம் மாவட்டம், மிகப் பெரிய மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது. இம்மாவட்டத்தில் 11 சட்டமன்றத் தொகுதிகளும், 3 நகராட்சிகளும், 13 வருவாய் வட்டங்களும், 22 ஊராட்சி ஒன்றியங்களும், 15 பேரூராட்சிகளும், 1,099 கிராம ஊராட்சிகளும் உள்ளன. மேலும், எங்கள் மாவட்டம் சுமார் 37 இலட்சம் மக்கட்தொகையையும், 26 இலட்சம் வாக்காளர்களையும் கொண்டுள்ளது. இம்மாவட்டம் 7,194 சதுர கிலோ மீட்டர் கொண்ட நீண்ட பரப்பளவு உடைய மாவட்டமாகும்.

*பிற்பகல் 1–35*

மாவட்ட தலைநகரமான விழுப்புரத்திற்கு வருவதற்கு, மாவட்டத்தின் கடைசி பகுதியான கல்வராயன் மலை, சின்ன சேலம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி வட்டாரங்களுக்குட்பட்ட ஊராட்சியைச் சேர்ந்த கிராம மக்கள் சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதனால், இப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்கள் சாதனைகளையும், சலுகைகளையும் ஏழையெளிய மக்களுக்காகத் தந்திட்டபோதும், ‘ஆளுநர் உரையில் ஏதுமில்லை’ என்று சிலர் புலம்புகிறார்கள். ‘போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும்’ என்பதனை மனதில்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களே, தங்களின் சாதனைகளின் பயணம் தொடரட்டும். இனிவரும் அனைத்துத் தேர்தல்களிலும் மகத்தான வெற்றி, வெற்றி, வெற்றி தொடரட்டும் என்று கூறி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புகழ் ஓங்குக, அம்மாவின் புகழ் ஓங்குக என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



*2019 ஜனவரி 5*]

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு குன்னம் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள் படைப் புழுவினால் ஏற்படும் பாதிப்பிற்கு, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை கிடைக்குமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். நிறைய விவசாயிகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்த காரணத்தினால் பதிலளிக்கிறேன்.

படைப் புழு பயிர்களைத் தாக்கும் பூச்சியாகும். இது ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி வந்தது. தற்போது தமிழ்நாட்டிலும், குறிப்பாக மக்காச்சோளப் பயிரிலே சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்தப் பூச்சியின் தாக்குதலிலிருந்து மக்காச்சோளப் பயிரினைக் காக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு உயிர்க் கொல்லிகள் மற்றும் இனக் கவர்ச்சிப் பொறிகளைப் பயன்படுத்தி, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனினும், சில மாவட்டங்களிலே இப்பூச்சியின் தாக்குதலால் பயிர்களில் சேதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வந்ததன் அடிப்படையில், பாதித்த பயிர்களை ஆய்வு செய்து, 33 சதவிகிதத்திற்குமேல் சேதமுற்ற பயிர்களை வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறைமூலம் உரிய கணக்கீடு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே 33 சதவிகிதத்திற்குமேல் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர் மானாவாரிப் பயிர்களாக இருந்தால், ஹெக்டர் ஒன்றுக்கு 7,410 ரூபாய் என்ற விகிதத்திலும், இறைவைப் பயிர்களாக இருந்தால் ஹெக்டர் ஒன்றுக்கு 13,500 ரூபாய் என்ற விகிதத்திலும் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்து வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இப்பேரவைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) அதனால் என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாகத்தான் சொல்லியிருக்கிறார்.

(குறுக்கீடு) இல்லை, இல்லை. அதை எப்படிச் சொல்ல முடியும்? எவ்வளவோ வேண்டுகோள்கள் அவையில் வைக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் சொல்லிவிட்டுத்தான் சொல்ல வேண்டும் என்றால் எப்போது முடிக்க முடியும்? (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருந்தால் சரி. அதுவும் அவைக் குறிப்பில் பதிவாகியுள்ளது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) நீங்கள் கேட்டால், அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைமீதான விவாதத்தில் பேசுவதற்கான வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை இந்த இடத்தில் நிறுத்திய அன்புக்குரிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், அன்புக்குரிய, அன்புத் தாய் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் வாழ்த்துகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

நல்ல ஆட்சி செய்கிறோம் என்று கவர்னர் உரையில் சொல்கிறீர்கள். கவர்னர் உரையில் எதிர்கால தமிழகத்தைக் குறித்த கருத்து சரியாக இல்லை. அதனை நான் குற்றமாகச் சொல்லவில்லை; கல்வி வளர்ச்சி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற திட்டங்கள் ஒன்றுமேயில்லை.

பொதுவாக பட்ஜெட்டிற்கு முன்பாக, முன்னோட்டமாக, சில முக்கியமான பிரச்சினைகளை, தமிழகத்தின் வளர்ச்சிகளைக் குறித்து எடுத்து வைப்பதுதான் கவர்னர் உரை. அப்படிப்பட்ட முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 1–40

மிக முக்கியமாக 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தியிருக்க வேண்டும். மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. மத்திய ஆட்சியாளர்களிடமிருந்து,





மானியத் தொகையாக சுமார் 9,000 கோடி ரூபாயைப் பெற்றிருக்க வேண்டும். அதைப் பெற நாம் தவறியிருக்கிறோம். உள்ளாட்சித் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் ஏன் நடத்தப்படவில்லை? “உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று அரசிடம் நீங்கள் ஏன் கேட்கவில்லை, ஏன் வலியுறுத்தவில்லை” என்று மக்கள் எங்களிடம் கேட்கிறார்கள், வலியுறுத்தியும் உள்ளார்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். அதன் பிறகு பேசுங்கள். என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என் அன்பிற்குரிய தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்தான் பஞ்சாயத் ராஜ் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பஞ்சாயத் ராஜ் சட்டத்தை அவர் எப்போது கொண்டு வந்தாரோ அதற்குப் பிறகுதான் இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் கிடைக்கப்பெற்றன என்பதை மறக்கவே முடியாது. பஞ்சாயத்து உறுப்பினர்களுடைய வேலைகளைவிட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேலை இன்று மோசமாக உள்ளன என்பதை நான் இங்கே பதிவு செய்கிறேன். ஏனென்று சொன்னால், பல கிராமங்களில் தண்ணீர்ப் பிரச்சினைகளும், சுகாதாரப் பிரச்சினைகளும், மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளும் இருக்கின்றன. இதுபோன்ற அடிப்படை வசதிகளை நாம் இழந்திருக்கிறோம். அவற்றையெல்லாம் பெறுவதற்கு, முக்கியத்துவம் கொடுத்து உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியான பிரச்சினைகள் ஏன் ஏற்படுகின்றன என்பதைக் கருத்திற்கொண்டு, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று தங்களிடம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் மக்களுக்கு ஏற்படும் இந்த மாதிரியான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் இருந்தது. ஊராட்சிகள் மற்றும் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு அந்த வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் வேலைவாய்ப்பு கிடைத்ததால், அதன் மூலமாக பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த வாய்ப்பையும் தற்போது அவர்கள் இழந்திருக்கிறார்கள். 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டத்திற்குண்டான நிதி மத்திய அரசிடமிருந்து இன்னும் பெறப்படவில்லையா? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? அதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் அன்பாக வேண்டுகோள் வைக்கிறேன். அந்த நிதியைப் பெறுவதற்கு உரிய வழிவகைகளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜேஜி. பிரின்ஸ்] [2019 ஜனவரி 5

தமிழகத்தில் இன்று விவசாயிகள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம் எனப் பல்வேறு வகையான போராட்டங்கள் கோலோச்சி இருக்கின்றன. ஆசிரியர்கள் சம வேலை, சம ஊதியம் என்ற கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு போராடுகிறார்கள். 21,000 ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை. 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு ஊதியம் மிகக் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கிறார்கள். சம ஊதியம் வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2003 ஆம் ஆண்டுக்குப் பிறகு பணி நியமனம் செய்யப் பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களாக இருந்தாலும் வேறு எந்தப் பதவியில் பணிபுரிபவராக இருந்தாலும், தன்னுடைய எதிர்காலத்திற்கு தன் பிள்ளைகளை நம்பியே வாழ முடியாது. அவர்கள் கஷ்டப்பட்டு வீடு கட்டுவார்கள்; தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பார்கள்; தங்களுடைய வாழ்க்கையையும் நடத்தி வருவார்கள். ஆனால், ஓய்வூதியத் திட்டத்தைத் தவிர்ப்பது தவறு. ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டின்கீழ்தான் ஆவின் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஆவின் பால் வாங்குகிறவர்கள் பிளாஸ்டிக்கில்தான் பால் பொருட்கள் வழங்கப்படுவதாக இன்று என்னிடம் தெரிவித்தார்கள். அதைத் தவிர்ப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாட்டில்களைப் பயன்படுத்த அறிவுறுத்துமாறும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன். பிளாஸ்டிக்கில் 3, 4 வகைகள் இருக்கின்றன. எந்த கம்பெனி, அதை எவ்வாறு உற்பத்தி செய்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்பானி கம்பெனி என்பதால்தான் நான் வருத்தப்படுகிறேன்.



2019 ஜனவரி 5] [திரு. ஜேஜி. பிரின்ஸ்]

அந்த கம்பெனிதான் வெளிநாட்டிலுள்ள பல்வேறு நவீன கம்பெனிகளுடன் ஒப்பந்தம் வைத்துக்கொண்டு பிளாஸ்டிக்கை தயார் செய்கிறார்கள். அது பிளாஸ்டிக் மாதிரியே தெரியாது. 9 வகையான பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்க்க வேண்டுமென்று அரசு அறிவித்துள்ளது. எத்தனை வகையான பிளாஸ்டிக் பொருட்கள் தவிர்க்கப்படுகின்றன, அதை மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள் என்பது குறித்தெல்லாம் அரசு ஆய்வு செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொங்கல் திருநாள் பரிசாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கரும்பு, பச்சரிசி, பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய சிறப்புத் தொகுப்பையும், 1,000/– ரூபாயையும் வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது. அதனை நான் வரவேற்கிறேன். ஆனால், அரசு ஏன் நேரடியாக எங்களிடம் கொள்முதல் செய்யவில்லை என்று கரும்பு வியாபாரிகள் கேட்கிறார்கள். Agent இடம் வாங்கும்போது வியாபாரிகளுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்காமல் போய்விடுவதாகத் தெரிவிக்கிறார்கள். அதுகுறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் காடுகள் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாகும். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே தனியார் காடுகள் பிரச்சினையைக் குறித்து நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். சொத்துகளை அனுபவிக்கக் கூடியவர்கள், அதை அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தில், பிரிவு 4(A)–ல் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அவையில் நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து பேசியபோது, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்து, அதில் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். தனியார் காடுகள் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்திருத்தங்களின் மூலமாக விவசாயிகள் தாங்கள் அனுபவிக்கும் சொத்துகளை விற்கவோ, வாங்கவோ முடியும், re–plant செய்ய முடியும் என்ற திட்டத்தை அரசு கொண்டு வந்தது. ஒரு வாரத்திற்குள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1,500 விண்ணப்பங்கள் இன்னும் நிலுவையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2019 ஜனவரி 5

கொண்டு வருகிறேன். இதுகுறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரை பலமுறை நான் சந்தித்தேன். இன்றுவரை அது நடைமுறைக்கு வரவில்லை. அதை நடைமுறைப்படுத்துவதற்குண்டான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, விவசாயிகளுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தூய்மை பாரதம் திட்டம் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக பல கோடிக்கணக்கான நிதியை ஒதுக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தூய்மை பற்றி நாம் சிந்தித்துப் பார்த்துச் செய்ய வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் என்ற ஒன்று இருக்கிறது. எங்களுடைய பழமை வாய்ந்த குளச்சல் நகராட்சியில் இதுவரையில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அந்தத் திட்டத்தின் மூலமாக கிராமத்தையும் பார்க்க வேண்டும், நகரத்தையும் பார்க்க வேண்டும். A.V.M. Channel என்று ஒன்று உள்ளது. அது மிகவும் அழுக்கடைந்து, பழுதடைந்து யாரும் செல்ல முடியாத அளவிற்கு, மிகவும் துர்நாற்றம் வீசக்கூடிய அளவிற்கு, சுகாதாரக் கேடு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. மகாராணி காலத்தில் அமைக்கப்பட்ட A.V.M. Channel–ஐ தூர்வாரி சரிசெய்ய வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக நான் சென்ற முறையும் பேசியிருக்கிறேன். பல்வேறு முறை பேசியிருக்கிறேன், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–45*

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டில், புதிய பேருந்துகள், battery bus, மின்சார bus போடலாம் என்று சொன்னீர்கள். ஆனால், அப்படிப்பட்ட பஸ் இதுவரை இயக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய பேருந்துகளை இயக்குவதாகச் சொன்னீர்கள். எங்களிடம் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேருந்துகள் 715. 350 பேருந்துகளையாவது எங்களுக்குத் தாருங்கள். இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துகள் எல்லாம் பழமை வாய்ந்த பேருந்துகள், சரியாக இயங்க முடியாத பேருந்துகள். இப்பொழுது 52 பேருந்துகளை புதிதாக



2019 ஜனவரி 5] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அதேநேரத்தில் புதிய தடங்களையும் கொண்டு வர வேண்டும், சிற்றுந்துகளையும் நீங்கள் இயக்க முன்வர வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, அது மலை சார்ந்த பகுதி. நகரத்திலிருந்து கிராமத்திற்குச் செல்வதற்கு, குறுகிய சாலைகளில் நீண்ட வாகனத்தை இயக்குவதற்கு கஷ்டமாக இருக்கும். ஆகவே, நீங்கள் சிற்றுந்துகளை இயக்குவதற்கான திட்டத்தை நிச்சயமாகக் கொண்டுவர வேண்டும், அதை ஏற்படுத்த வேண்டும் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடம் நான் பேசினேன். மொழிப்போர் தியாகிகள், உண்மையான தியாகப் பெருமக்களுக்கு பென்ஷன், ஊதியம் கொடுக்கப்படவில்லை. மாத ஊதியம், பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். நான் குற்றம் சொல்லவில்லை. உண்மையான தியாகிகளுக்கு கண்ணுக்குத் தெரிந்து கிடைக்கவில்லை. ‘நான் சாவதற்கு முன்னால் பென்ஷன் வாங்கியாவது சாவேன்’ என்று சொல்கிறார்கள். அந்த list, ஏற்கெனவே கலெக்டர் recommend செய்து வந்திருக்கிறது. அது கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. நானும் இதுகுறித்து பலமுறை இந்த அவையில் பேசியிருக்கிறேன். அந்த மக்களுக்கு, தகுதியுடைய மக்களுக்கு, அந்தப் போராட்ட வீரர்களுக்கு, மொழிப்போர் தியாகிகளுக்கு பென்ஷன் வழங்க வேண்டும். காரணம் என்னவென்றால், நாங்கள் கேரளாவோடு இருந்தவர்கள், எங்கள் மூதாதையர்கள் கேரளாவில் இருந்தவர்கள், நாங்கள் எங்களுடைய அதிகாரத்தைப் பறிகொடுத்த நேரத்தில் போராடி பல உயிர்களைத் தியாகம் செய்து பெற்ற மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம். தமிழகத்தை நம்பி நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். இப்போது இங்கேயும் இல்லை, அங்கேயும் இல்லை. எங்கள் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டதாக இருக்கிறது. ஆகையால்தான், உங்களிடம் ஒரு அன்பான வேண்டுகோள் வைக்கிறேன். எங்கள் கோரிக்கையை நீங்கள் ஏற்று, அந்த மொழிப்போர் தியாகிகளுக்கு உடனடியாக மாத ஊதியம் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கையை நீங்கள் எடுப்பீர்களா? எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புக்குரிய மீன் வளத் துறை அமைச்சர் இருக்கிறார். அவருடைய பார்வைக்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். குளச்சலில் ஒரு மீன்பிடித் துறைமுகம் இருக்கிறது. உங்கள் உதவியால்தான்

[திரு. ஜேஜி. பிரின்ஸ்] [2019 ஜனவரி 5

அந்தத் துறைமுகம் நன்றாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஆயிரக்கணக்கான மீனவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று, வெளி நாடுகளுக்குச் சென்று மீன்பிடித் தொழிலைச் செய்து பிழைப்பு நடத்திவரும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை அங்கே விரிவுபடுத்தி ஒருங்கிணைந்த பெரிய துறைமுகமாக மாற்றி, அங்கே ஆயிரக்கணக்கான படகுகளை விட்டு மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு ஏன் வாய்ப்பு கொடுக்கக் கூடாது? படகு factory ஏன் திறக்கக் கூடாது? அங்கே ஏன் மீன் பதனிடும் தொழிற்சாலைகளைத் திறக்கக் கூடாது? ஏன் இப்படிப்பட்ட திட்டங்களைத் தராமல் குமரி மாவட்டத்தைப் புறக்கணிக்கிறீர்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுமாதிரி புறக்கணிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல பல யோசனைகளை வழங்கினார்கள், அதற்கு நான் பதில் சொல்கின்றேன். அதேநேரத்தில் கடைசியாகச் சொன்ன குற்றச்சாட்டைத்தான் நான் ஏற்க முடியாது. புறக்கணிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். அதை நிச்சயமாக ஏற்க முடியாது. அதற்காகவே ஒரு நிமிடம் நான் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. குறும்பனை, குழித்துறை, கேசவன்புத்தன்துறை மற்றும் பள்ளந்துறை ஆகிய இடங்களிலிருந்து உங்கள் மாவட்டத்திற்கு 16 கோடி ரூபாய்க்கு வேலை நடந்து கொண்டிருக்கிறது. தேங்காய்ப்பட்டணத்திலே ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் பதனிடும் பூங்கா அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்து ஆலோசகரை விரைவில் நியமித்து அந்தப் பணிகள் எல்லாம் துவங்கப்பட இருக்கின்றன.

மணக்குடி மீனவ கிராமத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாக நடப்பாண்டில் மணக்குடி சூழியல் பாதுகாப்புப் பூங்கா—Eco–park ரூபாய் 10 கோடி செலவில் அமைப்பதற்கான பணி விரைவில் தொடங்க இருக்கிறது. ஒகி புயலால் பாதிக்கப்பட்ட வள்ளவிளை, மார்த்தாண்டம் துறை, நீரோடி கிராமம் ஆகிய இடங்களில் 116 கோடி ரூபாய் செலவில் குறைந்த நீளமுள்ள தூண்டில் வளைவு சுவர்கள் அமைக்கப்படவுள்ளன. குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவில்



2019 ஜனவரி 5] [திரு. டி. ஜெயக்குமார்]

TAFCOFED மூலமாக மீனவர் கூட்டுறவு அங்காடி ஒன்றை அமைக்கப் போகிறோம். இவ்வளவு பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுதவிர, budget–ல் 100 ரூபாய் ஒதுக்கினோம் என்றால், அதில் கிட்டத்தட்ட 45–லிருந்து 50 சதவிகிதத் தொகை உங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்குத்தான் செலவிடப்படுகிறது. ஏனென்றால், அந்த அளவுக்கு இந்த அரசு வளர்ச்சிப் பணிகளில் அக்கறை காட்டுகின்றது. இதையெல்லாம் மறந்துவிட்டு முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது எந்த விதத்தில் நியாயம்?

பிற்பகல் 1–50

ஆழ்கடல் மீன்பிடிப்பு என்பது ஆதி காலத்திலிருந்து வந்தது அல்ல. சமீப காலத்தில்தான் வந்திருக்கிறது. ஒரு காலத்தில் கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றார்கள். Advanced Technology–ல் FRP கட்டுமரம் வந்தது. அதில் outboard machine உபயோகத்திற்கு வந்தது. அதற்குப் பிறகு நார்வே நாட்டிலிருந்து வந்த engine–ஐக் கொண்டு பெரிய boat–ஐப் பயன்படுத்த ஆரம்பித்தோம். அவர்களும் கிட்டத்தட்ட 50 nautical mile வரை செல்வார்கள். ஆனால், இப்பொழுது 200, 300 மற்றும் 400 nautical mile வரை சென்று மீன் பிடிக்கின்ற அளவிற்கு, 15 நாட்கள், 20 நாட்கள் தங்கு கடல் போய் வருகின்ற அளவிற்கு, 2 மாதங்கள்கூட தங்கு, கடல் போய் அங்கு இருந்துவிட்டு வருகின்ற அளவிற்கு, Advanced Technology–ல் அனைத்து facilities–ம் boat–லேயே provide செய்யப்பட்டு, இன்றைக்கு அங்கு தங்கி மீன்பிடி தொழில் செய்கின்ற அளவிற்கு இந்தத் தொழில் advance ஆகிவிட்டது. இந்த அளவிற்கு இத்தொழில் வளர்ச்சியடைந்தது. சமீபத்திய 2 வருடங்களில்தான். Indian Ocean, Bay of Bengal, Arabian Sea ஆகிய மூன்றையும் சேர்த்து நமது மாநிலத்தின் ஒட்டுமொத்த கடற்கரை அளவாக 1,016 கி.மீ. இருக்கிறது. முக்கடல் என்று சொன்னாலும் எல்லா இடங்களிலும் ஆழ்கடல் மீன் பிடிப்பிற்குச்செல்வதில்லை. சென்னை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில்தான் ஆழ்கடல் மீன் பிடிப்பிற்குச் செல்வார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆழ்கடல் மீன் பிடிப்பிற்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 100–க்கு 60 முதல் 70 சதவீதம்தான். அதனால்தான், கன்னியாகுமரியில் Integrated Fishing Harbour, அதாவது ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகம் அமைத்து, அதில் Processing, Value added போன்ற அனைத்து வசதிகளோடு, மீன் பிடிப்பது மட்டுமல்லாமல், பிடிக்கப்பட்ட

[திரு. டி. ஜெயக்குமார்] [2019 ஜனவரி 5

மீன்கள் நல்ல விலைக்கு விற்பனையாகக்கூடிய அளவிற்கு, என்னென்ன செய்தால் அதிக விலைக்கு விற்கலாம் என்ற விவரங்களுடன்கூடிய ஒரு திட்டம் Government consideration–ல் இருக்கிறது. அதை விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்; கவலைப்படாதீர்கள். உங்கள் மாவட்டத்தில் கண்டிப்பாக அந்தத் திட்டம் கொண்டு வரப்படும். ஆனால், உங்களுடைய ஆதங்கம் என்னவென்றால், பக்கத்தில் இருக்கின்ற தொகுதிக்குப் போகக் கூடாது என்பதுதானே! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசும்போது, வனத் துறை சம்பந்தமாக கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்ட கால பிரச்சினையான நில உரிமையாளர்கள் பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டம் இயற்றி, அவர்களின் பாதுகாப்புக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்த, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிவித்தார்கள். அதில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சில பிரச்சினைகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதைக் குறிப்பிட்டு எனக்கு separate ஆக கடிதம் எழுதிக் கொடுத்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொன்ன மாண்புமிகு அமைச்சர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மீனவர்களை இயற்கைப் பேரிடரிலிருந்து பாதுகாப்பதற்கு helicopter தளமும், boat–ம் வேண்டுமென்று கேட்டோம். அவை இன்னும் தரப்படவில்லை. அதுகுறித்து நீங்கள் குறிப்பிடவில்லை. இது முக்கியமான issue. அதை நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடி தளம் அமைக்க வேண்டும் என்பது மாநில அரசு மற்றும் மீனவர்களுடைய கருத்து. அந்த அடிப்படையில்தான் ஒகி புயல் தாக்குதலின்போது மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்தபோது, நானும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகிய அனைவரும் சேர்ந்து அவர்களிடம் petition கொடுத்தோம். தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரிக்கு வருவதற்கு அதிக distance இருப்பதால், கன்னியாகுமரியில் ஒரு helicopter தளம் அமைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. மனு கொடுத்ததோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபொழுது, கன்னியாகுமரியில் helicopter தளம் அமைக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், helicopter தளம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் helicopter தளம் அங்கு வருவதற்கு இன்னும் எவ்வளவு அழுத்தம் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு அழுத்தம் கொடுப்பதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூய்மை பாரதம் இயக்கத்தைப் பற்றிப் பேசினார்கள். அதேபோன்று, உள்ளாட்சித் தேர்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். அவர் பேசி முடித்த பிறகு கடைசியில் பதில் சொல்லலாம் என்றிருந்தேன். மற்ற அமைச்சர்கள் பேசியுள்ளதால், நானும் பேசிவிடுகிறேன். தூய்மை பாரதம் என்ற திட்டம் மத்திய அரசு திட்டமாக இருந்தாலும் சரி, மாநில அரசு திட்டமாக

[திரு. எஸ்.பி. வேலுமணி] [*2019 ஜனவரி 5*

இருந்தாலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டமாக இருந்தாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் இதனை நிறைவேற்றி வருகிறார்கள். மத்திய அரசுத் திட்டங்களுக்கெல்லாம் அதிகமான நிதியைப் பெற்று, அதிகமான திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற அளவில் பல்வேறு விருதுகளை நாங்கள் பெற்றிருக்கிறோம். தூய்மை பாரதம் இயக்கத்தில், ஊரகப் பகுதிகளில் மட்டும் 51.05 இலட்சம் குடும்பங்கள் கழிப்பறைகளற்ற குடும்பங்களாக இருப்பதாக சுகாதாரத் துறையால் கண்டறியப்பட்டது. இதில் 2013–2014 முதல் 2017–2018 வரை ஊரகப் பகுதிகளில் மட்டும் 49.84 இலட்சம் குடும்பங்களுக்கு தனி நபர் கழிப்பறை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இது பெரிய record.

*பிற்பகல் 1–55*

தூய்மை பாரத இயக்கத்தைச் சிறப்பாகச் செய்வதால், மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்த கங்கையைச் சுத்தம் செய்யக்கூடிய திட்டத்தில் இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 9 மாநில அதிகாரிகள், நம் மாநில அரசு அதிகாரிகளிடம் training எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த அளவுக்குச் சிறப்பாகச் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும், எல்லாவற்றிற்கும் வரிசையாகப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல், எங்கேயாவது தனி நபர் கழிப்பிடம் தேவை என்று சொன்னீர்களென்றால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் நகராட்சிக்கு உடனடியாக sanction செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி பல்வேறு நேரங்களில் பேசிவிட்டோம். தேர்தலைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு இருக்கிறது. வார்டு வரையறை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். வார்டு வரையறை கடந்த ஆட்சிக் காலத்திலும் செய்யவில்லை, கடந்த 20 வருடங்களாக செய்யப்படாமல் இருக்கிறது. வார்டு வரையறையை எடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட 1,15,000 வார்டுகளுக்கு வார்டு வரையறையை எடுத்திருக்கிறோம். வார்டு வரையறை என்பது மிகப் பெரிய விஷயம். அதில் அதிகமான வேலை இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். வார்டு வரையறையை முடித்து, அதற்குப் பின்னர் அடுத்தக்கட்ட வேலைகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அதனால் எங்கேயும் வேலை நடக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள், யூனியன் officers இருக்கின்றார்கள், எல்லோருமே இதனை follow செய்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய துறை அதிகாரிகள் follow செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் எங்கேயும், எந்தப் பணியும் தொய்வடையவில்லை. குடிதண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், எல்லா வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. டெங்கு ஒழிப்பு, தொற்றுநோய் ஒழிப்பில் முழுமையாக சுகாதாரத் துறையோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். எல்லா வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. அதேபோல fund–ஐயும் மத்திய அரசிடமிருந்து நாங்கள் வாங்கியிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து fund வரவில்லை என்று சொன்னார்கள். இரண்டு dues வாங்கியிருக்கிறோம். MAWS Department–க்கு மத்தியிலிருந்து பரிந்துரை செய்துவிட்டார்கள். மத்திய ஊரகத் துறையிடம் நாங்கள் பேசிவிட்டு வந்திருக்கிறோம். அதையும் படிப்படியாக வாங்கிக் கொண்டிருக்கிறோம்.



*2019 ஜனவரி 5*] [திரு. எஸ்.பி. வேலுமணி]

அதேபோன்று 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் பற்றிச் சொன்னீர்கள். 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படுத்தி பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கிறோம். கஜா புயல் பாதிப்பின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்துப் பேசி, கடிதம் எழுதி, 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை 150 நாட்களாக அறிவிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் அசையாத் தன்மையுடைய சொத்துக்களை உருவாக்க வேண்டுமென்று இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நீங்கள் கேட்க வந்தீர்கள். அது மத்திய அரசாங்கத்தின் திட்டம். பயனாளியின் account–க்கு நேராக மத்திய அரசாங்கத்திலிருந்து வந்துவிடும். முதலில் ஊதியம் எல்லாம் தமிழ்நாடு அரசின் account–க்குப் போய் பயனாளியின் account–க்குப் போகும். மத்திய அரசின் திட்டப்படி, தற்போது நேரடியாக பயனாளியின் account–க்கு வந்துவிடுகிறது. இது மத்திய அரசின் திட்டம். அதிகமான ஊழியர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[2019 ஜனவரி 5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பிரின்ஸ், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள். நேரம் இல்லை, இரண்டு மணி ஆகிறது. உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தனை கோடி ரூபாய் கொடுத்தாலும் அதை நாங்கள் வரவேற்கிறோம். சென்ற 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் நாள் 'ஒகி' புயல் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாக்கியது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதன் பாதிப்பை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நேரில் வந்து பார்வையிட்டார்கள். அதில் முக்கியமாகப் பார்க்க வேண்டியது என்னவென்றால், சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.4,500/–ம், மற்ற வீடுகளுக்கு ரூ.5,000/–ம் கொடுத்தீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது 8 இலட்சம் ரூபாய்க்கு வீடு கட்டிக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்காக சந்தோஷப்படுகிறோம். நீங்கள் 10 அல்லது 20 இலட்சம் ரூபாய்க்குக்கூட வீடு கட்டிக் கொடுங்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரபட்சம் இல்லாமல் செய்ய வேண்டும். அதேபோல உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு, ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுப்பதாகச் சொன்னீர்கள். நீங்கள் வேலை கொடுத்திருக்கிறீர்கள், நான் வரவேற்கிறேன். கல்வித் தகுதிக்கேற்றபடி வேலை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், இன்னும் விடுபட்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். நீங்கள் பணிகளைச் செய்யவில்லை என்று சொல்லவில்லை. நான் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். நீங்கள் நிறைய செய்திருக்கிறீர்கள், செய்யவில்லை என்று சொல்லவில்லை. ஆனால், கன்னியாகுமரி மாவட்ட கடலோரப் பகுதி தமிழகத்திலுள்ள மற்ற கடலோரப் பகுதிகளைப்போல் அல்ல. கன்னியாகுமரி மாவட்ட கடல் மிகவும் ferocious ஆனது. அந்த மக்கள் அங்கே மீன் பிடிக்கச் செல்வது கடினமான ஒன்று. ஆகவே, எவ்வளவு தாக்கங்கள் இருக்கின்றன, தேவைகள் இருக்கின்றன என்பதற்கேற்றபடி பணிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கிறேன். ஆக, எங்களுடைய மாவட்டத்தில். . .



*2019 ஜனவரி 5]*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒகி புயல் குறித்து இதே மன்றத்திலே பல்வேறு முறை விவாதித்திருக்கிறோம். அவர்களுடைய துயரைத் துடைக்கின்ற வகையிலும், அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுகின்ற வகையிலும், இதுவரை இல்லாத வகையிலே, எந்த மாநிலத்திலும் கொடுக்காத வகையிலே, உயிரிழப்புக்காக 20 இலட்சம் ரூபாயை முதன்முதலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று தாயுள்ளத்தோடு அறிவித்தார்கள். அது அவர்களிடத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட்டு, அதற்குப் பிறகு அந்தக் குடும்பத்திலிருக்கும் வாரிசுதாரர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே வேலைவாய்ப்பையும் அளிப்போம் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்தார்கள்.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** அதன்படி, நமது தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது பொற்கரங்களால் அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புக்கான உத்தரவைக் கொடுத்திருக்கிறார்கள். அப்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் இருந்தார்கள். இவர்களில், கல்வித் தகுதி உயர்வாகப் பெற்றிருப்பவர்கள் அதற்குத் தகுந்த வேலைவாய்ப்பை எதிர்பார்ப்பதிலே நியாயம் இருக்கிறது. அதில் ஒன்றும் பாரபட்சமில்லை. ஆனாலும்கூட, உடனடியாக அவர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுக்கக்கூடிய வகையிலேதான் தற்போது அந்தப் பணிகளை நிறைவேற்றி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அதே கருத்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ்குமார் அவர்களும் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். கருணை அடிப்படையில் பணி வழங்கும் விதிமுறைகளையெல்லாம் கடைப்பிடித்து அதைச் செய்ய முடியுமா என்பதைப் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2019 ஜனவரி 5

எடுத்துச் செல்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, இதுவரை இல்லாத வகையில் நிவாரணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு அறிவித்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இதுவரையில்லாத அளவிற்கு நமது அம்மா அவர்களுடைய அரசு 40 கோடி ரூபாய்க்கு நிவாரணத்தை அளித்திருக்கிறது. Missing fisherman என்றால் இழப்பீடு பெற ஏழு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். Affidavit வாங்கிக் கொண்டு இரண்டு வருடங்களில் இழப்பீடு கொடுக்கலாம். ஆனால், அந்த affidavit முறையையும் தவிர்த்துவிட்டு, notice board–ல் ஒட்டிவிட்டு, ஒரு மாதம் கால அவகாசம் கொடுத்து, அவர்கள் திரும்பி வரவில்லை என்பதைப் பதிவு செய்துவிட்டு, அவர்களுக்கு இழப்பீடாக 20 இலட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறோம். அதுபோன்று சுமார் 204 பேருக்கு தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவிற்கு நிவாரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அரசால் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல சேதமடைந்த படகுகளுக்கு 7 கோடி ரூபாயை நிவாரணமாகக் கொடுத்திருக்கிறோம். 44 கிராமங்களில், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட வகையில், ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இதுபோன்று எந்தக் காலத்திலும் கொடுக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியை விடுவித்து, நிதியுதவி செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், தயவுசெய்து நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.



2019 ஜனவரி 5]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இரண்டே இரண்டு points மட்டும். சுருக்கமாக உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே ஒரு point–ஐ மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் குருசு மலை என்ற ஒரு மலை இருக்கிறது. அதாவது கிறிஸ்தவர்களுடைய புனித ஸ்தலம். கேரள எல்லையில் இருக்கிறது. அது களியல் என்ற கிராமத்தின் ஓரத்தில் மலைப் பகுதியில் இருக்கிறது. அங்கு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்போது பல இலட்சம் மக்கள் அங்கு வந்து தரிசிப்பார்கள். பக்கத்தில் காளிமலை இருக்கிறது. அங்கு சென்று இந்து மக்கள் வழிபடுவார்கள். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், பல ஆண்டுகளாக கோரிக்கைகள் வைத்தும், அந்தப் பகுதியிலே மின் இணைப்பு கிடைக்கவில்லை என்ற வருத்தம் இருக்கிறது. அதை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிச்சயமாக அதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இன்னும் ஒரே ஒரு point–ஐ மட்டும் நான் சொல்லி விடுகிறேன். உரை முடிந்து விட்டது. எங்கள் மாவட்டத்தில் படித்தவர்கள் 92 விழுக்காடு பேர் இருக்கிறார்கள். வருகின்ற ஆண்டிலாவது ஒரு IT Park–ஐ அமைக்க வேண்டும். 42 Engineering colleges இருக்கின்றன. படித்த மாணவர்கள் இருக்கின்றனர். தொழிற்பூங்காவினை அமைத்துத் தர வேண்டும். ரப்பர் உற்பத்தி செய்யப்படுவதால் Rubber factory–ஐ அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வைக்கிறேன்.

ஒரே ஒரு point–ஐ மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். நான்கு வழிச் சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம். அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதிலே பல சிக்கல்களும், பாரபட்சங்களும் இருக்கின்றன. வாழவச்சகோஷ்டம் பேரூராட்சியில் நான்கு வழிச் சாலை திட்டத்திற்காக வழங்கப்பட்ட நஷ்ட ஈடு ரூ.25,000/–, ரூ.40,000/–. பக்கத்து கிராமமான நட்டாலம் ஊராட்சியில் வழங்கப்பட்ட நஷ்ட ஈடு ரூ.1,50,000/–, 2,00,000/– நஷ்ட ஈட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தில் கனிம வளங்கள் செறிந்து இருக்கின்றன. இயற்கை அழகும், கனிம வளமும் நிறைந்த பகுதி. என்னுடைய தொகுதியின் ஒரு பகுதியில் மலையை அடித்து உடைக்கிறார்கள். அதில் என்ன வேதனையென்றால், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களெல்லாம் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து, 'பாறைகளை உடைத்து நஷ்டப்படுத்தாதீர்கள். இங்கு உடைக்கப்படும் பாறைகளை எங்கள் மாவட்டத்திலுள்ள மக்களுக்குப் பயன்படுத்துங்கள். கேரள மாநிலத்திற்குக் கொண்டு போக வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். ஆனால், அசையவில்லை, கலெக்டர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. 49 குவாரிகளில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் பாதிப்பு உள்ளது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் கன்னியாகுமரி மாவட்டமே இருக்காது. அழகும் போய்விடும். எங்கள் மக்களுக்கு கல்லும் கிடைக்காது. ஆனால், கேரளாவிலிருந்து ஒரு piece கல்லையாவது இங்கே கொண்டு வர முடியுமா? கேரளாவில் கல் எடுக்க விடுவதில்லை. * தமிழ்நாட்டு மக்களிடம் அடித்துவிட்டு, * கேரள மக்கள் அனுபவிக்கிறார்கள். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியே கல் உடைத்தாலும் அந்த மாவட்டத்திற்குள்தான் அதைப் பயன்படுத்த வேண்டும், வெளியிலே கொண்டு செல்லக் கூடாது. கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நலனுக்காக அன்போடு இதைச் சொல்கிறேன். இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.





பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆற்று மணல் கேரளாவிற்குக் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், M sand தடை செய்யப்படவில்லை. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இன்றைக்கு கேரளாவிற்கு பல இலட்சம் டன் மணல் தேவைப்படுகிறது. அங்கே மணல் எடுக்க முடியாது. அதனால், முழுவதுமாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மணலை எடுத்துச் செல்கிறார்கள். இன்றைக்கு ஆற்று மணல் தடை செய்யப்பட்டதைப் போன்று கனிம மணலும் கேரளாவிற்குக் கொண்டு செல்வதை தயவுசெய்து தடை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் எங்கள் மாவட்ட மக்களின் சார்பில் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு அமைச்சர் உங்களுக்கும் சேர்த்துத்தான் விளக்கம் சொல்கிறார்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டு, கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகிறது, கடத்திச் செல்லப்படுகிறது என்று பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதுரை உயர் நீதிமன்றத்திலே வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கின்றார். கனிம வளச் சட்டத்தின்படி, விதிகளின்படி தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ஆற்று மணலை மட்டும் எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும், எங்கு வேண்டுமானாலும், எந்தத் தொழிலை வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்று விதிகள் இருக்கின்றன. நம்முடைய தமிழகத்தில் ஆற்று மணலை மட்டும் எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற கனிமங்களை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம் என்று விதிகள் இருக்கின்றன. ஆற்று மணலை எடுக்கக் கூடாது,

ஆற்று மணலை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லக் கூடாது என்பதற்காகத்தான் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. M sand என்பது மலையை உடைக்கும் போது, அதிலிருந்து வருகின்ற ஒரு by–product தான். கற்களை உடைத்து அதிலிருந்து வருவதுதான் M sand. ஆகவே, அதையும், ஆற்று மணலையும் நீங்கள் ஒன்றாகப் பார்க்கக் கூடாது. ஒரு தொழிலைத் தடை செய்வது என்பதை சட்டத்திற்குட்பட்டுத்தான் நாம் செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு மலைக் குவாரிகளில் உடைக்கப்பட்ட கற்களை கேரளாவுக்கு எடுத்துச் செல்வதைத் தடை செய்ய வேண்டுமென்று சொல்கின்றார்கள். அதை சட்டத்திற்குட்பட்டுத்தான் நாம் செய்ய முடியும். மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதற்கு சட்டத்தில் விதி இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கின்றார். வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்குகளுக்கு நீதிமன்றம் என்ன உத்தரவு பிறப்பிக்கிறதோ அதன் பிறகு அதை அரசு கவனித்து ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, அவர்கள் சொன்னதைத்தான் நீங்களும் சொல்லப் போகிறீர்கள், சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்டதுதான் அந்த குருசு மலை என்கிற பகுதி. காளிமலை என்பது அதற்கடுத்துள்ள இந்து சமய நெறிப்படி நடக்கக்கூடிய கோயில். அதே பகுதியில் மின் வசதியை செய்திருக்கிறார்கள், சாலை வசதியை செய்து கொடுத்திருக்கிறார்கள். குருசு மலைப் பகுதி 13 படிகள் வரை கேரளா jurisdiction–ல் வருகிறது. அவர்கள் அதுவரைக்கும் மின் வசதியை செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்குமேல், 13 படிகள் முதல் 16 படிகள் வரை தமிழ்நாடு jurisdiction–ல் இருக்கிறது. அந்த இடத்திற்குத்தான் மின்சார வசதி இல்லாமல் பக்தர்கள் செல்ல முடியவில்லை. நிறைய சிரமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டு திருவிழாவின்போதும் அங்கு இலட்சக்கணக்கான மக்கள் வருவார்கள். அப்படி ஒரு கூட்டம் வருவதால், அந்த இடத்தில் மின்சார வசதி இல்லாமல் இருப்பதனால் பாதுகாப்பு குறைவாக இருக்கிறது.





மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி தற்காலிகமாக toilet வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறேன். கரண்ட் பிரச்சினையைத்தான் சமாளிக்க முடியவில்லை. அது ஒரு Pilgrim Centre என்பதால், அங்கு மின்சாரம் வழங்க சட்டத்தில் இடமிருக்கிறது. ஆகையால், அதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு கவனத்தில் எடுத்துக்கொண்டு மின்சாரம் வழங்கினாலே, அந்தப் பகுதியில் சாலை வசதி உள்பட அனைத்தும் உடனடியாக வரும். ஆகையால், நீங்கள் அதை கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களும் வழக்கறிஞர்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணைப்படிதான் நாம் நடந்து கொண்டிருக்கின்றோம். உச்ச நீதிமன்றம் இந்து கோயில், முஸ்லிம் கோயில், கிறிஸ்தவ கோயில் என்று பார்க்காமல் அனைத்து கோயில்களுக்குமே கொடுத்திருக்கின்றது. புறம்போக்குப் பகுதியில் இருக்கின்ற கோயில்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று ஆணையிட்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் நாங்கள் கொடுக்காமல் இருக்கின்றோமேயொழிய, தனிப்பட்ட முறையில் அங்கே கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விழாக் காலங்களில் தற்காலிகமாக toilet வசதி செய்து கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதேபோல, ஜெனரேட்டரையும் வைத்து மின்சாரத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் சொன்ன * என்கிற வார்த்தைகள், தமிழ்நாட்டு மக்கள், கேரள மக்கள் என்று திருத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[2019 ஜனவரி 5

பிற்பகல் 2–10

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்ணில் கனிவாய், கருத்தில் தெளிவாய், நெஞ்சில் நிறைவாய், தாயாய், தந்தையாய், தத்துவத்தின் இருப்பிடமாய், உயிராய், உண்மையின் பிறப்பிடமாய் விளங்கிய, என் வாழ்வில் பல உயர்வுகளை எனக்கு அளித்திட்ட, நான் நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சி புயலையும், சூதுவாது செயலையும் வாய்மையால் வென்றெடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மலர்க்கூட்டம் கூடுவதால் மாலை தோன்றும், நாமெல்லாம் கூடுவதால் வெற்றி தோன்றும் என முதல்வரோடு இணைந்து நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துகளைக் கூற வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையில், தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்தும், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் குறித்தும், எந்த மாநிலத்திலும் இல்லாத, மற்ற மாநிலங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முன்னோடித் திட்டங்கள் குறித்தும், ஒருபோதும் மாநில உரிமைகளை அம்மா அவர்களின் அரசு விட்டுக் கொடுக்காது என்பது குறித்தும், அரசின் புதிய திட்டங்கள் குறித்தும், பேரிடர் நிவாரணப் பணிகள் குறித்தும் தெளிவாக்கப்பட்டுள்ளது. சொல்லப் போனால், ஆளுநர் உரை என்பது "சமர்த்து உரை"யாக அமைந்துள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016–ல் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்றதும் இப்பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தை நினைவுகூர்ந்தார்கள்.

"மக்கள் சக்தியை மட்டும் மூலதனமாகக் கொண்ட இயக்கங்கள் மட்டுமே உருக்குலையாமல், துருப்பிடிக்காமல், தேய்ந்துவிடாமல், மாய்ந்துவிடாமல் அசைக்க ஒண்ணாத கோட்டை கொத்தளமாக புத்தொளி வீசுகிறது" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்களின் கூற்றுப்படி கடந்த ஐந்தாண்டு காலமாக மக்கள் சக்தியை மூலதனமாகக் கொண்டு ஆட்சி செய்ததால், இரண்டாவது முறையாக, ஆளுகின்ற கட்சிக்கே தொடர்ந்து ஆட்சி அதிகாரம் அளித்த மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதலமைச்சராக அரியணை ஏற்றினார்கள். "நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ, அப்படித்தான் நல்ல மக்களுக்கு நிம்மதி வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மக்கள் நிம்மதியடைந்து வாழ பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.



2019 ஜனவரி 5] [திரு. பி.எம். நரசிம்மன்]

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் என்றால், பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. போடுகிற திட்டங்கள் பொது மக்களுக்குச் சிந்தாமல், சிதறாமல் போய்ச் சேருகின்றனவா எனப் பார்க்க வேண்டும். சட்டம்–ஒழுங்கை நிருவகிக்க வேண்டியுள்ளது. எதிர்க்கட்சிகளின் பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய நிலை உள்ளது. பொது மக்களின் கோரிக்கைகளைத் தீர்க்க வேண்டியுள்ளது. அப்படிப் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல் 11,286 கோப்புகளில் துரிதமாக முடிவுகண்டு, பொது மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்பட்டதால், இது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் இமாலய சாதனையாக அமைந்திருக்கிறது.

சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழையெளிய மக்கள் பொருளாதார வளர்ச்சியடைய அவர்களின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். சிறந்த கல்வி, பொருளாதார வளர்ச்சி, சமுதாய வளர்ச்சிக் குறியீட்டை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக அமைகிறது. ஒரு சமுதாயம் வளர்ச்சியடைந்த சமுதாயமாகக் கருதப்பட வேண்டுமானால், மனித வள குறியீடுகள் வளர்ச்சியடைய வேண்டும். எனவேதான், அம்மா அவர்களின் அரசு கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. எனவே, பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவ, மாணவியருக்கு நான்கு இணைச் சீருடைகள், விலையில்லா பாடநூல்கள், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டிகள், நில வரைபடப் புத்தகம், இணை காலணிகள், விலையில்லா மிதிவண்டிகள்,

கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை, சத்தான மதிய உணவு, விலையில்லா மடிக்கணினி, 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மொத்தம் 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை என வழங்கப்படுகிறது. இதே அளவு முக்கியத்துவம் உயர் கல்விக்கும் அளித்து வருகிறது. எனவே, மாணவர்கள் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

பிற்பகல் 2–15

அதேபோல், மக்கள் நல்வாழ்வுத் துறையில் தமிழ்நாடு முன்னேறியுள்ளது. மகப்பேறு இறப்பு விகிதம், பச்சிளங்குழந்தை இறப்பு விகிதம் குறைந்துள்ளது பாராட்டுக்குரிய ஒன்றாகும். 2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம், ஏழையெளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்க 1,264 கோடி ரூபாயை அனுமதித்த மைய அரசுக்கு நன்றி தெரிவித்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். எய்ம்ஸ் மருத்துவமனையால் 15 மாவட்டங்கள் நன்மைபெறும்; உயர்தர சிகிச்சை கிடைக்கும்; பொருளாதாரம் வளர்ச்சியடையும்; வேலைவாய்ப்பு கிடைக்கும். இதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிற்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமையான நதிநீர் பிரச்சினைகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. முல்லைப் பெரியாறு பிரச்சினையில், உச்ச நீதிமன்றத்தில் நியாயமான தீர்ப்பினைப் பெற்றதன் அடிப்படையில், 21–11–2014 அன்று முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி வரை நீர் தேக்கப்பட்டது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்த்தேக்க அளவான 152 அடிக்கு நீரைத் தேக்கிட தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 5–2–2007–ல் பிறப்பிக்கப்பட்டாலும், இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின்





காரணமாக 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை வெளியிடப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையால், பல்வேறு நிலைகளில் நடத்தப்பட்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, இதிலே வெற்றி கண்டார்கள். மேலும், மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர்ப் பகிர்வில் கீழ்படுகை மாநிலங்களுக்கு முறையாகக் கிடைக்க வேண்டிய நதிநீர் கிடைப்பதில் பாதிப்பு ஏற்படும்வகையில், மேல்படுகையில் உள்ள மாநிலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்ற காவேரி நடுவர் மன்ற ஆணையின் மீதான, உச்ச நீதிமன்ற உத்தரவினை வெளிப்படையாக மீறும் கர்நாடக அரசின் மேகதாதுவில் புதிய அணை கட்டும் முயற்சி கண்டனத்திற்குரிய ஒன்றாகும். விரிவான திட்ட அறிக்கையை 'கர்நாடக அரசு தயாரிக்க ஒப்புதல் அளித்துள்ள மத்திய நீர் ஆணையத்தின் நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடுமையாக எதிர்க்கிறது. இதற்காக சட்டமன்றத்திலும், 'கர்நாடக அரசோ அல்லது அதன் அமைப்புகளோ காவேரி வடிநிலப் பகுதியிலோ, மேகதாதுவிலோ எந்த ஒரு பணியையும் மேற்கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசிற்கு மைய அரசு உத்தரவிட வேண்டும்' என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருப்பது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த திடமான நடவடிக்கையாகும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொது மக்கள் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவேரி வடிநிலப் பகுதியையும், மாநிலத்தின் சில மத்திய மாவட்டங்களையும் 'கஜா' புயல் கடுமையாகத் தாக்கி உயிரிழப்பினை ஏற்படுத்தியதோடு, பயிர்களுக்கும், வீடுகளுக்கும் பெரும் சேதம் விளைவித்தது. பருவகால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எடுத்து, மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றியதுடன், மீனவர்களை எச்சரித்து, துரிதமாகச் செயல்பட்டதால், உயிர்ச்சேதம் வெகுவாகத் தவிர்க்கப்பட்டது. 6.4 இலட்சம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பைகள் உட்பட வாழ்வாதார நிவாரண உதவிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் மீட்டெடுப்புப் பணிகளை மேற்கொள்ள 2,335.48 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடி நிவாரண உதவியாக அறிவித்துள்ளது பெருமைக்குரிய ஒன்றாக அமைகிறது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம்,

[திரு. பி.எம். நரசிம்மன்] [2019 ஜனவரி 5

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது என சட்டமன்றத்தில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 2–20*

மேலும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிசெய்வதில், அரசின் சிறந்த நிருவாகத் திறமைக்கு பல்வேறு விருதுகள் பெற்றிருப்பது சான்றாக அமைகின்றன. வேளாண்மைத் துறையில் செயல் திறனுக்கான சிறந்த மாநிலம்; சுற்றுலா உட்கட்டமைப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் 'இந்தியா டுடே' நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிறப்புடைமைக்கான விருதுகள்; பொது விநியோகத் திட்டத்தை கணினிமயமாக்கியதற்கு சிறந்த நடைமுறை விருது; உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பான செயல்முறையில் உயர்தர சுகாதார சேவைக்கான அங்கீகாரம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான விருதுகள்; மேலும், பொது நிருவாகக் குறியீட்டில் நல்லாளுமைக்காக நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளது. நிலையான வளர்ச்சிக் குறியீட்டிற்கான அறிக்கையின்படி, தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. சிறந்த நிருவாகத் திறமைக்கு இவ்விருதுகள் எல்லாம் சான்றாக அமைகின்றன.

மேதகு ஆளுநர் அறிக்கை குறித்து பலர் பாராட்டியும், சிலர் குறை கூறியும் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். எந்த புதிய திட்டங்களும் இல்லை என்றும், எவ்விதப் பலனும் இல்லை என்றும் சிலர் குறை கூறியுள்ளார்கள். இப்படி குறை சொல்வது குறித்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதே அவையில் கூறிய கருத்துகள் குறை கூறுபவர்களுக்கு பதிலாக அமைந்துள்ளன என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதே அவையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறிய வார்த்தைகளாவன: "தேர்தலில் என்னென்ன சொன்னோமோ, அதை நிறைவேற்றுவதற்கு என்னென்ன வழி என்பதை அறிந்து, திட்டத்தைத் தீட்டி, அதை நிறைவேற்றுவதற்கு ஆளுநர் மூலமாக கொள்கையைச் சொல்லி, அதை நிதிநிலை அறிக்கைமூலம் சொல்லி, நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லோரும் அப்படித்தான் செய்வார்கள். இது இயற்கை. ஒப்பாரி வைப்பவர்கள் எங்கே போனாலும் ஒப்பாரி வைப்பார்கள். சாவு வீட்டிற்குப் போனாலும் ஒப்பாரி வைப்பார்கள். கல்யாண



2019 ஜனவரி 5] [திரு. பி.எம். நரசிம்மன்]

வீட்டிற்குப் போனாலும் ஒப்பாரி வைப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி சில குணங்கள். அதைத் தவிர்க்க முடியாது" என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆளுநர் உரை குறித்து பதில் தெரிவிக்கிறபோது உரையாற்றியிருக்கிறார்கள். எனவே, ஒப்பாரி வைப்பவர்களைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த திட்டங்களை நாட்டிற்கும், நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கும் செவ்வனே நிறைவேற்றுகிறார்கள். அம்மாவின் அரசிற்கு எதிலும் வெற்றி, எப்போதும் வெற்றி. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதுபோல், 'நாளையும் நமதே, நாற்பதும் நமதே'. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம்–ஒழுங்கைப் பொறுத்தவரையில், தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால், தமிழகத்தில் பொது அமைதி பாதுகாக்கப்படுகிறது. காவல் துறையினரின் சிறப்பான பணிகள் காரணமாக, தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன. சிலர், தமிழ்நாட்டின் சட்டம்–ஒழுங்கு பற்றி குறை கூறுகின்றனர். 2010 ஆம் ஆண்டு தாக்கலான இந்திய தண்டனைச் சட்ட குற்றங்களின் குற்ற விகிதம் 277.08 என இருந்தது. 2015 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்ட குற்றங்களின் குற்ற விகிதம் 244.38 என குறைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்ட குற்றங்களின் குற்ற விகிதம் 258.8 என குறைந்துள்ளது. இதே ஆண்டு தெலுங்கானா மாநிலத்தில் இந்திய தண்டனைச் சட்ட குற்றங்களின் குற்ற விகிதம் 295.7 என உயர்ந்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கைத் திறம்பட நிருவகித்து அமைதியை நிலைநாட்டி வருகிறது காவல் துறையினருக்காக துவக்கப்பட்ட 'புத்தாக்க நலத் திட்டம்' ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்துள்ளது. தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கையின்படி, பெண்களின் பாதுகாப்பில் மிகச் சிறந்த மாநகரமாக சென்னையும், மிகச் சிறந்த நகரமாக கோயம்புத்தூரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிற்குக் கிடைத்த சான்றுகளாகும்.

[திரு. பி.எம். நரசிம்மன்] [2019 ஜனவரி 5

பிற்பகல் 2–25

இப்படி பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும், 2010 ஆம் ஆண்டைய நிலைப்பாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

2011 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் முன்னோடித் திட்டமான, விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம், கோழியின அபிவிருத்தித் திட்டம், தீவன அபிவிருத்தித் திட்டம், பசுமை வீடுகள் திட்டம், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் 3 சதவிகித ஒதுக்கீடு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தொடர்ச்சியாக தமிழ்நாடு முதல் நிலை, திருமண உதவித் திட்டமான தாலிக்குத் தங்கம், கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவிகள், ஒவ்வொரு வீட்டிற்கும் 100 யூனிட் விலையில்லா மின்சாரம், நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம், பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர், மூத்த குடிமக்கள், ஆதரவற்றோர் போன்றோருக்கு தொடர்ந்து உதவிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், அம்மா இரு சக்கர வாகன மானிய நிதியுதவித் திட்டம் என பல்வேறு திட்டங்களை அம்மா அவர்களுடைய நல்லரசு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டு வரப்பட்ட மகத்தான திட்டமான சத்துணவுத் திட்டத்தை அனைத்து மாநிலங்களும் செயல்படுத்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றமே ஆணையிட்டது.

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் பல மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விலையில்லா சைக்கிள் வழங்கும் திட்டத்திற்கு மத்திய திட்டக் குழுவே அனைத்து மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்குகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டமும் இப்போது எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2019 ஜனவரி 5] [திரு. பி.எம். நரசிம்மன்]

ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற வேண்டுமென்பதற்காகவும், இந்த நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அரிய திட்டங்களையெல்லாம் இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான முறையிலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

உணவுப் பாதுகாப்பை அரசு உறுதி செய்துள்ளது. தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசியோடு, குறைந்த விலையில் சர்க்கரை, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை வழங்குவதன்மூலம் பசிப்பிணி இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இப்படி பல்வேறு திட்டங்களை நம்முடைய அம்மா அவர்களுடைய நல்லரசு இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை 'புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம்' என்று பெயர் மாற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டிருப்பதோடு, பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டுமென்று சொல்லியிருப்பது மாநில அரசின் கோரிக்கை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழர்களின் கோரிக்கையாகும். சரியான நேரத்தில் சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாக அமைகிறது.

ஆண் சிங்கங்கள் மட்டுமே உலவி வந்த அரசியல் களத்தில், ஒரு பெண்ணாக அவர்களுக்கெல்லாம் சவால் விடுத்து, சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது இந்த சாதனைகளுக்கெல்லாம் பின்புலமாக இருந்தது அவரது உழைப்பும், திறமையும் மட்டுமே. தன் திறமை, அறிவாற்றல், உறுதியான தன்மை இவற்றால் பல சாதனைகளைப் புரிந்த இரும்புப் பெண்மணியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்தார்கள்.

இந்தியாவின் வடபுலமானாலும், தென்புலமானாலும், அரசியல் களத்தில் அரசியல் இயக்கங்களின் தலைவர்களின் வாரிசுகளே கோலோச்சுகின்றனர். இது அவர்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பு. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கு விதிவிலக்கு. தலைமைமீது விசுவாசம் கொண்ட தொண்டனும், ஆட்சி அதிகாரத்திற்கு வரலாம் என்பது

[திரு. பி.எம். நரசிம்மன்] [*2019 ஜனவரி 5*

*மாண்புமிகு அம்மா அவர்களால் வகுக்கப்பட்ட நியதி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு உதாரணமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் விளங்குகிறார்கள்.*

மேதகு ஆளுநர் அவர்களின் உரை அனைத்து அம்சங்களும் பொருந்தியதாக உள்ளது. ஆளுநர் அவர்களின் உரையில், அனைத்துத் துறைகளின் செயல்பாடுகள் குறித்து தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் நலனுக்கு அரசு நிறைவேற்றும் திட்டங்கள் குறித்து ஆளுநர் உரையில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 2–30*

ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கையின் முன்னுரையாக அமைந்துள்ளது. இது அரசின் Mini Budget ஆக அமைந்துள்ளது. ஆளுநர் உரை, தமிழ்நாட்டு மக்களுக்கு பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த நல்ல ஆளுநர் உரையை நான் வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசும்போது எல்லைக் காவலர்களுக்கு நிதியுதவி வழங்குவது பற்றிப் பேசினார்கள். (குறுக்கீடு) நான் பதிவு செய்ய வேண்டும். ஏனென்றால் இது முக்கியமான விஷயம். அவர் சொன்ன விஷயம், ஏதோ எல்லைக் காவலர்களை அரசு கைவிட்டுவிட்டது போன்ற ஒரு கருத்தைப் பதிவு செய்தார். இந்த முறை நாம் 401 எல்லைக் காவலர்களுக்கு நேரடியாகவும், அவர்களுடைய மரபுரிமையர்கள் 239 பேர் என மொத்தம் 640 பேருக்கு தமிழக அரசாங்கத்தால் இப்பொழுது உதவித் தொகை தரப்படுகின்றது. அதுவும் இந்த வருடம்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களால் மாதம் ஒன்றுக்கு 4,500 ரூபாய் என உயர்த்தப்பட்டு, மருத்துவப் படி 500 ரூபாயும் கொடுத்து, மொத்தம் 5,000 ரூபாய் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.*



*2019 ஜனவரி 5*] [திரு. க. பாண்டியராஜன்]

*மரபுரிமையர்களுக்கும் உயர்த்தப்பட்டு ரூ.2500 + ரூ.500 என மொத்தம் ரூ.3,000/– கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். திரு. பிரின்ஸ் அவர்கள் சொன்ன ஏழு பேர் தொடர்பாக மாவட்ட ஆட்சியருடைய ஆய்வில் இருக்கின்றது. அது நிகழ்ந்து 50 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அதனால், அதைத் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தி, அது சரியாக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கும் சேர்த்து வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

***திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கானல் நீர் கண்ணுக்குத் தோன்றும், கைக்கு எட்டாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. அதுபோலத்தான் இந்த அவையிலே ஆளுநர் அவர்கள் வாசித்திருக்கின்ற உரையும் எந்தவிதமான பயனும் தராத, அரைத்த மாவையே திரும்ப அரைத்திருக்கிற உரையாக அமைந்திருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பொங்கல் பரிசாக நாங்கள் ஆயிரம் ரூபாயை உயர்த்தித் தந்திருக்கிறோம் என்று பெருமையோடு அறிவித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே 100 ரூபாய் கொடுத்தது உயர்த்தித் தரப்பட்டிருக்கிறதே தவிர, அதை ஒரு புதிய அறிவிப்பாக தமிழக மக்கள் நிச்சயமாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். தொகை உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது, அவ்வளவுதான். மக்கள் நிச்சயமாக தொகை உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள்; புதிய அறிவிப்பு இல்லை என்று சொன்னேன். மேதகு ஆளுநர் உரையிலே புதிய அறிவிப்பு இல்லை. 100 ரூபாயை, ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறீர்கள், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ரகுபதி அவர்கள், 100 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப்பது என்பது ஒரு புதிய அறிவிப்பு இல்லை என்பதுபோல் சொன்னார்கள். மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சொன்னார். 100 ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தது,*

[திரு. செல்லூர் கா. ராஜு] [2019 ஜனவரி 5

இப்பொழுது 1,000 ரூபாய். 100 ரூபாய் பெரியதா, 1,000 ரூபாய் பெரியதா? இப்பொழுது அண்ணன் அளவிற்கு வேண்டுமென்றால் ஆயிரம் ரூபாய் என்பது சாதாரணமாக இருக்கலாம். திரு. ரகுபதி அண்ணனுக்கு அது சாதாரணமாக இருக்கலாம். போகின்ற வரை செலவழித்துக் கொள்ளலாம். ஆனால், இந்த ஆயிரம் ரூபாயைப் பார்த்து எத்தனை பேர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணக்கம் சொல்லி கும்பிடுவார்கள் தெரியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) வீடுகள்தோறும் பொங்கல் வைப்பதோடு, அவர்கள் மன மகிழ்ச்சியோடும் கொண்டாடுவார்கள். அண்ணனுக்கு எங்கே தெரியப் போகிறது? ஏழையின்பாடு ஏழைகளுக்குத்தான் தெரியும். அதனால்தான் மக்கள் அப்படிச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டு காலத்திலே உங்களுடைய ஆட்சியில் 100 ரூபாயினுடைய மதிப்பு ஆயிரம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஓய்வின்றி உழைத்தவர் ஓய்வுக்காக இன்றைக்கு ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்" என்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கின்ற அந்தக் கல்லறையிலே ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருக்கும். அந்த இடத்தைப் பெறுவதற்குக்கூட போராடியவர். தான் ஆட்சியிலே இருந்தபோது தமிழக மக்களுடைய இட ஒதுக்கீட்டிற்காகப் போராடிய அந்தத் தலைவன், தன்னுடைய இறுதி நாளிலே, தன்னுடைய இடத்திற்கு தானே போராடி, நீதிமன்றத்திற்குச் சென்று, தனக்கான இடத்தைப் பெற்று வந்த தலைவர், தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவர் மரணம் அடைந்ததற்குப் பிறகு நீதிமன்றமோ, விசாரணைகளோ வரக் கூடாது. நீதிமன்றத்திலே போராட்டங்கள் வரக் கூடாது. ஆனால், போராட்டத்திற்குச் சென்று, போராடி வென்ற தலைவர் எங்களுடைய தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) நான் வேறு எதையும் தவறாகச் சொல்லவில்லை. மறைந்த முதலமைச்சர் அவர்களையும் நான் மதிக்கின்றேன். ஆனால், அவருடைய ** என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2019 ஜனவரி 5]

பிற்பகல் 2–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை இந்த அவையில் பதிய வைக்க வேண்டாம். (குறுக்கீடு) எல்லாம் கூட்டுப் பொறுப்பு தானே. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** நான் அதற்குள் அதிகம் செல்ல விரும்பவில்லை. உங்களுடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் சொன்னேனே தவிர, வேறொன்றுமில்லை. அதற்குள் நான் போக விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாதிரி ** அதைத்தான் நான் மறுத்துச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, பேசுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், வேறு கருத்துகளைப் பற்றிப் பேசுங்கள். கவர்னர் உரையின்மீது வேறு கருத்துகளைச் சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எஸ். ரகுபதி:**

'நாடென்ன செய்தது நமக்கு,
என கேள்விகள் கேட்பது எதற்கு,
நீயென்ன செய்தாய் அதற்கு,
என நினைத்தால் நன்மை உனக்கு'

இது உங்களுடைய பாட்டு. (குறுக்கீடு) நம்முடைய பாட்டு. நான் இருந்தபோது பாடிய பாட்டு. நம்முடைய பாட்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பாட்டு உங்களுக்கும் கொஞ்ச காலம் பொருந்தியிருக்கிறது. நேராக விஷயத்திற்கு வாருங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** அப்படி நினைத்து இன்றைக்கு நீங்கள் இந்த ஆட்சியை நடத்துகிறீர்களா? இந்த ஆட்சி நல்ல நோக்கத்தோடு நடந்து கொண்டிருக்கிறதா என்றால், வெறும் வாய்ச் சவடால் பேசுகிற, வெற்று அறிக்கைகள் கொண்டிருக்கக்கூடிய ஓர் ஆட்சியாகத்தான் இந்த ஆட்சி இன்றைக்கு அமைந்திருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், 2016, நவம்பர் 8 ஆம் தேதிக்கு முன்பிருந்த 1,000 ரூபாய் நோட்டு, 8 ஆம் தேதிக்குப் பிறகு செல்லாத நோட்டு. எனவே, இன்றைக்கு இருக்கக்கூடிய ஆளுநர் அறிக்கையும், நவம்பர் 8 ஆம் தேதிக்குப் பின்னால் இருந்த 1,000 ரூபாய் நோட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ** பற்றி தாங்கள் குறிப்பிட்ட கருத்து நான் சொன்னது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) வழக்கு விசாரணையில் இருக்கின்ற காரணத்தினால். . . (குறுக்கீடு) விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டிருப்பதால் அதுகுறித்து சொன்ன கருத்துகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எஸ். ரகுபதி:** நான் அதைப் பற்றிப் பேசவே இல்லை. நிறுத்தச் சொல்லிவிட்டார்கள். நான் பேசவே இல்லை. நான் அதைப் பற்றிப் பேசவே இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது, விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு, விசாரணை சென்று கொண்டிருக்கிற சூழ்நிலையில், அதுகுறித்து நீங்கள் சொன்ன கருத்துகள், நான் சொன்னது உட்பட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எஸ். ரகுபதி:** நான் அதைப் பற்றி சொல்லவே இல்லையே!

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார். ஏனென்று சொன்னால், வெற்றறிக்கை, வாய்ச் சவடால் என்று சொன்னார்கள். வெற்றி அறிக்கைதான் எங்களுடையதே தவிர, வாய்ச் சவடால் உங்களுடையது மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–40

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாடலைப் பாடினார்கள். எங்களுடைய பாடல் என்று சொன்னார். எங்களுடைய பாடல் என்று சொல்வதிலே எப்போதுமே அன்றும், இன்றும், என்றும் எங்களுக்கு மகிழ்ச்சி உண்டு. ஆனால், இடம் மாறிவிட்டதன் காரணமாக நீங்கள், உங்களுடைய பாடல் இல்லை என்று சொன்னதுதான் எனக்கு வருத்தத்தைத் தரக்கூடியது. ஆனால், இதே அவையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நீங்கள் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்தீர்கள்.

"கல்லில் வீடு கட்டித் தந்தது எங்கள் கைகளே"
கருணை தீபம் ஏற்றி வைத்தது எங்கள் நெஞ்சமே"

அந்த அன்னையே புரட்சித் தலைவி என்று நீங்கள் பாடி இருக்கின்றீர்கள். அதுவும் record–ல் இருக்கின்றது. அதனைக் கொஞ்சம் எடுத்துப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, நீங்கள் அடுத்த விஷயத்திற்குச் செல்லுங்கள்.

[2019 ஜனவரி 5

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. அந்தப் பாட்டைச் சொல்லிவிட்டு அடுத்து நான் என்ன சொன்னேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. அதைக் கேட்டிருந்தீர்கள் என்றால் அது சரியாக வந்திருக்கும். சரி, விட்டுவிடுங்கள். அடுத்து, நான் கஜா புயல் தாக்குதல் குறித்த விஷயத்திற்கு வந்துவிடுகிறேன். கஜா புயல் தாக்குதலுக்கு இந்த அரசாங்கம் சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சொன்னால், அதற்கு நீங்கள் ஏற்கெனவே பதிலைச் சொல்லிவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கஜா புயல் சம்பந்தமாக நேற்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியான விளக்கத்தைக் கொடுத்துவிட்டார்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** இன்னும் சிலவற்றை நான் சொல்கின்றேன். புயல் பாதிப்பிற்குப் பிறகு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கஜா புயல் பற்றி நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழு விளக்கத்தையும் தெரிவித்துள்ளார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசியிருக்கின்றார்கள். இதில் நீங்கள் இன்னும் என்ன பேசப் போகின்றீர்கள்? சரி, பேசுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** அவர்கள் கொடுத்த விளக்கங்களிலிருந்துதான் நான் பேசப் போகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மின் இணைப்பு அனைத்தும் கொடுத்துவிட்டதாகக் கூறியிருக்கின்றார்கள். அதைப்பற்றிதான் நான் இப்போது பேசப் போகின்றேன். கஜா புயல் தாக்கிய பிறகு, இந்த அரசு அதற்குப் பிறகு எடுத்த நடவடிக்கைகள் போதுமானதாக, மக்களை திருப்திப்படுத்தக்கூடியதாக இல்லை என்பதற்கு ஒரே ஓர் உதாரணம், இன்றைக்கு பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டமாக இருக்கட்டும், புதுக்கோட்டை மாவட்டமாக இருக்கட்டும், மற்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய கருகிய அந்தப் பயிர்களைக் காப்பாற்றுவதற்குக்கூட விவசாயிகளுடைய மோட்டாருக்கு மின்சாரம் தராத ஆட்சி, இந்த ஆட்சி. 50 நாட்கள் ஆகிவிட்டன. எந்தவொரு விவசாய மோட்டாருக்கும் மின் இணைப்பு தரப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கஜா புயலைப் பொறுத்தவரையில், இதுகாறும் உலகத்திலேயே இல்லாத அளவிற்கு ஒரு பெரும் சேதாரம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு ஒரு பெரிய புயலாக வந்திருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் மட்டும்தான் இந்த அளவுக்கு ஒரு குறையாகச் சொல்லியிருக்கின்றார்கள். இதுவரைக்கும் மின்சார ஊழியர்கள் செய்த பணியை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைவரும் பாராட்டியிருக்கின்றார்கள். நீங்கள் இதை அரசியல் காரணங்களுக்காக சொல்கின்றீர்கள். (குறுக்கீடு) பொறுங்கள், நான் சொல்லிவிடுகின்றேன். (குறுக்கீடு) உறுப்பினர், அமருங்கள். புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 6 இலட்சம் கனெக்ஷன்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 6 இலட்சம் கனெக்ஷன்களில் புதுக்கோட்டை நகரத்திற்கு 3 நாட்களில் கொடுக்கப்பட்டது, மருத்துவமனைக்கு 3 நாட்களில் கொடுக்கப்பட்டது. அறந்தாங்கி நகரத்திற்கு ஒரு வார காலத்திற்குள் வழங்கப்பட்டது. கிராமப் பகுதியைப் பொறுத்தவரையில், 15 நாட்களில் 70 சதவிகித கனெக்ஷன்கள் கொடுக்கப்பட்டன. அதிகமாகப் பாதிக்கப்பட்டது ஆலங்குடி மற்றும் கந்தர்வக்கோட்டை பகுதிகள்தான். அங்கே வயல்வெளிகள் இருந்த காரணத்தினால், மின் கம்பங்களை புதியதாக நிறுவுவதற்கு சிரமப்பட்டார்கள். ஒருவேளை நீங்கள் அங்கே இருந்துகொண்டு பார்க்காமல் இருந்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். அவர்கள் பட்ட கஷ்டத்தையெல்லாம் நீங்கள் பார்க்காமல் இருந்திருப்பீர்கள். அதனால்தான் நீங்கள் இதனை ஒரு குறையாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். 28 ஆயிரம் பேர் பணியாற்றியுள்ளார்கள். அவர்களுடைய அந்தப் பணியை இன்று உலகமே பாராட்டுகின்றது. தமிழகத்திலே மின்சார வாரியம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சிறப்பாகப் பணியாற்றியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வயல்வெளியில் மின் கம்பங்களை நடுவது எவ்வளவு சிரமமாக இருக்கின்றது என்றும், நாங்கள் வேண்டுமென்றே இருக்கவில்லை என்றும் தெளிவாகச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 3 இலட்சத்து 31 ஆயிரத்து 772 மின் கம்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், இதைவிட வேகமாகச் செய்கின்ற ஆட்சி உலகத்திலேயே இல்லை என்றுதான் நான் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை யார் வேண்டுமானாலும் சவாலாக எடுத்துக்கொள்ளலாம்.

[திரு. பி. தங்கமணி] [2019 ஜனவரி 5

ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட உங்களுடைய பகுதியில் 5 ஆயிரம் பேருக்குமேல் மின்சாரப் பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரப் பணியாளர்களை ஒவ்வொரு மண்டபமாக தங்க வைத்து, அவர்களுக்கு சாப்பாடு எல்லாம் ஏற்பாடு செய்து, அங்கே அடிபட்டவர்களைக்கூட உடனடியாக அங்கேயிருந்து திருச்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முதலுதவி செய்தார். அதன்பின், மாண்புமிகு முதலமைச்சரின் ஆணையை ஏற்று, நாங்கள் எல்லோரும் சென்றோம். ஆக, இந்த அளவுக்கு கஷ்டப்பட்டு செய்து கொண்டிருந்தார்கள். விவசாயத்திற்கு மின் இணைப்பு எல்லாம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லவில்லை. இன்னும் 6 ஆயிரம் மின் இணைப்புகள் தர வேண்டியுள்ளது. இன்னும் ஒரு வார காலத்திற்குள் அந்தப் பணிகள் முடிந்துவிடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த ஆட்சி வாய்ச் சவடால் ஆட்சி என்று சொன்னீர்கள். நான் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்கின்றேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றாத திட்டங்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அண்ணன் அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றிய 2, 3 உதாரணங்களை மட்டும் இங்கு நான் சொல்கின்றேன். அதாவது காவேரிப் பிரச்சினை எவ்வளவு பெரிய பிரச்சினை என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்ற பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கண்டது மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல், நீங்கள் 17 ஆண்டுகாலம் மத்தியில் ஆட்சியில் இருந்தீர்கள். AIIMS மருத்துவமனையைக் கொண்டு வந்தீர்களா? இந்த ஆட்சியைப் பற்றி குறை சொல்வதற்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கின்றது? (மேசையைத் தட்டும் ஒலி)

ஜல்லிக்கட்டைப் பொறுத்தவரையில், தமிழகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஜல்லிக்கட்டு இன்னும் ஒரு வாரத்தில் நடக்க இருக்கின்றது. அந்த ஜல்லிக்கட்டைப் பெற்றுத் தந்த ஆட்சி எந்த ஆட்சி? இந்த ஆட்சி சவடால் ஆட்சியா, இந்த ஆட்சி சாதனை இல்லாத ஆட்சியா? தயவுசெய்து நீங்கள் சொல்லுங்கள்.



2019 ஜனவரி 5]

பிற்பகல் 2–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தங்கள் கருத்துகளைச் சொன்னார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, 33 நாட்கள் முழுமையாக அங்கே களத்திலேயே நின்று, முழுமையாகப் பணியாற்றினேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருமயம் சட்டமன்றத் தொகுதியில்தான் 100 சதவிகித மின்சாரம் முதலில் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில்தான் 100 சதவிகிதம் மின்சாரம் வழங்கப்பட்டது. Agricultural connection–ஐப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னபடி, திருமயம் தொகுதியில் 100 சதவிகிதம் முழுமையாக இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று, 65,726 agricultural connections–ல் 6,000 connections தவிர, ஒட்டுமொத்தமாக 80 சதவிகிதத்திற்குமேல் மின்சாரம் வழங்கப்பட்டது. History–ல் months together என்று சொல்கிறார்கள். இரண்டு, மூன்று மாதங்கள் ஆகக்கூடிய நிலையில், தமிழ்நாட்டில் உலகமே வியக்கக்கூடிய அளவிற்கு மின்சாரத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றியதால் 4,022 கிராமங்களுக்கு domestic connections கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல, agricultural connections 6,000 connections–ஐ தவிர ஒட்டுமொத்தமாக, முழுமையாக மின்சாரத்தைக் கொடுத்த ஒரே ஆட்சி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட சிறப்பாக எப்படிச் செயல்பட முடியும்? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு வேதனைகளைப் பதிவு செய்கின்றபொழுது, நாங்களும் அந்த வேதனைகளில் பங்கெடுத்துக்கொள்கிறோம். ஆனால், செய்யப்பட்ட பணிகளில் எள்ளளவு, எள் முனையளவுகூடத் தொய்வு இல்லை, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோர் வந்தார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பலமுறை வந்தார்கள். இரவு 1–00 மணிக்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வருகை தந்தார். அதற்காக,

மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. அங்கே 100 சதவிகித அளவிற்கு களப் பணி மிகச் சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு சிறப்பாக அங்கே களத்தில் பணியாற்றினோம் என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கே தெரியும். 100 சதவிகிதம் அங்கே களப் பணியைச் செய்திருக்கிறோம். கஜா புயலின்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் செய்யப்பட்ட பணிகளை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறை சொல்ல வேண்டாம். மனசாட்சியுள்ள யாரும் குறை சொல்ல மாட்டார்கள். எல்லா இடங்களிலும் பொது மக்கள் பாராட்டுகிறார்கள். கண்ணுக்கு முன்னால் நடந்ததைப் பார்த்து, 'இவ்வளவு விரைவாக எப்படி உங்களால் மின்சாரம் கொடுக்க முடிந்தது' என்று அனைத்து பொது மக்களும் கேட்கிறார்கள். புயலடித்த மூன்று நாட்களில் புயல் தாக்கிய சுவடே தெரியாமல் இயல்பு நிலைக்கு முதலில் திரும்பியது புதுக்கோட்டை மாவட்டம்தான். ஆகையால், 170 கிலோ மீட்டர் வேகத்தில் தாக்கிய புயலால் பாதிக்கப்பட்ட அந்த விஷயத்தை மூன்று நாட்கள், ஐந்து நாட்களில் புயலின் பாதிப்பே இல்லாத அளவுக்கு இயல்பு வாழ்க்கைக்குத் திருப்பிய ஆட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலைப் பொறுத்தவரையில், ஒரு மாவட்டத்தை அல்ல, எட்டு மாவட்டங்களைப் படுசூரணமாக்கிவிட்டது. எந்த ஆட்சியாக இருந்தாலும், அதனை ஒரே நாளிலோ, ஒரே வாரத்திலோ பழைய நிலைக்குக் கொண்டு வர முடியாது. இன்னும் ஒரு வருட காலத்திற்கும் மேல்கூட ஆகலாம். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எதிலும் தெளிவாகப் பேசக்கூடியவர். அவர் செய்த பணியைப் பாராட்டிச் சொன்னார். அதனைப் பத்திரிகையிலே நாங்களும் பார்த்தோம். அதை நான் குறை சொல்லவில்லை. ஆனால், அதோடு நின்றிருந்தால், பிரச்சினையில்லை. அவர் வேறு எதற்காகவோ இழுத்து வந்து சொன்னால், நாங்களும் பதில் சொல்ல வேண்டிய



நிலை ஏற்படுகிறது. அது அவையினுடைய விவாதப் போக்கையே மாற்றிவிடும். அவர் காவேரியை பற்றிப் பேசினார். அதனை நான் விட்டுவிடுகிறேன். ஆனால், திரு. தங்கமணியினுடைய வாயிலிருந்து, 'உங்களுக்கு என்ன தகுதியிருக்கிறது' என்று கேட்டாரே! அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, நான் எப்பொழுதுமே நிதானம் தவறிப் பேசுவது கிடையாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொன்னார்? இந்த ஆட்சி வெற்றுக் காகிதம், வாய்ச் சவடால் ஆட்சி என்று சொன்னார். நாங்கள் செய்த சாதனைகளைச் சொன்னேன். அவர்கள் 17 ஆண்டு காலம் மத்திய ஆட்சியில் அங்கம் வகித்தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள், அதைப் பற்றிக் கேட்பதற்கு அவர்களுக்குத் தகுதியில்லை என்றுதான் நான் சொன்னேன். அவர்களுக்கு ** என்று நான் சொல்லவில்லை. நான் நல்ல வார்த்தையைத்தான் சொல்லியிருக்கிறேன். ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். ஆனால், அவர்கள் 17 ஆண்டு காலம் மத்திய ஆட்சியில் அங்கம் வகித்தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள்? நாங்கள் செய்த சாதனைகளைத்தான் சொன்னேன். அவர் அவ்வாறு பேசியதற்காகத்தான் நான் சொன்னேனேயொழிய, அவர்களுடைய ஆட்சியை, அவர்களைப் பற்றி குறைசொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அவர் சொன்ன வார்த்தைக்கு, நான் அந்த வார்த்தையைச் சொல்ல வேண்டியதாயிற்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இல்லை, வேண்டாம், விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி, நீங்கள் பேசி முடியுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எஸ். ரகுபதி:** *நான் இப்பொழுதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பேசி முடியுங்கள்.*

**திரு. எஸ். ரகுபதி:** *நான் இப்பொழுதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். அதற்குள் உரையை முடியுங்கள் என்றால் எப்படி?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் ஆரம்பித்தது சரி. நான் உங்களைப் பேசி முடியுங்கள் என்கிறேன். சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. எஸ். ரகுபதி:** *நான் உரையை சீக்கிரம் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 33 நாட்கள் நாங்கள் அங்கே இருந்தோம் என்று சொன்னார்கள். நாங்கள் பணிகளைப் பற்றியே சொல்லவில்லை. ஒன்றேயொன்றைச் சொல்லிவிடுகிறேன், கேளுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், திரு. ரகுபதி, நேற்று காலையிலிருந்து ஆரம்பித்து, இரண்டு நாட்கள் முழுக்க இந்த அவையில் கஜா புயலைப் பற்றி விரிவாக, விளக்கமாக எல்லோரும் பேசியாகிவிட்டது. நீங்களும் அதுபற்றி கேட்டுவிட்டீர்கள். இந்தப் பக்கத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும், தெளிவான விளக்கங்களைச் சொல்லிவிட்டார்கள். மேற்கொண்டு அதைப்பற்றியே திரும்பத் திரும்பப் பேசுவதால், உங்களுக்கு புதிதாக பதில் ஒன்றும் கிடைக்காது. ஏற்கெனவே அவர்கள் சொன்ன பதிலைச் சொல்வார்கள். நீங்களும் அதையே சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். ஆளுநர் உரையில் மற்ற விஷயங்கள் இருக்கின்றன. அதுபற்றியெல்லாம் பேசுங்கள். அந்தப்பொருள் பற்றியே பேசிக் கொண்டிருந்தால் நேரமும், காலமும் இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. எஸ். ரகுபதி:** *நான் ஒன்றேயொன்றைச் சொல்லிவிடுகிறேன்.*

*பிற்பகல் 2—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் உங்களுக்கு 15 நிமிடங்கள் பேச அனுமதி அளிக்கிறேன்.*





**திரு. எஸ். ரகுபதி:** *சரி, 15 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அந்த 15 நிமிடங்களில் ஆளுநர் உரைமீது தெளிவாக விளக்கங்களைக் கேட்டு அமரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயல் பற்றி நேற்றும் இன்றும் நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் நல்ல விளக்கங்களைக் கொடுத்துவிட்டார்கள். கஜா புயல் கரை கடந்து அரபிக் கடலுக்குப் போய், இப்போது சோமாலியாவுக்குப் போய்விட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர், நீங்களும் கரையைக் கடந்து ஆளுநர் உரைமீது உரையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

**திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கேள்வி. அங்கு ஏன் இன்று வரை போராட்டம் நடக்கிறது? புதுக்கோட்டை மாவட்டத்திலே போராட்டம் நடக்கிறது. (குறுக்கீடு) திரும்பத் திரும்பப் பேசுகிறேன் என்கிறீர்கள்; பணிகள் முடிந்து விட்டன என்று சொல்வதால் பேசுகிறேன். ஆனால், அங்கே இருக்கின்ற பொது மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. இன்று எத்தனை வழக்குகள் பொது மக்கள்மீது போடப்பட்டிருக்கின்றன?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி. . . (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 6,000 விவசாய மின் இணைப்புகள் கொடுக்கப்படவில்லை என்று நாங்களே ஒத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். நான் இன்றைய புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள், நான் பேசிவிடுகிறேன். மின் இணைப்பு கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம்.*

[திரு. பி. தங்கமணி] [2019 ஜனவரி 5

ஆனால், இதில் உள்ள ஓர் உண்மையை நீங்கள் கேட்டதால், இங்கு அவையில் சொல்ல வேண்டியிருக்கிறது. எங்களிடம் அதற்கு ஆதாரம் இருக்கின்றது. அங்கு மறியல் செய்கிறவர்கள் யார்? மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, மறியல் செய்பவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இங்கு அவையில் சொன்னால் நன்றாக இருக்காது. அங்கு நடைபெறும் அத்துணை ஆர்ப்பாட்டங்களையும் யார் முன் நின்று தலைமை தாங்குகிறார்கள் என்பதும், எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தலைமை தாங்குகிறார்கள் என்பதற்கெல்லாம் ஆதாரம் எங்களிடம் இருக்கிறது. ஆகையால், இந்த அரசுக்கு எப்படியாவது கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கிறார்கள். புயலைவிட வேகமாக மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் அரசு நிவாரணப் பணிகளைச் செய்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிலர்தான் அங்கு போராட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவாரணப் பணியில் 5,000 பணியாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள் என்று சொன்னார். அந்த 5,000 பேரும் ஒரு வாரம் மட்டும்தான் அந்தப் பகுதியில் இருந்தார்கள். அதன் பிறகு அடுத்த தொகுதிகளுக்குச் செல்வதாகச் சொல்லி விராலிமலைத் தொகுதிக்கு மட்டும் அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த ஒரு தொகுதியில் மட்டும்தான் செய்தார்கள். மற்ற தொகுதிகளுக்கு பணியாளர்கள் கொண்டு செல்லப்படவில்லை. அங்கிருக்கும் பொதுமக்கள் இன்று வரை மறியல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது நான் கொஞ்சம் பொறுமையாகவே இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.



2019 ஜனவரி 5] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட முறையில் விராலிமலை தொகுதிக்கு மட்டும் நிவாரணப் பணிகள் செய்யப்பட்டன என்று சொல்வது மிகப் பெரிய தவறு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விராலிமலைக்கு மட்டும் பணிகள் செய்யப்பட்டன என்ற தவறான தகவலை அவையில் தயவுசெய்து பதிவு செய்ய வேண்டாம்.

**திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன், உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,200 அலுவலர்கள் மட்டுமல்ல. மின்சாரத் துறையைப் பற்றிப் பேச வேண்டுமென்றால் நான் ஒரு நாள் முழுவதும் பேச வேண்டும். 5,200 பணியாளர்கள் மட்டுமல்ல, S.E. level–ல், D.E. level–ல். C.E. level–ல் 200 Officers அங்கு பணியாற்றினர். இன்னொரு விஷயத்தைச் சொல்கிறேன். அங்கு எவ்வளவு poles தேவைப்பட்டன, தமிழ்நாட்டில் இருந்த poles தீர்ந்துபோய், ஆந்திராவிலேயிருந்து poles முழுவதும் அனுப்பப்பட்டு, தெலுங்கானாவிலிருந்து poles அனுப்பப்பட்டு, உத்தரப் பிரதேசத்திலிருந்தும் முழுவதுமாக அனுப்பப்பட்டு, பிறகு மத்தியப் பிரதேசத்திலிருந்து Track–லும், லாரியிலும் daily அதிக poles கொண்டு வரப்பட்டன. அதிக எண்ணிக்கையில் Transformers மற்றும் Insulators வந்தன. 620 கிலோ மீட்டர் நீளமுள்ள மின் கம்பிகள் காணாமல்போய், அவை அனைத்தையும் ஒட்டுமொத்த மாவட்டத்திற்கும் முழுமையாகச் செய்யப்பட்டு, மின்சாரத் துறையினர் வரலாற்றுச் சிறப்புமிக்க பணியை பத்து நாட்களில் செய்தார்கள். இந்தப் பத்து நாட்களில் domestic connections–ஐ முடித்துவிட்டு, பக்கத்து மாவட்டங்களுக்கு பணியாளர்கள் சென்றிருக்கிறார்கள் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். 10 நாட்களில் domestic connections–ஐ 4,008 கிராமங்களில் முடித்துவிட்டோம். நீங்கள் இப்போது agricultural connections–ஐ கேட்கிறீர்கள். திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இன்னும் domestic connections கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதால் இங்குள்ள பணியாளர்களை அந்த மாவட்டங்களுக்கு அனுப்பினார்கள். இப்போது agricultural connections–ஐயும் முடித்துவிட்டோம்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2019 ஜனவரி 5*

தயவுசெய்து நான் அன்போடு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் அங்கு களத்தில் பணியாற்றினோம். நீங்கள் விராலிமலை பற்றி சொல்கிறீர்கள். நான் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். நாங்கள் களத்தில் நின்று பணியாற்றிக் கொண்டிருந்தோம். தாங்கள் அப்போது என்ன விழா கொண்டாடினீர்கள், எப்போது கொண்டாடினீர்கள் என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டாமென்று நினைத்தேன். ஒட்டுமொத்தமாக ஓர் அரசு, ஒரு மாவட்டத்திலுள்ள மக்களின்மீது அக்கறை கொண்டு முழுமையாக நாங்கள் களப் பணி ஆற்றிக் கொண்டிருந்தபோது, தாங்கள் சென்னையில் விழா எடுத்துக் கொண்டிருந்தீர்கள். தயவுசெய்து அங்கு பணியாற்றிய உள்ளாட்சித் துறை பணியாளர்களையும், மின்சாரத் துறை பணியாளர்களையும், சுகாதாரத் துறை பணியாளர்களையும் பாராட்டுங்கள். நான் மற்ற துறைகளைப் பாராட்டிக் கொண்டிருக்கிறேன், சுகாதாரத் துறையையும் பாராட்டுகிறேன். சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை, any disaster will be followed by communicable diseases. உலகத்திலே தவிர்க்க முடியாத விஷயம். சென்னை பெருவெள்ளத்தின்போதும் சரி, இப்போது கஜா புயலின்போதும் சரி, ஒரு சிறு நோய்த் தொற்றுகூட கிடையாது, there is no outbreak. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இதுபோன்று கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) பக்கத்து மாநிலமான கேரளாவில்கூட outbreak ஏற்பட்டது. ஆனால், சுகாதாரத் துறை பணியாளர்கள் களப் பணியாற்றியதன் விளைவு, there is no outbreak. மிகப் பெரிய இயற்கைச் சீரழிவிற்குப் பின்னால், மிகப் பெரிய இயற்கைப் பேரிடர்களுக்குப் பின்னால் ஒரு சிறு நோய்த் தொற்று இல்லாமல் செய்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான நமது முதலமைச்சர் அவர்களின் அரசு என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். தனிப்பட்ட முறையில், தொகுதியை பிரித்துப் பேச வேண்டாம். ஒட்டுமொத்த மாவட்டம் முழுவதும் நான் பணியாற்றினேன் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



*2019 ஜனவரி 5*]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். பணியாளர்கள் திரும்பிச் சென்றது குறித்துப் பேசினார்கள். 28,000 பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றினார்கள். கஜா புயலால் அதிகமாக நான்கு மாவட்டங்கள்தான் பாதிக்கப்பட்டன. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம். இந்த மாவட்டங்களில்தான் கூடுதல் கவனம் செலுத்தினோம். 28,000 பேர் பணியாற்றினார்கள். இதர மாவட்ட பணியாளர்களும், எங்களுடைய பணியாளர்களும் சேர்த்து மொத்தம் 23,650 பேர் தொடர்ந்து பணியாற்றினார்கள்.

பிற்பகல் 2–55

ஆகவே, பணியாளர்களைப் பொறுத்தளவிற்கு, ஏதாவது ஒரு சில பேர் பணிகள் முடிந்து வேறு மாவட்டத்திற்கு shift ஆகியிருப்பார்கள், மின் வேலையைச் செய்வது மிகச் சிரமம். அதற்குப் பிறகும், மழை தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தது. அப்போது யாராவது ஒரு சிலபேர் போயிருப்பார்கள். ஆனால், வரும்போது கூடுதலாகத்தான் வந்தார்கள். அதற்குப் பிறகு கூடுதலாக வந்தார்கள். அதுமட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, கிட்டத்தட்ட 7 ஆயிரம் பேருக்கு incentive கொடுத்தார்கள். வெளியிலிருந்து வந்தவர்களுக்கெல்லாம் ஊக்கத்தொகை ரூ.1,000/– கொடுத்தார்கள். அதேபோல், மின்சாரத் துறையில் கூடுதலாகச் சம்பளம் கொடுத்தார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு மண்டபத்திலும் உணவு கொடுக்கப்பட்டது. நானும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அவர்களுடன்தான் சாப்பிட்டோம். நல்ல வகையான உணவு கொடுத்தோம். இப்படி பல்வேறு வகைகளில் பார்த்துக்கொண்டார்கள். மழை வரும்போது, நிறைய இடங்களில் அவர்களுக்குத் தேவையான போர்வையெல்லாம் arrange செய்து கொடுத்து, முழுமையாக இருந்து பணியாற்றினார்கள், அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றினார்கள். அது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, கஜா புயலைப் பொறுத்தளவிற்கு, அம்மாவினுடைய அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க பணியாற்றியது மனசாட்சியுடைய அங்கிருக்கின்ற அத்தனை மக்களுக்கும் தெரியும். கடைசியில் எங்களைப் பாராட்டினார்கள். நாங்கள் போகும்போதுகூட, திரும்பவும் நீங்கள் எப்பொழுது வருவீர்கள் என்று கேட்டார்கள்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 ஜனவரி 5

அந்த அளவிற்கு நாங்கள் அன்போடு பணியாற்றினோம், அந்த அளவிற்கு அவர்களும் அன்போடு இருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயல் பாதிக்கப்பட்டபோது எங்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லையென்று சொன்னாலும்கூட, களத்திலே தினசரி நிவாரணப் பணியில் இருந்தவர்கள் நாங்கள். எங்களுக்கும் சேலத்தில் நடந்த function, மற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் தெரியும். ஆனால், களப்பணியாற்ற வேண்டியவர்கள் நாங்கள். நாங்கள் களத்திலிருந்து பணியாற்றியிருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்றிருக்கிறோம். கிராமத்திலுள்ள மக்களைச் சந்தித்திருக்கிறோம். ஆனால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், 'நீங்கள் எங்கு நடத்தினீர்கள், எங்கு, என்ன விழா நடத்தினீர்கள் என்பது தெரியும்' என்று சொன்னால், அவர் எங்கெங்கு போனார் என்பதும் தெரியும். ஆனால், நாங்கள் மக்களைப் போய் சந்தித்தோம், அவர்கள் சொன்ன குறைகளைத்தான் சொன்னோம். இன்னும் சொல்லப்போனால், கணக்கெடுப்பில் எவ்வளவு தவறுகள் நடந்திருக்கின்றன? பாதிபேர் வீடு இழந்தவர்கள், பாதிபேர் வீடு இழக்காதவர்கள். அவர்களையெல்லாம் கலந்து, கலந்து கொடுத்திருக்கிறார்கள். நிவாரணப் பொருட்களைப் பொறுத்தவரைக்கும் நீங்கள் என்னுடைய திருமயம் தாலுகாவில்—அவர் சொன்னார், தனிப்பட்ட தொகுதி என்று சொன்னார். திருமயம் தொகுதியில்—3 நாட்களில் விராச்சிலையில் வீட்டு வசதி வாரியத் தலைவரின் ஊருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. வேறு எந்த ஊருக்கும் போர்க்கால அடிப்படையில் கொடுக்கவில்லை. அதைப்போல 3 நாட்களில் அவருடைய crusher–க்கு மட்டும் போர்க்கால அடிப்படையில் கொடுக்கப்பட்டது. புதுக்கோட்டையில் டவுனில் என்னுடைய வீடு. என்னுடைய வீட்டிற்கு 10 நாட்கள் கழித்துத்தான் மின்சாரம் வந்தது. யாரை வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளலாம். என்னுடைய வீட்டிலிருந்து 7 வீடுகள் தள்ளி, நகர்மன்றத்தின் முன்னாள் தலைவருடைய கடை மற்றும் வீடு உள்ளது. அங்கு 6 நாட்களில் மின்சாரம் வந்துவிட்டது. ஆனால், எனக்கு 10 நாட்கள் கழித்துத்தான் மின்சாரம் வந்தது. அதனால், உடனேயே போர்க்கால நடவடிக்கை எடுத்தோம்,



2019 ஜனவரி 5] [திரு. எஸ். ரகுபதி]

அதனால் மின்சாரம் வந்துவிட்டது என்றெல்லாம் சொல்லாதீர்கள். விராச்சிலையில் உங்களுடைய வீட்டு வசதி வாரிய தலைவரின் வீடு, crusher ஆகியவற்றிற்குத்தான் 3 நாட்களில் மின்சாரம் வந்தது. மற்ற இடங்களுக்கெல்லாம் 5, 6 நாட்கள் கழித்துத்தான் மின்சாரம் வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இன்னும் சாப்பிடவில்லையென்று நினைக்கிறேன். அவர் அதிக வேகமாக இருக்கிறார். (சிரிப்பு) மின்சாரத்தைப் பொறுத்தவரை அண்ணா தி.மு.க., தி.மு.க. என்று எப்போதுமே பார்த்து வராது. ஒரு line கொடுத்தால் வரிசையாகத்தான் கொடுப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பக்கம் வீட்டு வசதி வாரியத் தலைவருக்கு, இந்தப் பக்கம் நகர்மன்றத் தலைவருக்கு கொடுத்து, நடுவிலே உங்களுக்குக் கொடுக்கவில்லையென்று சொன்னது தவறான கருத்து. ஒரு line–ல் ஒரு transformer–ல் கொடுத்தால் அந்த transformer–ல் எவ்வளவு connections இருக்கிறதோ அவ்வளவு வீட்டு connections–க்கும் கொடுப்பார்கள். இப்போது நீங்கள் கேட்ட கேள்விபோல், மன்னார்குடியிலும் அ.தி.மு.க. வினருக்குக் கொடுத்துவிட்டீர்கள், தி.மு.க.–வினருக்குக் கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். அவர்களிடமும் இதைத்தான் சொன்னேன். அண்ணா தி.மு.க., தி.மு.க. என்று பார்த்து current வராது. Current எல்லோருக்கும்தான் வரும் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒவ்வொரு transformer–லும் இணைப்பு கொடுக்கின்றபோதுதான் அந்தந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வரும். உங்களுடைய transformer–க்கு முன்னால், வீட்டு வசதி வாரியத் தலைவருக்குரியதாக அந்த transformer இருந்திருக்கலாம், அதேபோல நகர்மன்றத் தலைவருக்குரியதாக இருந்திருக்கலாம். ஆக, உங்கள் வீட்டிற்கு மட்டும் வேண்டுமென்று செய்யவில்லை என்று தயவுசெய்து நீங்கள் தவறாக நினைக்காதீர்கள். நாங்கள் அப்படிப் பார்க்கவேயில்லை. அனைத்து மக்களையும் ஒரே மாதிரியாகத்தான் பார்த்து, அனைவருக்கும் ஒரே மாதிரியாகத்தான் பணியாற்றியிருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 5

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சேலம் நிகழ்ச்சியைப் பற்றிப் பேசினார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும், அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ஏற்கெனவே schedule கொடுத்திருந்தார்கள். ஆனால், நாங்கள் நாமக்கல்லிற்கு ஒரு நிகழ்ச்சிக்கு வந்தோம். நாங்கள் பையையோ அல்லது துணிகளையோ எடுத்து வரவில்லை. உடனடியாக என்னையும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் அப்படியே போகச் சொல்லி team போட்டு அனுப்பினார்கள். அதுமட்டுமல்ல, புயல் வருவதற்கு முன்னால் 5 meetings நடத்தினார்கள். நாமெல்லாம்கூட 'என்னப்பா, புயல் வரும், வருமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்' என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தோம். 5 meetings–லும் தொடர்ந்து அனைத்து அதிகாரிகளையும் வைத்து பேசினோம். முன்பே உயர் அதிகாரிகளை, I.A.S. அதிகாரிகளை monitoring officers ஆக போட்டோம். எவ்வளவு கடுமையான புயல் என்பதை நாங்கள் நேரடியாகப் பார்த்தோம், நீங்களும் பார்த்தீர்கள். அவ்வளவு கடுமையாக புயல் அடித்துள்ளது. சுனாமிகூட இந்த அளவிற்கு அடிக்கவில்லை. அவ்வளவு கடுமையாக அந்தப் புயல் வரும்பொழுது ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவர்போல் எந்த முதலமைச்சரும் இவ்வளவு அதிகமான அளவில் நிவாரணத்தைக் கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு அதிகமாக ஒவ்வொரு தொகுப்பிற்கும் நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வோர் இடத்திலும் அதிகமாக நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதைப் பொறுத்தளவிற்கு ஆரம்பத்திலிருந்து, இதுவரை அரசாங்கம் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய குறைகளைச் சொல்லுங்கள், அரசாங்கம் உடனடியாக அவற்றை நிவர்த்தி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது விவரம் தெரிந்த அத்துணைப் பேருக்கும் தெரியும். மின் வாரியத்தைப் பொறுத்தவரை ஒட்டுமொத்தமாக 36,814 Domestic Poles–ல் AGL connection–ல் 32,346 Poles– சரிசெய்யப்பட்டன. அடுத்து HT connection 10,200 முடித்து, 39 Sub Station பணி முடித்து, LT connection 69,163 பணி என அத்தனை பணிகளும் முடிக்கப்பட்டன. கிட்டத்தட்ட நான் எம்.பி.பி.எஸ். என்பதை மறந்து மின்சாரத் துறையில் உள்ள சப்ஜெக்ட்டில் அத்துப்படி ஆகிற அளவிற்கு, மின்சாரத் துறைப் பணியாளர்களுடன், அதாவது Lineman, Foreman வரைக்கும் அவர்களுடன் கூடவே இருந்து, களத்தில் நின்று நாங்கள் பணியாற்றினோம். நீங்கள் அங்கு இல்லை. ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினரை, mortuary–க்கு போனால் நான் அங்கு பார்ப்பேன். மத்தியக் குழு வந்த அன்றைக்குப் பார்த்தேன். எங்கு போனாலும் பார்த்தேன். திருமயம் சட்டமன்ற உறுப்பினரை நான் பார்க்கவில்லை. நீங்கள் சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்றத் தொகுதிக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேதான் 5 கிலோ அரிசி ஒட்டுமொத்தமாகக் கொடுக்கப்பட்டது. உங்கள் சார்பில் எந்த நிவாரணமும் தாங்கள் இருக்கும் திருமயம் சட்டமன்றத் தொகுதியில் கொடுக்கவில்லை. தனிப்பட்ட முறையில் என்னுடைய crusher–க்குக் கொடுக்கப்பட்டது என்றால், crusher, சிப்காட்டின் பின்புறம் உள்ளது. H.T. connection and L.T. connection என்று சொல்லக்கூடிய அந்த லைன்படி வருகிறது. நடுவில் connection கொடுக்க முடியாது. சாதாரணமாக genset–ல் ஒரு back feeding கொடுத்த காரணத்தினால், மிகப் பெரிய fire accident நடந்தது.

உங்களுடைய தனிப்பட்ட கோப தாபங்களை நாம் களத்தில் சந்தித்துக்கொள்ளலாம். தேர்தல் வருகிறது. நீங்கள் சொல்கிற கருத்து சரியான கருத்தா, நான் சொல்கிற கருத்து சரியான கருத்தா என்பது புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்கோட்டையில் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய 12½ இலட்சம் மக்களுக்கும், களத்தில் நின்று யார் பணியாற்றினார்கள், எந்த இயக்கம் பணியாற்றியது, கஷ்டத்தில்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜனவரி 5

யார் அந்த மக்களுக்குத் துணையாக இருந்தார்கள் என்பது தெரியும்; நாட்டு மக்களுக்குத் தெரியும். நீங்கள் சொல்லக்கூடிய தனிப்பட்ட சில குற்றச்சாட்டுகளினால் எனக்கு எதுவும் ஆகாது. இன்னும்கூட நாசூக்காகத்தான், நீங்கள் கலந்துகொண்ட விழாவினைப் பற்றி நான் சொன்னேன். இப்போதுகூட என்னால் அதனை பகிரங்கமாகச் சொல்ல முடியும்; அது வேண்டியதில்லை. நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி, நீங்கள் 2–30 மணிக்கு உங்கள் உரையை ஆரம்பித்தீர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** நான் ஒன்றும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒன்றும் பேசவில்லை என்று கூறுவதை, யாராவது அவைக் குறிப்பினை எடுத்துப் பார்த்தால் தெரியும். 2–30 மணிக்கு நீங்கள் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது மணி என்னவாகிறது என்பதைப் பாருங்கள். இதற்கு மேலேயும் நான் விவாதிக்க விரும்பவில்லை. உங்களுக்கு 5 நிமிடங்கள் தருகிறேன். அதற்குள் ஆளுநர் உரையின்மீது உரையாற்றி முடியுங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. எஸ். ரகுபதி:** என்மீது ஒரு குற்றச்சாட்டு. திருமயம் தொகுதியைப் பொறுத்தவரையில் நான் வந்தேனா, இல்லையா என்பது என் தொகுதியில் உள்ள மக்களுக்குத் தெரியும். அதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து certificate தேவையில்லை. அவரைப் பார்க்க நான் போக வேண்டியதில்லை. நான் காலையில் 6½ மணிக்கு எழுந்து போய்விடுவேன். அவரால் எழுந்து வந்திருக்க முடியாது. அதனால், நான் போனது, போகாதது பற்றி அவருக்குக் கவலையில்லை. நான் வந்தேனா, இல்லையா என்பதை தேர்தல் நேரத்தில் அந்தத் தொகுதி மக்கள் சொல்வார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தனிப்பட்ட விமர்சனங்களை எல்லாம். . . (குறுக்கீடு)

**திரு. எஸ். ரகுபதி:** இல்லை. நான் போகவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடு) நான் அந்தத் தொகுதிக்குப் போகவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடு) நான் தொகுதிக்குப் போகவில்லை என்று சொல்கிறபோது, நான் போனேன் என்பதை நிரூபிக்க வேண்டும் இல்லையா?



2019 ஜனவரி 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பார்க்கவில்லை என்றுதான் அவர் சொன்னார். மின்சாரம் இல்லை என்று சொன்னார். உங்களைப் பார்க்கவில்லை என்று சொன்னார்.

**திரு. எஸ். ரகுபதி:** நான் போனதை அவர் பார்த்திருக்க முடியாது. நான் காலையில் 6½ மணிக்கு எழுந்து போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி சொல்லிவிட்டீர்கள். கவர்னர் உரையில் பேசுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** சரி, நான் உரையை முடித்துவிடுகிறேன். அதாவது, நிவாரணம் கொடுத்ததைச் சொன்னீர்கள். திருமயம் தாலுகாவைப் பொறுத்தவரைக்கும் 42,000 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. 11,000 நபர்களுக்கு நிவாரணம் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், திருமயம் தொகுதி முழுவதும் கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதி. அதாவது வீடு, ஓடு விழுந்தது, சுவர் விழுந்தது மட்டுமல்ல, கும்மிருட்டில் 7 நாட்கள், 10 நாட்கள், குடிக்க, குளிக்க தண்ணீர் இல்லாமல் அந்த மக்கள் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களை பாதிக்கப்பட்டவர்களாக இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா, இல்லையா? அப்படி அவர்களைப் பாதிக்கப்பட்டவர்களாக ஏற்றுக்கொண்டால், அவர்களுக்கு நிவாரணம் தர வேண்டியது அவசியமா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர். நல்ல அனுபவம் உள்ளவர். நீங்கள் சொன்னது உண்மைதான். 11,000 நபர்களுக்கு இதுவரை நிவாரணம் கொடுக்கப்பட்டதை நீங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். இதில் வீடுகள் சேதாரம் அடைந்ததை மட்டும்தான் நீங்கள் சொல்கிறீர்கள். இன்னும் 4,500 நபர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவாக அந்த நிவாரணத் தொகைகளைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வாழ்வாதார நிவாரணம் என்ற பாதிப்பு நிவாரணத்தை இதுவரைக்கும் எந்த அரசும் கொடுத்ததே இல்லை. முதன்முறையாக 8,800 ரூபாய் மதிப்புள்ள வாழ்வாதார நிவாரணத்தைக் கொடுத்த ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த

*நிவாரணம் 27 பொருட்களைக் கொண்டது. ஒரு தாய், ஒரு பிள்ளைக்குக் கொடுப்பதைப்போல் கொடுக்கப்பட்டது. நீங்கள் அதை ஏன் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்? எத்தனை நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியுமா? 16,463 நபர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். நீங்கள் அங்கு இருந்தீர்களா, இல்லையா என்பது விவாதம் இல்லை. நான் அந்த விவாதத்திற்குள் போகவில்லை. அங்கு இருப்பதோ, இல்லாமல் இருப்பதோ என்பது உங்கள் விருப்பம்; மக்கள் விருப்பம். நீங்கள் இரண்டு பேரும், இந்த கஜா புயலைப் பற்றி ஏதாவது கேட்டால், நாங்கள் உங்களுக்கு அதுகுறித்து விளக்கம் சொல்கிறோம். தனிப்பட்ட முறையில் நீங்கள் குற்றச்சாட்டு சொல்வது என்றால், நீங்கள் எழுதி, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். இந்த அவையின் நேரம் மிகவும் முக்கியமானது. நீங்கள் இரண்டு பேரும் மாற்றி மாற்றி பேசிக் கொண்டிருக்க வேண்டாம். கஜா புயலின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் களத்தில் நின்று பணியாற்றியதை, புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கும் ஒட்டுமொத்த மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 3–05*

*நாகப்பட்டினத்தில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் பணியாற்றியதை ஒட்டுமொத்த மாவட்ட மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பணியாற்றியதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்தப் பகுதிகளிலே இருந்து பணியாற்ற வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டதைப்போல மாற்றுத் துணி எடுப்பதற்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு நேரம் தரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தை மீட்டெடுத்த பிறகுதான் வர வேண்டுமென்று சொன்னார்கள். இந்திய வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 30 நாட்கள் பாதிக்கப்பட்ட கிராமங்களிலேயே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தங்கியிருந்து, பணியாற்றிய வரலாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில்தான் இருக்குமே தவிர, வேறு எந்த அரசும் இவ்வாறு பணியாற்றியது கிடையாது. அவர்களும் நிஷா புயல் பாதிப்பைப் பார்த்திருக்கிறார்கள்; கடும் வெள்ளப் பெருக்குகளையும் பார்த்திருக்கிறார்கள்; ஆறுதல் சொல்லியிருக்கிறார்கள்; நிவாரணமும் வழங்கியிருக்கிறார்கள். அதை இல்லை என்று நான் மறுக்கவே இல்லை. ஆனால், ஒரு தாயுள்ளத்தோடு, அர்ப்பணிப்பு உணர்வோடு, பாதிக்கப்பட்ட மக்கள் நம் மக்கள் என்ற உணர்வோடு எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் வழங்கிய உத்தரவை நிறைவேற்றி, அங்கே வாழ்வாதாரத்தை முழுமையாக மீட்டெடுத்து இருக்கிறார்கள். இன்னும் நிவாரணம் வழங்கப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட கால அவகாசம் தேவைப்படும் என்று சொன்னார்கள். நிவாரணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை நாங்கள் மறுக்கவில்லை. குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், குறைகள் சொல்வதாக இருந்தால் ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை நாங்கள் நிவர்த்தி செய்வதற்கு, சரி செய்துகொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது. இதுவரையில் வழங்கப்படாத அளவிற்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அரசின் சார்பாகத்தான் எல்லோரும் தெரிவித்தார்கள். ஒவ்வொரு மாண்புமிகு அமைச்சர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சராக இருக்கட்டும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சராக இருக்கட்டும், ஏன் எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்கூட, டன் கணக்கான அரிசியை பாதிக்கப்பட்ட மக்களுடைய வாழ்வாதாரத்திற்காக பை, பையாக போட்டுக் கொடுத்ததை இன்றைக்கு நாங்கள் இங்கே பதிவு செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மெய்யநாதன் மற்றும் கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் இங்கே பதிவு செய்தார்கள்; அதை மறுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள் திருச்சியிலிருந்து 100 லாரிகளில் நிவாரணப் பொருட்கள் சென்றதாகத் தெரிவித்தார். அதையும் நாங்கள் மறுக்கவில்லை. அரசில் நாங்கள் பொறுப்பேற்றிருந்தாலும்கூட நாங்கள் அரசின் சார்பாக மட்டுமல்லாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏறத்தாழ 200, 300 பணியாளர்களை அங்கே நியமித்து, ஒட்டுமொத்தமாக அனைத்து வீடுகளுக்கும் நிவாரணம் வழங்கினோம் என்பது அந்த மக்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். தேவைகள் அல்லது கோரிக்கைகள் ஏதேனும் இருந்தால் இங்கே முன்வைக்கலாம். அதை நிவர்த்தி செய்து, சரி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2019 ஜனவரி 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த தாயுள்ளத்தைத்தான் கேட்கிறேன். ஏனென்றால் 42,000 பேரில் 11,000 பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 31,000 பேருக்கு வழங்கப்பட வேண்டும். அவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு வாரத்திற்கு மின்சாரம் இல்லாமல் இருட்டில் இருந்துள்ளார்கள். குடிக்கத் தண்ணீர் இல்லாமல், குளிக்காமல் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல முடியவில்லை. இருட்டில் தவித்திருக்கிறார்கள். அந்த வீடுகளில் இருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்றுதான் கேட்கிறேன். பொது மக்கள் நிவாரணப் பொருட்கள் வேண்டித்தான் அங்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல பொன்னமராவதி தாலுகாவைப் பொறுத்தவரையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர் ஒருவர் இருக்கிறார். பாதிக்கப்படாதவர் ஒருவர் இருக்கிறார். இரண்டு பேருக்கும் ஒரே நிவாரணம் வழங்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர், பாதிக்கப்படாதவருக்குக் கிடைத்த நிவாரணம்பற்றி, அதை வழங்கிய அரசைப் பற்றி என்ன opinion சொல்வார்? நிவாரண முகாம்களில் 6.4 இலட்சம் பேர் இருந்தார்கள். அதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் 16,463 பேருக்கு வாழ்வாதாரத்திற்கான நிவாரணத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் பாதிப்பைப் பொறுத்தவரையில், 16,343 பேர் எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அதில் 11,000 பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் கொடுக்கப்படுமே தவிர, பாதிக்கப்படாத ஒருவருக்கு நிவாரணம் வழங்கினோமென்று சொன்னால், அதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 5]

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிப்பு என்பதன் அளவுகோல் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, உங்களுக்கு நான் நிறைய வாய்ப்புகள் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) இல்லையில்லை. அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? ஆளுநர் உரைமீது பேசாமல், பேசியதையே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தால் நான் என்ன செய்ய முடியும்? நான் ஒன்றும் செய்ய முடியாது. சரியாக மூன்று நிமிடங்கள் உங்களுக்குத் தருகிறேன். அதற்குள்ளாக உங்களுடைய உரையை நிறைவு செய்யும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அவை அலுவல்களை முடிக்க வேண்டிவரும். அவ்வளவுதான்.

**திரு. எஸ். ரகுபதி:** மக்கள் படும் துயரத்தில் என்றைக்குமே அவர்களோடு தன்னை இணைத்து, சுய விளம்பரமின்றி, உண்மையான உதவும் எண்ணத்தோடு தன்னை எப்போதும் முன்னிலைப்படுத்திக்கொள்ளும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தலைவர் கலைஞர் அவர்களுடைய அடியொற்றி நடக்கும் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள், கஜா புயல் வீசிய 24 மணி நேரத்திற்குள் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடப் புறப்பட்டார். மக்களைச் சந்தித்தார். புயல் பாதிக்கப்படாத பகுதிகளிலிருந்த கழகத் தோழர்களிடம் புயல் பாதித்த பகுதிகளுக்கு உடனடியாக நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு அன்புக் கட்டளையிட்டார். லாரி லாரியாக நிவாரணப் பொருட்கள் வந்து குவிந்தன.

பிற்பகல் 3–10

அந்த லாரிகளை அறிவாலயத்திலே கொடியசைத்துத் துவக்கிவைத்து, மக்களுக்காக என்றைக்குமே பணியாற்றக்கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில், எங்களுடைய தலைவருடைய பணி அமைந்திருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) பாதிக்கப்பட்ட மக்கள் அத்தனை பேரையும் உடனடியாகப் பல்வேறு மாவட்டங்களிலே முக்கியமான இடங்களுக்குச் சென்று சந்தித்த முதல் அரசியல் தலைவர் எங்களுடைய தலைவர் தளபதி என்பதை நாங்கள் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. எஸ். ரகுபதி] [2019 ஜனவரி 5

இன்னொன்றையும் இங்கே சொல்கிறேன். பாரத ரத்னா விருதுக்காக மாண்புமிகு மறைந்த புரட்சித் தலைவி அவர்களையும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களையும் இந்த அரசு பரிந்துரை செய்கின்றபோது ** பெருந்தன்மையோடு நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போல ** அது அரசியல் நாகரிகமாக அமைந்துவிடும். அந்த நாகரிகத்திற்கு முன்னோட்டமாக நீங்கள் நடந்து காண்பியுங்கள் என இங்கே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் முதன்முதலாக திருச்சி, குளித்தலை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். திருச்சியில் உள்ள பன்னாட்டு விமான நிலையத்திற்கு ** வேண்டுமென்று நீங்கள் நிச்சயமாக பரிந்துரை செய்ய வேண்டும். வரவிருக்கிற மத்திய ஆட்சியிடத்திலும், நாங்களும் அந்தப் பரிந்துரையை நிச்சயமாகச் செய்வோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்ததாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குகின்றபொழுது அங்கே எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை அழைத்துக்கொண்டு சென்று நிவாரணம் வழங்கினால், அதில் ஏதும் தவறா? அரசாங்கம் வழங்காததை நாங்கள் வழங்கினோம் என்று சொல்லப் போகிறோமா, கிடையாது. அதைப்போல திருமயம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் எங்கள் தலைவர் தளபதி அவர்கள் அனுப்பிய அரிசியை இரண்டு இரண்டு கிலோவாக முக்கியமான கிராமங்களுக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பதையும் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். அதைப்போல சைக்கிள் வழங்குவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு நிறைவு செய்யுங்கள். இதோடு நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2019 ஜனவரி 5]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. ரகுபதி, இருக்கிற பிரச்சினைகளைப் பேச வேண்டுமே தவிர, யாரிடத்திலும் எதற்கும் கோரிக்கை வைக்க வேண்டிய அவசியத்தில் திராவிட முன்னேற்ற கழகம் இல்லை. எனவே, அவர் கேட்ட அந்தக் கேள்விகளுக்கும் எங்கள் கட்சிக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, ** எப்பொழுது, எதைச் செய்ய வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், எங்கள் தளபதிக்குத் தெரியும். ஆகையினால் இந்தப் பிரச்சினைகளைப் பொருட்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லை, தேவையில்லை. நீங்கள் சொன்னதைப் பதிவு செய்து. . .

**திரு. துரைமுருகன்:** அது வேண்டாம் என்று நான் சொல்கிறேன்.

**திரு. எஸ். ரகுபதி:** அவைக் குறிப்பிலிருந்து அவற்றை நீக்கிவிடலாம். அதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் சொன்ன கோரிக்கைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இதோடு உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** அடுத்ததாக, ஆளுநர் அறிக்கையில் புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்குவதற்கான அறிவிப்புகள் இல்லை. புதுக்கோட்டை மாவட்டம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திரும்பத் திரும்ப அந்தப் பொருள் குறித்தே பேசுகிறீர்கள். நேரம் இல்லை. உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** அடுத்த சப்ஜெக்ட். கலை மற்றும் அறிவியல் கல்லூரி குறித்துப் பேசுகிறேன். கஜா புயல் குறித்து இப்பொழுது பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமில்லை. உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எஸ். ரகுபதி:** புதுக்கோட்டை மாவட்டத்தில் குறிப்பாக, திருமயம் சட்டமன்றத் தொகுதியில் அதிகமான உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று துவங்கப்பட வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதை நிச்சயமாகப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டு திருமயம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பொன்னமராவதியிலோ, திருமயத்திலோ, அரிமளத்திலோ ஏதாவது ஓரிடத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்கி, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் வசதி பெறுகின்றவண்ணம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 45 நிமிடங்கள் பேசியிருக்க வேண்டும். நிறைவு செய்யாத காரணத்தாலே வேறு வழியில்லாமல் உரை முடிகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (7–1–2019) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3–14 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*18. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜே1)த் துறையின் 22–3–2018 ஆம் நாளிட்ட அரசாணை(நிலை) எண் 40–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.].*

*19. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*





*20. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*21. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ்–ஆங்கிலம்)*

*22. 2013–2014 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆண்டு கணக்குகள். [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*23. 2013–2014 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

--------